நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

இதழ் -179 செப். 02, - செப். 15 - 1999 விலை ரூபா 10. 00


## பொ.ஐ.மு.வின் ஐந்து வருட காட்டாட்சிக்கு ஒரு சடங்கு!







## 'கல்லோயா பொன் விழா' ஆக்கிரமிப்புக்கு அரை நூற்றாண்டு வயது !

## உ தயன்: தாக்கியவர் யாரோ?



நன்றி - நூலகத்திட்டம்



# முட்களை விதைக்காதீர்கள்!

இலங்கை அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்புடையவர்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், நடை-முறையில் அமைச்சர்கள் பலருக்குக் கூட்டுப் பொறுப்பு மாத்திரமல்ல, நாட்டுப் பொறுப்பு கூட இல்லையெனத் தோன்றுகிறது. அரசு ஒன்றைப் பேச அமைச்சர் இன்னொன்று பேசுவார். இதை அமைச்சர்களின் பிழை என்று மாத்திரம் சொல்லி விட முடியாது. நாட்டில் இனப்பிரச்சினை இருக்கிறது. அதிகாரப் பகிர்வு தேவையென்று கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கும் அதே அரசு தான் 'ஒரே நாடு ஒரே மக்கள்' என்ற கோஷத்தையும் முன்வைக்கும் போது அமைச்சர்கள் வாய்க்கு வந்தபடி உளறாமல் என்ன தான் சொல்வார்கள்.

இத்தகைய ஒரு உளறலைத் தான் மாண்புமிகு அமைச்சர் ரிச்சட் பத்திரணகாலியில் இடம் பெற்ற வடக்குத் தெற்கு உறவுப்பாலம் நிகழ்ச்சியில் 'சொல்லிக் கைத்தட்டலுக்காகக் காத்திருக்கிறார். தூங்கிக் கிடந்த பொதியை எடுத்து தூசி தட்டி (தேர்தலில் மக்களை எவ்வாறு ஏமாற்றலாம் என்று) அரசு கரிசனை-யுடன் ஆராய்ந்து கொண்டிருக்கின்ற வேளையில் "இனிமேல் மேல் மொழிவழி, மதவழிப் பாடசாலைகள் இருக்காது. எதிர்காலத்தில் பொதுப் பாடசாலைகளே அமைக்கப்படும்" என்று அமைச்சர் திருவாய் மலர்ந்துள்ளார்.

ஏற்கெனவே வடகிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதி தமிழ்மொழி பாடசாலைகள் பல சேடமிழுத்துக் கொண்டிருக்கின்றன. தமிழ்ப் பாடசாலைகளுக்கு சிங்கள அதிபர்கள் நியமிக்கப்பட்டுக் கொண்டிருக்-கிறார்கள். சிங்களப் பாடசாலைகளுடன் இணைந்தோ அல்லது அதற்கு அருகிலிருந்தோ இயங்கிய பல தமிழ்ப் பாடசாலைகள் பச்சை இனவெறிக்கு உள்ளாக்கப்பட்டு இழுத்து மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றை வைத்துப் பார்த்தால் அமைச்சரின் எண்ணக்கரு ஏற்கெனவே சிங்களப் பகுதிகளில் நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும்?

நாட்டைப்பற்றியோ, மக்களைப் பற்றியோ கவலைப்படாமல் தன்னைப் பற்றியும், தான் பிடித்துள்ள பதவியில் எவ்வாறு தொடர்ந்து தங்குவது என்பது பற்றியுமான சிந்தனையில் வாழ்பவர்களே எமது அமைச்சர்கள். நாடு எக்கேடு கெட்டாலென்ன நாம் கதிரையில் அமர்ந்தாற் போதும் என்பதைத் தவிர இவர்களுக்கு வேறெந்த நோக்கமும் இருப்பதில்லை. மக்களிடம் கைதட்டலும், வாக்கும் பெறுவதற்காக நாட்டை எந்தளவு வேண்டுமானாலும் அழித்துவிட இவர்கள் தயாராகவே இருக்கிறார்கள்.

இத்தகைய போக்கிலே விளைந்தவை தாம் குடியுரிமைச் சட்டங்கள், சிங்களம் மட்டும் சட்டம், பௌத்தத்திற்கு முதலிடம் போன்ற நாட்டை அழிவுக்கு இட்டுச் சென்ற அபாயகரமான திருப்பங்கள் ஆகும். இத்திட்டங்கள் அரசியல்வாதிகளால் தான் முன்வைக்கப்பட்டனவேயொழிய மக்களால் முன்வைக்கப்படவில்லை. அரசியல்வாதிகளின் எண்ணங்களில் உதித்து தயாரிக்கப்பட்ட - இனிப்-பூட்டப்பட்ட இனவாத நியாயங்-களுடன் மக்கள் முன் வைக்கப்-பட்டவை. அரசியல்வாதிகளின் அடிமட்டப் புத்தியை உணராத மக்கள் பின்னணியில் கோஷங்களால் கவரப்பட்டதன் விளைவே நாட்டின் இன்றைய நிலைமை.

தமிழ் மக்கள் மனதில் இரண்டாந்-தரப் பிரஜைகள் என்ற உணர்வலை விதைத்த இந் நிகழ்வுகள் கூட இளைஞர்களைப் போராட்டத்திற்கு இழுத்து விடவில்லை. வளர்ந்தோரின் போராட்டமாகவே அன்றைய தமிழர்களின் போராட்டங்கள் அமைந்திருந்தன. அங்கு அகிம்சையைத் தவிர வெறெந்த ஆயுதமும் இருக்கவில்லை. அகிம்சைக்கு அரச தரப்பிலிருந்து கிடைத்த பதில் இம்சையாகவே இருந்தது.

பல்கலைக்கழக அனுமதியில் ஏற்படுத்தப்பட்ட கொடூரமான மொழிவாரித் தரப்படுத்தல் தான் தமிழ் மாணவர்களைப் போராடத் தூண்டி-யது. எதிர்காலத்தில் நம்பிக்கையிழந்த மாணவர்கள் வீறு கொண்டெழுந்ததன் தாக்கத்தையே இன்று நாடு தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்க மீண்டும் ஒரு தடவை அபாயகரமான பொதுப் பாடசாலைத் திட்டம் பற்றி அமைச்சர் பேசியிருக்கிறார்.

ஆபத்தான விஷயங்களை நடைமுறைக்குக் கொணர்ந்து விட்டு அதனால் ஏற்படும் சிக்கல்களுக்கு அரைக்காசு பெறாத மாற்றுத் தீர்வுகளைச் செய்வதில் எமது அமைச்சர்கள் எப்போதும் கெட்டிக்காரர்கள் தான். கொழும்புக்கு வரும் வடக்கு கிழக்கு வாலிபர்களை கண்டபடி கைது செய்து பயங்கரவாதத் தடுப்பு என்ற போர்வையில் சித்திரவதை செய்து கொண்டு எங்கோ ஒரு ஐம்பதோ நூறோ இளைஞர்களைத் தேடிப்பிடித்து வட பகுதியிலிருந்து தென்பகுதிக்குக் கொண்டு வந்து உபசரித்து விட்டு வடக்குத் தெற்குப் பாலம் போடுகிறோம் என்று கோஷம் போடுவது வேடிக்கையானதல்லவா?

வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் என்ன கடலா இருக்கிறது அவர்கள் பாலம் போடுவதற்கு. இந்த அரசியல்வாதிகள் போட்ட சகதி தானே இருக்கிறது. இவர்கள் வாய்மூடி இருந்தால் கூட சகதிகள் தானாகக் குறைந்து போகும். இருக்கும் சகதியை குறைப்பதற்குப் பதிலாக இவ்வாறான பேச்சுக்கள் மூலம் மேலும் சகதியை அல்லவா உருவாக்குகிறார்கள்.

இங்குள்ள எந்த அரசியல்-வாதியாவது எரியும் இனப்பிரச்-சினையைத் தீர்ப்பார் என எந்தக் குடிமகனும் நம்பவில்லை. எதிர்-பார்க்கவுமில்லை. இனப்பிரச்சினைக்கு முடிவு வந்தால் சொகுசுகளுக்கும் முடிவு வந்து விடும் என்று எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

இந்தக் கடைகெட்ட அரசியல்வாதிகளிடம் மக்கள் சார்பில் சமர்பிக்கும் ஆகக் குறைந்த அளவு கோரிக்கை " மேலும் நாட்டைக் குழப்பாதீர்கள். உங்கள் பிள்ளைகளுக்கு பேரப்பிள்ளைகளுக்கும் முட்களை விதைத்து விட்டுச் செல்லாதீர்கள்" என்பதுதான்.

-திரிபுரன்

# தபாலில் போன சைக்கிள் !

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முயற்சியால் மூதூர்- சம்பூர் பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் சேவையிலீடுபட்டுக் கொண்டிருந்த பஸ்ஸை எடுத்துச் சென்றதையடுத்து சுமார் மூன்று வருடங்களாக இச் சேவை ஸ்தம்பிதமடைந்திருந்தது. தற்போது விடுதலைப்புலிகளுக்கும் இராணு-வத்தினருக்குமிடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்து ஓகஸ்ட் நடுப்பகுதியிலிருந்து மீளவும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஏழு மைல் தூரமுள்ள இச்சேவை மூலம் ஆயிரக்கணக்கான கிராமவாசிகள் நன்மையடைகின்றனர். ஆண்களுக்கு சைக்கிளும், பெண்-களுக்கு மாட்டு வண்டிகளுமே இப்பகுதியில் பிரதான போக்குவரத்துச் சாதனமாக இருந்தன. அன்றாடத் தேவைகளுக்கு மூதூர் நகரை நம்பி வாழும் இம்மக்களின் பெரும் குறை ஒன்று தீர்ந்துள்ளதாக இம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேபோல் மூதூர் - மல்லிகைத்தீவு பஸ்சேவை ஒன்றும் விரைவில் ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்-பார்க்கப்படுகிறது. இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்ததை அடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இதற்கான முயற்சிகளில் இறங்கி-யிருக்கிறது. முயற்சி வெற்றி-பெறுமானால், இரண்டே வாரங்களில் இச்சேவை ஆரம்பமாகக் கூடும்.

இது ஒருபுறமிருக்க யாழ். குடாநாட்டுக்கான தபால் சேவையில் ஸ்தம்பிதம் ஏற்பட்டு விடுமோவென தபால் திணைக்கள அதிகாரிகளே அஞ்சும் அளவுக்கு எங்கள் மக்கள் தங்கள் கெட்டித்தனங்களை காட்டி சாதனை புரிகிறார்கள். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இப்போ-தெல்லாம் கடிதங்களை விட பார்சல்களே அதிகளவில் அனுப்-பப்பட்டு வருகின்றன.

ஒரு பொதியின் அதி உச்ச நிறை 10 கிலோ என திணைக்களம் வரையறுத்துள்ளது. இந்த வரை-யறைகளை எல்லாம் மீறிய வகையிலே தான் பொதிகள் கொழும்பில் இருந்து யாழ் நகருக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. வருமானம் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு முகவர் தபால் நிலையங்கள் தங்கள் இஷ்டம்போல் பொதிகளை எடுத்து அனுப்புகின்ற-போதிலும், அவை திருகோணமலை தபாற் கந்தோரில் உடைத்துப் பார்க்கக் கூடியவை என்பதை தெரிந்து கொள்ளவில்லை.

வாரம் ஒன்றுக்கு திருகோணமலை ஊடாக சுமார் 360 பொதிகள் செல்கின்றன. இவை அனைத்தும் இங்குள்ள தபாற் கந்தோரில் வைத்து கடற்படை அதிகாரிகளால் பரிசீலிக்-கப்படுகின்றன. சந்தேகத்திற்கு இடமானவை உடைத்து பரிசோதிக்-கப்பட்டு மீளவும் பொதியிடப்-படுகின்றன.

கடந்த வாரம் பொதியொன்றினுள் சைக்கிள் அனுப்பப்பட்டு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றது. பி.எம்.எக்ஸ் சைக்கிள் ஒன்று பாகம் பாகமாக கழற்றப்பட்டு பொதியிடப்-பட்டதை கண்ட தபாற் திணைக்கள அதிகாரிகளே திகைத்துப் போனார்கள். கடற்படை அதிகாரிகளின் உத்தரவுக்-கிணங்க இச்சைக்கிள் அனுப்பிய-வருக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இன்னொரு பொதியில் பழைய செருப்புக்களும், தேய்ந்து பிழியப்பட்டு காயவைக்கப்படாத உடுப்புகளும் இருந்தன. வேறு ஒரு பொதியில் அதியுயர் ரக சிகரட்டுக்கள் கட்டுக்கட்டாகக் காணப்பட்டன.

இவற்றைப் பார்த்த கடற்படை அதிகாரிகள் தபாற் திணைக்கள அதிகாரிகளிடம் சொன்ன வாக்கியம் "உங்கட ஆட்கள் சரியான கெட்டிக்காரன்கள் இல்லையா" என்பது தான்.

இந்த கெட்டித்தனங்கள் நேர்மையாக பொதிச்சேவையை பயன்படுத்துவோருக்கு எதிர்காலத்தில் ஊறு விளைவிக்காது என்பதற்கு என்ன நிச்சயம்.

-விவேகி

## வாழ்க்கைப் பிரச்சினை !

ஐக்கிய இலங்கைக்குள் நீதியானதோர் அரசியல் தீர்வு காண முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா ?

அப்படி நம்பிக்கை வைத்திருந்த ஒரு இயக்கம் தான் ரெலோ இயக்கம். ஆனால் அந்த நம்பிக்கை இப்போது மழுங்கடிக்கப்பட்டுவிட்டது - கணிசமான அளவுக்கு.

காரணம் என்னவென்று கேட்கின்றீர்கள் இல்லையா ?

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வந்த இந்தியப் படை போன பின் அரசாங்கத்தின் நிழலின் கீழ் இயங்கவும், சமாதான ரீதியில் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற முழக்கத்துடன் ஜனநாயக நீரோட்டத்தில் கலக்கவும் முன்வந்த இயக்கங்களில் ரெலோவும் ஒன்று.

ஆனாலும் அதன் அந்த நம்பிக்கை இப்போது மழுங்கடிக்கப்பட்டுவிட்டது.

அரசாங்கம் தீர்வுப் பொதியையும், சமாதான முயற்சியையும் கைவிட்டு விட்டு, யுத்தத்தில் தீவிரமாக ஈடுபடுவதாலோ அல்லது இலங்கை அரசின் பௌத்த சிங்களப் பேரினவாதத் தன்மை அப்படி ஒரு சமாதானத் தீர்வை ஐக்கிய இலங்கைக்குள் வழங்க முடியாது என்று அதன் அரசியல் அனுபவ அறிவு கூறுவதாலோ அது இந்த முடிவுக்கு முன்வரவில்லை.

பண்டாரிக்குளத்திலும், உக்கிளாங்குளத்திலும் ரெலோவின் முகாம்களை விசேட அதிரடிப் படையினர் தாக்கியதால் இந்த அறிவு வந்திருக்கின்றது அதற்கு.

அதிரடிப் படையின் இந்தப் போக்குத் தொடர்ந்தால் ரெலோ புலிகளுடன் சேர்ந்து கொள்ளக் கூடத் தயங்கப் போவதில்லையாம்.

இதைச் சொன்னவர் வேறு யாருமல்ல, அதன் தலைவர் என். ஸ்ரீகாந்தா அவர்கள் தான்.

ஆனால் ஒரு கேள்வி.

புலிகளின் நெருக்கடியால் முதலில் இந்தியப் படையுடனும், பிறகு அரசாங்கத்துடன் சேர்ந்தது ரெலோ.

இப்போது அரச படைகளின் தாக்குதலால் புலிகளுடன் கூடச் சேரலாம் என்று அது யோசிக்கிறதாம் - ஸ்ரீகாந்தா தான் சொல்கின்றார்.

எப்போதாவது, யாரோடாவது சேர்ந்து நிற்கத்தான் வேண்டும் என்று யோசிப்பதை விட்டு விடுவோம் - அது அவர்களது வாழ்க்கைப் பிரச்சினை.

ஆனால் இப்போது திரும்பவும் புலிகள் அடித்தால் யாருடன் சேர்வது ?

"அடியைப் போல அண்ணன், தம்பி உதவாது" என்று சொல்வார்கள்.

அதிரடிப் படையின் அடி இப்படிச் சிந்திக்க உதவியிருக்கிறது ரெலோவுக்கு என்று சொல்ல வேண்டும் போல இருக்கின்றது.

ஆனாலும் சொல்வது அவ்வளவு நாகரீகம் இல்லை, இல்லையா ?

## கண்டுவர வேணுமடி.....

"கண்ணன் மன நிலையைத் தங்கமே தங்கம்
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்" என்று பாடியுள்ளார் பாரதியார்.

"புலிகள் மனோ நிலையை" அறிந்து வர வேண்டும் என்று பாடுகிறார் எங்கள் கௌரவ வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

வெளிநாட்டமைச்சர் நிருபர்களது சங்கத்தில் பேசும் போது அவர் இப்படியும் பாடியுள்ளார்.

ஆனால் சில வாரங்களுக்கு முன்பு தான் புலிகளின் மனோ நிலையைத் தெளிவாகவும், துல்லியமாகவும் அறிந்து கொண்டவர் போல அவர் பேசியிருந்தார், புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை என்று.

இப்போது ஏன் இந்தத் திடீர் சந்தேகம் ? அவர்களது மன நிலையைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று இப்போது ஏன் சொல்கிறார்.

ஒரு வேளை அம்மையார் முதலில் பிரபாகரனுக்கு இருந்ததாகச் சொன்ன மன நோய் எல்லாப் புலிகளுக்கும் தொற்றிவிட்டதாக அவருக்கு ஏதாவது தகவல் கிடைத்திருக்குமோ ?

அவரைத் தான் கேட்க வேண்டும் !

## ~~காணாமல் போனவர்கள்~~

## ஓடிப் போனவர்கள் !

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்களை இராணுவ முகாம்களுக்குள்ளும், செம்மணிப் புதை குழிகளுக்குள்ளும் தேடிக் கொண்டிருக்கின்றார்கள் காணாமற் போனவர்களின் உறவினர்கள்.

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுங்கள் எங்கள் அன்புக்குரியவர்களின் எலும்புத் துண்டுகளையாவது பார்ப்போம் என்று அங்கலாய்க்கின்றார்கள் அவர்கள்.

ஆனால் அவர்களுக்கு ஒரு உண்மை தெரியவில்லை.

அந்தக் காணாமற் போனவர்கள் இராணுவ முகாமிலோ, செம்மணிப் புதைகுழிகளுக்குள்ளோ இல்லை.

அவர்கள் புலிகளுடன் ஓடிப் போய் விட்டார்கள்.

காணாமற் போனவர்கள் தொடர்பாகப் பெருமளவான புலிகள் வந்து குவிந்ததை அடுத்து யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக் குழு(JHRC) தான் செய்த நீண்ட ஆய்வுக்குப் பின் இந்த விடயத்தைக் கண்டு பிடித்ததாகக் கூறியதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகின்றது.

ஆக, யாழ்ப்பாணத்தில் தமது பிள்ளைகளையும், கணவர்களையும் தொலைத்தவர்கள் இவ்வளவு காலமாக முட்டாள்தனமாக அரசாங்கத்தையும், அதன் படைகளையும் திட்டிக் கொண்டிருந்திருக்கின்றார்கள்.

புலிகளுடன் ஓடிப் போனவர்களுக்காக அரசாங்கம் வீண் ப்ழி கேட்க வேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

ஆணைக் குழுவின் இந்தக் "கதை"யை வெளியிட்டிருப்பது ஐலண்ட் பத்திரிகை.

இந்தத் தவறுக்குள் இந்தப் பத்திரிகையின் கைச் சரக்கும் சேர்ந்திருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆனாலும் இந்த ஆணைக் குழுவுக்கும் அப்படி ஒரு ஆசை இருக்கின்றதோ என்று சந்தேகிக்காமல் இருக்க முடியவில்லை.

அதை ஒரு தடவை கேட்டுவிடலாம் என்று பார்த்தால் அவர்களுடன் இதை எழுதும் வரை தொடர்பு கொள்ள முடியவில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# மோதல் தொடர்கிறது---

## ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் மீதும் பாய்ச்சல்!


ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, அரசியல் நீரோட்டத்தில் இணைந்து, அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்ற ரெலோ இயக்கத்திற்கும், அரச படைகளுக்கும் இடையே இப்போது முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அண்மைக் காலமாக வவுனியாப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் அரச படைகள் மீது நடத்திய தாக்குதல்களையடுத்து, ரெலோ இயக்க முகாம்கள் மீது அடுத்தடுத்து இரண்டு தடவைகள் படையினர் தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள்.

கடைசியாகக் கடந்த 25 ஆம் திகதி வவுனியா - மன்னார் வீதியில் உள்ள வேப்பங்குளம் பகுதியில் பொலிஸ் நிலை ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கைக் குண்டுத் தாக்குதலில் ஒரு பொலிசார் காயமடைந்த சம்பவத்தை அடுத்து, சுமார் ஒரு மைல் தொலைவில் உள்ள உக்குளாங்குளம் என்னுமிடத்தில் உள்ள ரெலோவின் பிரதான முகாமிற்குச் சென்ற படையினர், அந்த முகாமை முற்றாக எரித்து அழித்துள்ளதுடன், அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்துள்ளார்கள். இதில் காயமடைந்த 05 பேரில் 03 பேரைக் கைக் குண்டுத் தாக்குதல் சம்பந்தமாக விசாரணை செய்வதற்காகப் பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

அனுராதபுர அரசாங்க வைத்தியசாலை வார்டில் சிகிச்சை பெற்றுவந்த தீபன் என்றழைக்கப்படுகின்ற சுப்பிரமணியம் தேவன், வைத்தியசாலையிலேயே காவலில் வைக்கப்பட்டுள்ளார். விமல், மல்லி ஆகிய இரண்டு உறுப்பினர்களும் காயமடைந்து கொழும்பில் வெள்ளவத்தையிலுள்ள டெல்மன் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதன் பின்னர், வெளிநோயாளர் பிரிவிற்குச் சிகிச்சைக்காகத் தமது கொழும்பு அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட வேளையில் பம்பலப்பிட்டி பொலிசாரினால் கைது செய்யப்பட்டு, வவுனியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வெளிப்படையாக இராணுவத்துடன் இணைந்து, விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்படுகின்ற ரெலோவை, வவுனியாவில் இராணுவத்தினரும், குறிப்பாக அதிரடிப் படையினரும் ஏன் விரோதக் கண்கொண்டு பார்க்கின்றார்கள் என்பது தான் பொதுவாக மக்களிடம் எழுகின்ற கேள்வி. வேப்பங்குளத்திலும், பட்டாணிச்சிப் புளியங்குளத்திலும் விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட இரண்டு தாக்குதல்களில் மொத்தமாக 07 பேர் படைத்தரப்பில் காயமடைந்தார்கள். பட்டாணிச்சி புளியங்குளம் கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதலில், இராணுவத்தின் சிறப்புப் படையணியைச் சேர்ந்த 06 சிப்பாய்கள் காயமடைந்தார்கள். வேப்பங்குளம் கைக் குண்டுத் தாக்குதலில் ஒரு பொலிசார் காயமடைந்தார். இந்த இரண்டு தாக்குதலிலும் படைத்தரப்பினருக்கு உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை. இருப்பினும் இந்த இடங்களை அண்டிய பிரதேசங்களில் ரெலோ முகாம்களைத் தேடிச் சென்று, படையினர் தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள்.

வவுனியாவைப் பொறுத்த மட்டில், ரெலோ இயக்கத்திற்கும், புளொட் இயக்கத்திற்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டிருந்தன. இரு தரப்பினரும் தாக்குதல்களில் மாறி மாறி ஈடுபட்டதில், பலர் கொல்லப்பட்டார்கள். கோவில்குளம் பகுதிகளில் அடுத்தடுத்து இடம் பெற்ற கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்துவதற்கு ரெலோ இயக்கத்தினரே புலிகளுக்கு உதவியாக இருந்தார்கள் என்று புளொட் இயக்கத்தினர் வெளிப்படையாகவே குற்றம் சாட்டி வருகின்றார்கள். இதனை ரெலோ முற்றாக மறுத்துள்ள போதிலும், இந்த வகையிலேயே இராணுவத் தரப்பினரும், ரெலோ இயக்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாகக் கருதுவதாகத் தெரிகின்றது.




ஆயினும், ரெலோ இயக்கத்தினர், இராணுவத்தின் துணைப் படைக்குத் தமது உறுப்பினர்களைக் கொடுத்து, விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டு உதவாத காரணத்தினாலும், பாராளுமன்றத்தில், அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களிக்காத காரணத்தினாலுமே தமது உறுப்பினர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதாக டெலோ இயக்கத்தின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய அடைக்கலநாதன் செல்வம் தெரிவிக்கின்றார்.

இவ்வாறான தாக்குதல்களின் மூலம் தம்மை அரசாங்கம் தனது விருப்பத்திற்குப் பணிய வைக்க முடியாது என்றும், தமது கட்சி மேற்கொள்கின்ற சுதந்திரமான முடிவுகளின்படியே தாங்கள் செய்ற்பட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தமது உறுப்பினர்கள் மீது அரச படைகள் தாக்குதல் நடத்துவதானது, தம்மை 1983 ஆம் ஆண்டு நிலைக்குத் தள்ளுவதற்கே உதவும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட்டம் நடத்தி வந்த வேளையில், இனப் பிரச்சினையில் தலையிட்டுத் தீர்த்து வைக்க முயன்ற இந்தியாவின் கூற்றுக்கு ஏற்ப, தமிழ்க் குழுக்கள் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொண்டன. ஆனாலும், தனித்து நின்று தொடர்ந்தும் ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகின்ற விடுதலைப் புலிகளை இல்லாமல் செய்யும் முயற்சியில், தமிழ்க் குழுக்களை அரசாங்கம் முழுமையாகப் பயன்படுத்த முனைகிறது. இவ்வாறான அரசின் தந்திர நடவடிக்கையால் ஏற்பட்ட நெருக்கடியில் படையினரின் வெளிப்பாடே ரெலோ மீதான இந்தத் தாக்குதல்கள் என்றும் பலரும் கருதுகின்றார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடுவதற்குத் தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளும் முயற்சியை இராணுவம் மேற்கொண்ட போதிலும், அது வெற்றியளிக்கவில்லை. மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களில் தமிழ் இளைஞர்களை இராணுவத்திற்குத் (திருடுவதற்கு?) திரட்டுவதற்குப் பல தடவைகள் இராணுவம் முயற்சிகளை மேற்கொண்டது. எனினும் அது கைகூடவில்லை.

இதனையடுத்து, இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக, இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழுக்களை இராணுவத்தின் துணைப் படையாகச் சேர்த்துக் கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் சரிவரவில்லை. இதனால் ஆத்திரமுற்ற நிலையிலேயே, ரெலோ மீதான தாக்குதல்களை இராணுவம் தொடங்கியுள்ளதோ என்னும் சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.



கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் செட்டிக்குளத்தில் இருந்து அவரந்துலவ என்ற இடத்தில் உள்ள பொலிஸ் நிலையத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த பொலிஸ் ஜீப் வண்டி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதலில் ஒரு இன்ஸ்பெக்டர் உட்பட 04 பொலிசார் கொல்லப்பட்டார்கள். ஒரு சப் இன்ஸ்பெக்டர் காயமடைந்தார். சம்பவ இடத்தில் வீதியில் சிறிய பாலம் ஒன்றை அமைப்பதில் ஈடுபட்டிருந்த 03 சிவிலியன்களும் காயமடைந்தார்கள். இவர்களில் இருவர் அருகில் உள்ள வீரபுரம் பிள்ளையார் கோவிலுக்கு இரத்தம் சொட்டச் சொட்ட ஓடிச் சென்றபோது, அங்கு கோவில் பூசையில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் காயமடைந்தவர்களை மோட்டார் சைக்கிள்களில் ஏற்றி, செட்டிகுளம் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்கள். வைத்தியசாலைக்கு வந்து பார்வையிட்ட பொலிசார், காயமடைந்தவர்களையும், ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்களையும் தாக்கியதுடன், மறைவாணன் என்ற இயக்க உறுப்பினரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் விடுதலை செய்துள்ளார்கள்.

இதே வேளையில், கிளைமோர் கண்ணித் வெடித் தாக்குதல் பற்றிக் கேள்வியுற்ற சில ஈ.பி. ஆர்.எல்.எவ். இயக்க உறுப்பினர்கள் தாக்குதல் நடைபெற்ற இடத்திற்குச் சென்றுள்ளார்கள். அப்போது அங்கு வந்த பொலிசார் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், வில்வராஜா என்ற உறுப்பினர் கொல்லப்பட்டுள்ளார்.

கண்ணி வெடிச் சம்பவத்தில் கொல்லப்பட்ட பொலிசார் நால்வரின் சடலங்களுடன் வில்வராஜாவின் சடலத்தையும் பொலிசார் வவுனியாவுக்குக் கொண்டு சென்றார்கள். அத்துடன், அங்கு சடலங்களைப் பார்வையிடுவதற்காக வருகை தந்த நீதிவானிடம் கொல்லப்பட்ட வில்வராஜா கண்ணி வெடித் தாக்குதலை நடத்த வந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் எனக் கூறி, அவரிடமிருந்து கைப்பற்றியதாகக் கூறித் தண்ணீர் கான்கள், கைக் குண்டுகள் என்பவற்றையும் காட்டியுள்ளார்கள்.

ஆயினும், வைத்திசாலைக்கு வில்வராஜாவின் சடலத்தை அடையாளம் காட்டுவதற்காகச் சென்றிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள், வில்வராஜா தமது கட்சி உறுப்பினர் என்றும், அவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்றும் எடுத்துக் கூறி, பொலிசாரின் நடவடிக்கை முயற்சிகளுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருந்து உச்சக் கட்டப் பாதுகாப்பு உள்ள இடங்களில் இராணுவத்தினர், பொலிசார் மீது நடத்தி வருகின்ற தாக்குதல்களில், பொது மக்கள் காயம் அடைகின்றார்கள். அதேபோல, பல அப்பாவிகள் உயிரிழப்பதும் நடைபெற்று வருகின்றது. இதே வேளையில், புலிகள் தாக்குதல் நடத்துவதற்கு ரெலோ உதவி செய்து வருகின்றது என்ற அனுமானத்தில் தாக்குதல் நடத்தி வருவதும், இப்போது, ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினரைச் சுட்டுக் கொன்றது மட்டுமல்லாமல், அவரைப் புலி உறுப்பினர் என்று காட்டுவதற்கு மேற்கொண்ட முயற்சியும் தமிழர்கள் என்றால், அனைவரும் புலிகளே என்ற பெரும்பான்மைத் தனமான சிந்தனை வெளிப்பாட்டைத் தெளிவாகக் காட்டுவதாகவே அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

இந்த நிலையில், இந்த அரசாங்கத்திற்கு வால் பிடித்து, அற்ப சுகங்களுக்காகத் தமிழ்க் குழுக்கள் செயற்பட்டு வருவது சுய மரியாதையற்ற செயலாகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்வார்களா?

- துரையன்

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் மக்கள் சொல்வதென்ன?

நீண்ட காலமாகத் தமிழ் மக்களுடைய விருப்பங்களையும், ஆசைகளையும் அறியாதவர்களும், தெரியாதவர்களுமே தமிழ் மக்களின் விருப்பங்களைச் சிங்கள மக்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். "புலிகளிடம் இருந்து எங்களை விடுவியுங்கோ" என்று தமிழ் மக்கள் தங்களிடம் கேட்பதாக இந்த அரசு கூறிக்கொண்டு, இதை தென்னிலங்கை சிங்கள மக்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சொல்லிக் கொண்டு, வெளிநாடுகளில் இருந்து குண்டை வேண்டிவந்து தமிழர்களின் தலையிலே போட்டுக் கொண்டிருக்கின்றது. உண்மையில் "எதையும் அறியாமல் கதையாதே" என்று கிராமிய மக்கள் கூறுவர். இந்த அரசாங்கமும் இவ்வளவு காலமும் எதையும் அறியாமலே ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்திருக்கின்றது. இதை இன்னமும் விளக்கமாக அண்மையில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் "இன்னமும் புலிகளின் மனதைப் புரிந்து கொள்ள முடியவில்லை" எனக் கூறியிருக்கின்றார். எனவே இவ்வளவு காலமும் தமிழர்களுடைய மனதையும், புலிகளின் மனதையும் அறியாமலே சமாதானத்துக்கான வேலைகளை செய்திருக்கின்றோம் என்பதைத் தெளிவாகக் கூறியிருக்கின்றார் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர். உண்மையில் யுத்தம் வேண்டாம் என்று கூறுகின்ற அமைப்புக்களும், சமாதானத்துக்குப் பேச்சுவார்த்தை நடத்த வேணும் என்று கூறுகின்ற அரசும் ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டும். யுத்தத்துக்கான காரணிகள் என்ன? யுத்தம் ஏன் நடக்கின்றது என்பதையும், என்ன நடந்தால் சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் என்பதையும் புரிந்து கொண்டால் மாத்திரமே இந்த நாட்டில் சமாதானம் கிட்டும்.. இதை அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களுக்கு மிகவும் தெளிவாக இங்குள்ள மக்கள் கூறியிருக்கின்றார்கள். இங்குள்ள மக்களின் விருப்பங்களையும், பிரச்சினைகளையும் தென்னிலங்கைச் சிங்களப் பத்திரிகையாளர்களும் அறியவேண்டும் என்றும், இது தென்னிலங்கை மக்களுக்குச் சென்றடையும் என்ற நோக்கோடே தேசிய சமாதானப் பேரவையும், அர்ங்கச் செயற்பாட்டுக் குழுவும் இணைந்து இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தன. உண்மையில் இது ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும். ஏறாவூர்பற்று, கோறளைப்பற்று, வாகரை போன்ற பகுதிகளில் உள்ள மக்களை இவர்கள் சந்தித்தனர். இந்தச் சந்திப்புக்களின்போது நானும் ஒரு சாதாரண மனிதனைப் போன்று அவதானித்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இதில் நான்கு விடயங்கள் சிங்கள மக்களுக்கும், சிங்கள அரசுக்கும் பத்திரிகையாளர் மூலமாகச் சொல்லப்பட வேணும் எனத் தெளிவாகக் கூறப்பட்டது.

01. வடக்குக் கிழக்கு எங்களுடைய பிரதேசம்.
02. எங்கட பிரதேசத்தில் இராணுவம் வேண்டாம்.. இவர்கள் இங்கு இருக்கிறதாலதான் நிம்மதி இல்லாம பயத்தோட வாழ்றம்.
03. புலிகள் இராணுவத்திடம் இருந்து எங்களைப் பாதுகாக்கின்றார்கள்.
04. புலிகளோடு பேசித் தான் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

இந்த விடயங்கள் சென்ற கிராமங்களில் எல்லாம் மிகவும் அழுத்திக் கூறப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கோரளைப்பற்று, கிரான் என்ற இடத்தில் கருங்காலியடிச்சேனை என்ற கிராமத்துக்குச் சென்றிருந்தோம். அங்கே இருந்த கூட்டத்தில் 30க்கும் மேற்பட்ட பெண்கள் இருந்தனர். இதில் 21 பெண்கள் விதவைகள். இவர்களுடைய கணவர்களையும், பிள்ளைகளையும் இராணுவத்தினரே அழித்தொழித்திருந்தனர். இதிலிருந்த விதவைப் பெண் ஒருவர் குறிப்பிடுகையில் "பொன் கொழிக்கும் இந்த பூமியில குரங்குக் குட்டிய வயித்தில கட்டித்துத் திரியிறதுபோல எங்களையும், எங்கட வாழ்க்கையையும் அலையவிட்டுப் போட்டாங்களே. இவர்கள் எங்கஞ்க்கு வேணாம். இவர்களைப் போகச் சொல்லுங்கோ. நாங்க . உங்கட சோத்தில மண்ணள்ளிப் போடல்ல. நீங்க ஏன் எங்களை நாசப்படுத்துறீங்க" என அந்த அம்மா விம்மி விம்மி அழுதார். "இராணுவம் போகாவிட்டால் நாங்கள் எல்லாரும் போராட வேண்டி ஏற்படும். எங்கட காசை எடுத்து ஆயுதம் வேண்டி எங்களுக்கே சுடுறீங்க. எங்கள்ட்ட அப்படி இல்லை. குசினியில இருக்கிற கத்தியை எடுத்தேனும் பயன்படுத்த நேரிடும். இனியும் நாங்க எங்கட பூவையும், பொட்டையும் இழக்கத் தயாரில்லை" என்று ஒரு நடுத்தர வயது அம்மா ஆவேசமாகச் சொல்ல, இன்னொரு அம்மா எங்கட பிள்ளைகளை எல்லாம் "போராடப் போ" உயிரோட இருந்தால் சந்திப்பம் என்று சொல்ற காலம் நெருங்கி விட்டது. எங்கட கண்முன்னால எங்கட பிள்ளயளை அடிக்கிறதையும், சுடுறதையும் பார்க்க முடியல்ல. அதால எங்கண்ட பிள்ளையள ஆசீர்வதித்துப் போராட அனுப்ப வேண்டி இருக்கு என்று கூறினார்.



ஷெல் விழுந்து வெடித்ததால் முகம் பாதிக்கப்பட்ட இளம் பெண்


உங்கட பகுதியில இராணுவத்தோடு நிம்மதியாக இருப்பதுபோல எங்கட இடத்தில நாங்களும் எங்களுக்காகப் போராடுறவங்களோட நிம்மதியாக வாழுவம் என்று, இராணுவம் போனால் புலிகளுடன் இருக்க முடியுமா என்று கேட்ட பத்திரிகையாளருக்குப் பதில் கூறப்பட்டது. கொழும்பில் குண்டு வெடிப்பதும், தலதா மாளிகைக் குண்டு வெடிப்புத் தொடர்பாகவும் கேட்டபோது, கொழும்பில் குண்டு வெடிப்பது சிங்கள மக்களைக் கொல்வதற்கல்ல, சிங்கள மக்கள் எங்களுக்கு எதிரியுமல்ல, சிங்கள மக்கள் எங்களின் எதிரியுமல்ல. எங்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்த அரசாங்கமும், இராணுவமுமே எங்களுக்கு எதிரி. இங்குள்ள எத்தனையோ புனித ஆலயங்கள் இராணுவத்தினரால் தகர்க்கப்பட்டிருக்கு. 12 வருடத்துக்கு ஒரு தடவைதான் கும்பாபிஷேகம் எங்கட கோயில்ல நடக்கிறது. ஆனால் இராணுவம் சப்பாத்துக் காலுடன் மூலஸ்தானம் வரை சென்று வாறாங்க. இண்டைக்கும் கூட (24.08.99) இராணுவம் சித்தாண்டிக் கோயில் கோபுரத்தில் சப்பாத்துக் காலுடன் ஏறி குண்டு தேடினார்கள். இவைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியவில்லையா என இளைஞன் ஒருவன் கேட்டான். இன்றைக்கும் நான் றோட்டால வரக்குள்ள இராணுவம் நிப்பாட்டி என் காற்சட்டையை உரிந்து பார்த்தான். நான் ஏன் இவர்களுக்கெல்லாம் உரிந்து காட்டணும். சொல்லவே எனக்கு வெட்கமாக இருக்கு என மேலும் கோபத்தோடு கூறினார். கும்பிளிப்பிட்டியான்மடு என்ற கிராமத்துக்குச் சென்று பார்த்த போது அங்கு இராணுவக் கொடுமையின் எச்சங்களைத் தான் காணக் கூடியதாக இருந்தது. வீடுகள் எரிந்தும், "ஷெல்" பட்டுக் கால் உடைந்ததையும், முகத்தில் வெடிப்பட்டு முகம் பார்க்க முடியாத நிலையும் தான் இருந்தது. அங்குள்ள ஒரு பெண் குறிப்பிடுகையில் "ஷெல் வந்து விழுந்து வெடித்து, வெடித்து இந்த நிலம் கூட நஞ்சாகிப் போயிற்று. இந்த இடத்தில பயிர் கூட நல்லா வருவதில்ல" என தனது எரிந்த வீடு இருந்த இடத்தைக் காட்டி அழுதார். மறுநாள் ஏறாவூர்பற்றிலுள்ள களுவன்கேணி என்ற இடத்துக்குச் சென்றோம். அந்த இடம் புலிகள் வந்து போகின்ற இடம். முற்றுமுழுதாகப் புலிகளின் கட்டுப்பாடுமல்ல, இராணுவத்தின் கட்டுப்பாடுமல்ல. அந்தக் கிராமத்தில் இராணுவத்தாலும், ஏனைய தமிழ்க் குழுக்களாலும் (குறிப்பாக ராசிக் குழு) படும் துன்பங்களைக் கூறினர். புலிகள் உங்களுக்கு ஒன்றும் செய்கிறதில்லையா? என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்டதுக்கு "இங்கு வாற இராணுவத்தில் இருந்து எங்களைப் புலிகள் பாதுகாக்கின்றார்கள்", உணவுப் பொருட்கள் முதல் படிக்கிறதுக்குக் கொப்பி வேண்டித்தாரது வரையும் அவர்கள் தான் செய்கிறார்கள். அரசாங்கம் புத்தகங்களைத்தான் தருகுது. ஆனால் புலிகள் கொப்பி, பென்சில் முதல் ஆய்வு கூடப் பொருட்கள் வரையும் தந்து பாடசாலை அனுப்பும் வரையும் எங்களில் அக்கறை காட்டுகின்றார்கள். தமிழ்க் கட்சிகள் ஒன்றும் வந்து உங்களைக் கவனிப்பதில்லையா என்று கேட்டபோது, அவங்கள நாங்க இங்க "பேத்த கண்டு குட்டியள்" என்று தான் சொல்லுவம். அவங்கள கணக்கில எடுக்கிறல்ல என்று ஒருவர் கூறினார். என்ன தந்தால் பிரச்சினை தீரும் என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்டதுக்கு 50 வயது மிக்க ஒருவர் எங்களுக்கு "தமிழீழம் தான் வேணும்" என்று சொன்னார். தமிழீழத்தை விடக் குறைந்த தீர்வுக்குப் பிரபாகரன் ஒத்துக் கொண்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்டதுக்கு "எங்களுக்காகப் போராடுகிற ஒரே ஒரு தலைவன் பிரபாகரன். அவர் எடுக்கிற முடிவுக்கு நாங்கள் தயார்." என அழுத்தமாகக் குறிப்பிட்டார். இதேவேளை அங்கு இரு "புலி" உறுப்பினர்களும் பிரசன்னமாயிருந்தனர். அவர்களிடம் உங்களைப் பத்திரிகையாளர்கள் சந்திக்க விரும்புகின்றனர் என ஏற்பாட்டாளர்கள் கேட்ட போது, "நாங்கள் இதில் கதைக்கல்ல. நாங்கள் சொல்லுவதை விட மக்கள் சொல்லுவது தான் பலம். சிங்கள மக்கள் எங்களுக்கு எதிரிகள் அல்ல. அவர்களையும் நாங்கள் நேசிக்கின்றோம் என்ற இரு விடயங்களையும் ஏற்பாட்டாளர்களுக்கூடாகப் பத்திரிகையாளர்களுக்குச் சொன்னர்கள். இவ்வாறாக அந்த மக்களிடம் இருந்து பல்வேறுபட்ட கேள்விகளுக்கு விடை கண்டனர். இங்கு வருகை தந்திருந்த பத்திரிகையாளர்களில் அனேகமானோர் அரச . பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இவர்களின் கேள்விகள் அனைத்தும் புலிகளைப் பயங்கரவாதிகள் எனவும், இனவாதிகள் எனவும் காட்டுகின்ற நோக்குடையனவாகவே அமைந்திருந்தன. அதுமட்டுமல்லாமல் சிங்களப் பெரும் தேசியவாதத்தை முதன்மைப்படுத்தி அதுக்குள்ள நின்று அதாவது ஐக்கிய இலங்கைக்குள்தான் பிரச்சினைத் தீர்க்கப்பட வேண்டும் என்ற மாதிரி எல்லாம் கேள்விகள் அமைந்திருந்தன. உதாரணமாக இராணுவத்துடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டால் வாழ இயலாதா, மகாசேனன் ஆட்சிக்காலத்தில் புத்தரின் தந்தத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு தமிழரிடம் தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்றெல்லாம் கதைகள் கூறப்பட்டன.



கலந்து கொண்ட மக்கள்

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள் எந்த நிர்ப்பந்தமும் இன்றிக் கதைக்க விடப்பட்டிருந்தனர். ஆயினும் புலிகளுக்கு எதிராகவோ, அவர்களால் தமக்கு இடைஞ்சல் இருப்பதாகவோ சொல்லவில்லை என்பது தென்னிலங்கைப் பத்திரிகை யாளருக்கு ஜீரணிக்க் முடியாத ஒரு விடயமாகவே இருந்திரக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் உண்மை நிலை அப்படித்தான் இருந்தது. புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று கோரிய இம் மக்கள் அனைவரும் புலிகளுக்கு ஆதரவாகவே பேசினார்கள் என்ற தகவலை தெற்கிலுள்ள அரசியல் வாதிகள் புலிகளைச்சந்தித்து விட்டு வந்து எழுதிய தகவல் என்று புறக்கணித்து விடலாம்.

அப்படியானால் அவர்கள் சந்தித்த முழு மக்கயையும் புலிகளே என்று தான் சொல்ல வேண்டியிருக்கும் .



தீக்கிரையாக்கப்பட்ட வீடு

எது எப்படியானாலும் அரசு தரப்பு இந்தப் பக்கத்தைக் கணக்கிலெடுக்காமல் புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபடுவதால் சனநாயகத்தினை மட்டுமல்ல, அரசியல் தீர்வு நடவடிக்கைகளையும் கூட நடைமுறைப் படுத்த முடியாத நிலையே தோன்றும். ஆம். வெறும் கவர்ச்சியான எட்டாக்கனிகளாகவே போய்விடும்.!

- ஜே.கே.வீ

நன்றி - நூலகத்திட்டம்



# 'கல்லோயா பொன் விழா'

## ஆக்கிரமிப்புக்கு வயது அரை நூற்றாண்டு!

- இறக்காமம் றவூப்"

'இதழ்களில்முகிழும்புன்னகையும்

இதயங்களில் தவழும் புளகாங்கிதமும்

நமது ஆற்றாமைக்கு சொல்லிக் கொள்ளும்

ஆசுவாசங்கள்.

தோல்விகளை, துயரங்களை மூடிமறைக்க

நாம் கண்டு பிடித்த ஆறுதல் ஆயுதங்கள்'

கடந்த 27, 28, 29 ம் திகதிகளில் அம்பாறை நகரமும் கல்லோயாப் பள்ளத்தாக்கும் பெரும் விழாக் கோலம் பூண்டிருந்தது. கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளும் கோலா-கலமாகக் கொண்டாடப்பட்டன. பிரதம அதிதியாக அமைச்சர் ரத்வத்த உட்படப் பல அமைச்சர்களும் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் கலந்து கொண்டு சமாதானம் பற்றியும் இனசௌயன்யம் குறித்தும் 'சரமாரியாக' உரையாற்றி-னார்கள். இதன் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல். எம் முஹைதீன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க இன்னொரு விடயமாகும்.

தேசிய இனங்களின் நியாயமான சுய நிர்ணய உரிமையைச் சிதைப்-பதற்கு பதினாறாம் நூற்றாண்டுகளின் இறுதிக் கூறுகளிலேயே ஆதிக்க சக்திகள் கண்டு பிடித்த அரசியல் தந்திரோபாயமே கலாசார சமூக, பண்பாட்டு, மொழியியல் கூறுகள் செல்வாக்குச் செலுத்தும் பிராந்தி-யங்களின் மக்கள் பலத்தைத் தகர்ப்பதற்கு தான் சார்ந்திருக்கும் சமூகக் குழுமத்தைக் குடியேற்று-ளவதாகும். மத்தியாசிய தற்போதைய இஸ்லாமியக் குடியரசுகளின் மீதான ஸ்டாலினின் அப்போதைய குடியேற்றக் கொள்கை உள்ளிட்ட இன்றைய இஸ்ரேல், யூகோஸ்லாவியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் இவ்வுண்மையை உறுதி கூறி நிற்கின்றன. இது இலங்கையில் 1949ல் இருந்தே கால்கோளாயிற்று எனலாம்.

சுதந்திரத்துக்கு முன்னர் டொனமூர் அரசியல் அமைப்பின் கீழ் காணி-விவசாய அமைச்சராக இருந்த ஸ்ரீபன் சேனநாயக்க சிங்கள மக்களை இந்நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தாரம் செய்ய வேண்டும் என்ற கொள்கையுடன் பல்வேறு நீர்பாசனத் திட்டங்களையும் அதன் கீழ் இராட்சதக் குடியேற்றத் திட்டங்களையும் அமுல் படுத்தினார். டி.எஸ் சேனாநாயக்க அவர்கள் காலக் கருத்திட்டங்கள் திட்டமிட்டு சிங்களவர்களை தீவு-மயப்படுத்துவதையும் அதன் மூலம் பெரும்பான்மையாக தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்த பிராந்-தியங்களின் ஆட்புலங்களை பௌத்த-மயப்படுத்தி விடவுமே மேற்கொள்-ளப்பட்டதா அல்லது சூழ்நிலை அழுத்தங்களுக்கு முகங்கொடுத்த டீ.எஸ்யின் தெய்வாதீனமான செயலா என்பதில் இது திட்டமிடப்பட்டது என்பது வாதப்பிரதிவாதங்களைக் கடந்த ஒரு யதார்த்தமாகும். கலாநிதி ராஜனி திரணகம தனது கட்டுரையில் தெரிவித்திருக்கும் ஒரு கருத்து இங்கு மீளாய்வுக்குரியது.

'டி.எஸ் சேனநாயக்க சிங்கள அதிகாரத்தைக் கொண்டு வருவ-தற்கான கடுமையான தமிழ் எதிர்ப்புச் சதி ஒன்றில் ஈடுபட்டார் என்று கூறுவது பெரும்பாலும் தவறாகும். அதேபோல சேனநாயக்கா, தமிழ் பிரதேசங்களில் சிங்களவர்களை குடியேற்றுவதற்கு சம கொடுரமான பெரும் திட்டத்தை உருவாக்கினார் என்று குற்றஞ்-சாட்டுவதும் முழு உண்மையாகாது. கிழக்கு மாகாணத்திலே கல்லோயாக் குடியேற்றத் திட்ட வேலை,பூர்த்தியான போது அந்த மாகாண மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. ஏறக்-குறைய ஆறு மாதங்களுக்குப் பின்னேரே உள்ளூர் விண்ணப்பதாரிகள் மிகக் குறைவாக இருந்த போது ஏனைய மாகாணங்களின் விண்ணப்ப-தாரர்களுக்கான கதவுகள் திறந்து விடப்பட்டன.' (முறிந்தபனை 02)

மேற்படி திரணகமவின் கூற்று பல்வேறு கோணங்களில் மீள்பரிசீல-னைக்கு உட்பட்டது. ஏனெனில் சேனநாயக்காவின் இத்தகு குடியேற்றத் திட்டங்கள் அகஸ்மாஸ்தானது என்பதை ஏற்றுக் கொள்வது சிரமமானது என்பதற்கான நியாயம், தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்த பிரதேசங்களினை விடுத்து பல வெற்றுப் பிராந்தியங்கள் இருந்தன. இருந்தும் 1936இல் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட பாவற்குளக் குடியேற்றத் திட்டம் 1938இல் திரு-மலையில் ஏற்படுத்-தப்பட்ட கந்தளாய்த் திட்டம் 1949இல் கிழக்கில் உருவாக்-கப்பட்ட கல்லோயா குடியேற்றத் திட்டம். என்பன முற்றிலும் தமிழ் பேசும் மக்களின் நிலங்களிலேயே அமையப் பெற்றி-ருக்கின்றன. அது மட்டு-மல்ல கல்லோயாக் குடியேற்ற வேலை பூர்த்தியான பின் அம் மாகாண மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தால் குறைந்தபட்ச சிறுபான்மையினராவது கல்லோயாப் பள்ளத்தாக்கில் குடியே-றியிருக்க முடிந்திருக்கும். ஆனால் இன்றைய நிலையினைக் கூர்மையாக அவதானிக்கும் எவருக்கும் இது ஒரு திட்டமிட்ட கைங்கரியம் என்பது புலனாகும்.




இனி பொன் விழாக்காணும் கல்லோயாப் பள்ளத்தாக்குக்கு வருவோம். பதுளை மாவட்டத்திலுள்ள மடுசீம மலைத்தொடரில் ஊற்றெடுத்து பள்ளத்தாக்கு வழியே 56 மைல் ஓடி வங்காள விரிகுடாவில் கடலில் விழுந்து கொண்டிருந்த பட்டிப்-பாளையாற்று நீர்ப்பாசனத்தை கிங்கினியாகல எனும் இடத்தில் மறித்துக்கட்டி ஒரு பெரும் நீர்த்தேக்கமாக மாற்றும் நடவடிக்கை 1949 ஒகஸ்ட் 29இல் ஆரம்பமானது இன்று இது டி.எஸ்.சேனநாயக்க சமுத்திரம் எனப்படுகின்றது. அன்றைய காலப்பகுதியில் இப்பிராந்தியத்திலிருந்த விவசாயக் காணிகளுக்கான போதிய நீர் வசதியின்மையே இத்திட்டத்-துக்கான காரணம் எனக் கூறப்-பட்டது. எனினும் பேரின சமூகத்தை பரவலாகக்குவதன் மூலம் சிறுபான்மையினரது மக்கட்பலத்தை குறைத்து பாராளுமன்ற அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைந்த-பட்சமாக மாற்றுவதே இதன் மறைமுக நோக்கமாக இருந்தது.

சுதந்திர இலங்கையின் முதலாவது தேர்தலின் போது கிழக்கில் திருமலையை விடுத்து மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில் ஆகிய நான்கு தொகுதிகளே இருந்தன. ஆனால் 1961இல் மட்டக்களப்பின் தென்பகுதியும் பதுளையின் ஒரு சில பகுதிகளையும் இணைத்து அம்பாறை (திகாமடுல்ல) என்றொரு தனி மாவட்டம் உருவாக்கப்படுவதற்கும் அதனைத் தொடர்ந்து அம்பாறையில் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழ்ந்தும் இன்று அது சிங்களவர்களின் மேலாதிக்கத்துக்கு உட்படுவதற்கும் மூல காரணமாக அமைந்தது இந்தக் கல்லோயாத் திட்டமேயாகும்.

கல்லோயாத்திட்டத்தின் மூலம் 40 சிங்களக் கிராமங்கள் 1960களிலேயே உருவாக்கப்பட்டன. மாத்தறை காலி, ஹம்பாந்தோட்டை, கேகாலை, குருநாகல் ஆகிய மாவட்டங்-களிலிருந்து 15,000க்கு மேற்பட்ட குடும்பங்கள் இங்கு குடியேற்றப்பட்டன. குடியேற்றத் திட்டத்தில் அனைத்து சமூகங்களும் சமவுரிமை என்றிருந்-திருப்பின் ஏன் அங்கு ஒரு தமிழ் கிராமமோ முஸ்லிம் கிராமமோ உருவாக்கப்படவில்லை என்ற கேள்விக்கு பேரினவாதிகள் என்ன பதில் சொல்லப். போகிறார்கள்?

1985ஆம் ஆண்டு வரை இலங்கையில் முஸ்லிம்கள் பெரும்-பான்மையாக வாழ்ந்த ஒரு மாவட்டம் அம்பாறை என்பதை வரலாறு அறிந்த எவரும் நிராகரிக்க முடியாது.

ஏனெனில், அம்பாறை தனி மாவட்டமாக உருவாக்கப்படுவதற்கு முன்னமே கல்முனை, பொத்துவில் ஆகிய தேர்தல் தொகுதிகளில் பெரும்பான்மையினராக முஸ்லிம்-களும் மட்டக்களப்பு தொகுதியில் கணிசமான முஸ்லிம்களும் வாழ்ந்-தார்கள். மட்டக்களப்புத் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக சின்ன லெப்பையும் கல்முனைத் தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.காரியப்பரும் பொத்துவில் தொகுதிக்கு இப்றாகிம் பொறியியலாளரும் இருந்திருக்கிறார்கள். இதற்குப் பின்னர் 1961இல் பேரினவாதிகளால் அம்பாறை உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும்பான்மையினராக இங்கு முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள். எனினும் டி.எஸ்.சேனநாயக்காவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. பாரா-ளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் இப்-பிராந்தியத்தில் திட்ட-மிட்ட சட்டவிரோத சிங்களக் குடியேற்-றங்களை மேற்கொண்டு முஸ்லிம் பெரும்-பான்மையை ஒழித்துக்-கட்ட வரலாற்று நெடு-கிலும் பகீரதப் பிரயத்-தனத்தங்களை மேற்-கொண்டு வந்தனர்.



டி.எஸ்.சேனநாயக்க

1980களின் முதற் கூறுகள் வரை கல்முனை பொத்துவில் அம்பாறை என்ற மூன்று தொகுதி-களாக இருந்த மாவட்டம் பின்னர் தெஹிஅத்த-கண்டிய, கிராந்துருக்-கோட்டை, உஹன என்பவை போன்ற புதிய நகராக்கத் திட்டத்தின் மூலம் 'கம்உதாவ'களின் மூலமும் மாவட்டத்தின் எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டு பல புதிய நகரங்களோடு பல்வேறு கிராம அபிவிருத்தித் திட்டங்களும் உருவாக்-கப்பட்டன. புதிய குடியேற்றக் கிராமங்-களுக்கு நிர்வாக ரீதியாக அரசாங்-கத்தின் ஸ்திரப்பாடுகள் கிடைத்தன.

லஹுகல என்ற சிங்களக் கிராமம் இன்றும் 2500 வாக்குகளோடு பிரதேச செயலகமாகவும், இதேபோன்று உஹன, தமண மூவாங்கல்ல என்பனவும் இன்று தனித்தனி பிரதேச செயலகங்களைப் பெற்றுள்ளன. இதேவேளையில் இம்மாவட்டத்தில் இதனை விட கூடுதலான வாக்குகளையும், பிரதேச எல்லைகளையும் கொண்டியங்கும் பல முஸ்லிம், தமிழ் கிராமங்கள் நிர்வாக ரீதியில் சீர்கெட்டு அரச பராமரிப்பின்றி அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த அசமத்துவத்துக்கு அரசியல் அராஜகத்துக்கு இட்டுச் சென்ற மூலகாரணி கல்லோயா குடியேற்-றத்தைத் தொடர்ந்து வந்த சிங்களக் குடியேற்றங்கள் தான். சிங்களவர்களை இங்கு ஸ்திரமாக அதிகரிப்பதன் மூலம் முஸ்லிம் பெரும்பான்மையை தகர்க்க பேரினவாதிகள் மேற்கொண்ட பிரயத்தனங்கள்.

கல்லோயாத்திட்டத்தின் மூலமே, ஏலவே இறக்காமம் இணைத்திருந்த ஹிங்குராணை இன்று தனி நகரமாக விஸ்தரிக்கப்பட்டு வேறுபடுத்தப்-பட்டுள்ளது மட்டுமல்ல தோட்டம், தமண, பாதாகொட, பன்னலகம, வட்டினாகல, கொணாகொல்ல, சியம்பலாகொட, பட்டஹிர மூவாங்கல்ல, கல்மடுவ போன்ற பல புதிய கிராமங்கள் மிக அண்மைக்-காலத்திலேயே உருவாக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்-பட்டுள்ளனர். இதன் விளைவாக சிங்களவர்களது எண்ணிக்கைப் பெருக்கல் மத்தியில் முஸ்லிம்களை விட இப்போது 30,000 சிங்களவர்கள் இம்மாவட்டத்தில் கூடுதலாக உள்ளார்கள் என்பதை மிக அண்மைய கணக்கெடுப்புக்கள் காட்டுகின்றன.

| ஆண்டு | முஸ்லிம்கள் | தமிழர்கள் | சிங்களவர்கள் |
|---|---|---|---|
| 1932 | 1,06,706 | 1,30,381 | 31,174 |
| 1961 | 98,270 | 50,480 | 62,120 |
| 1981 | 1,57,742 | 85,000 | 1,20,000 |
| 1989 | 241,952 | 1,18,850 | 2,72,980 |

"திகாமடுல்ல" மாவட்டமாக பரிணமிப்பதற்கு முன்னரும் பின்னருமான சனத்தொகை விகிதாசாரம்.

இன்று இலங்கையில் ஜே.ஆர் ஜயவர்தனாவினால் அறிமுகப்-படுத்தப்பட்ட விகிதாசாரப் பிரதி-நிதித்துவத் தேர்தல் முறையினால் அதிக கூடிய பட்சம் பாதிக்கப்பட்டு வருபவர்கள் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள். கடந்த காலத் தேர்தல் முடிவுகள் இதனை நன்கு புலப்-படுத்துகின்றன. ஐ.தே.கட்சிக்கும் மு.காங்கிரசுக்கும் இடையிலான வாக்கு வேறுபாடுகள் மிகக் குறைவாக இருந்தும் ஐ.தே.க. தொடர்ந்து மூன்று ஆசனங்களைத் தட்டிக் கொள்வதற்கும் இந்தக் குடியேற்றம் பெரிதும் துணை நின்றுள்ளது. கடந்த 94ஆம் ஆண்டைய பொதுத் தேர்தல் ஐ.தே.கட்சி பெற்ற மொத்த வாக்குகளைக் காட்டிலும் சுமார் 2500 வாக்குகளே மு.காங்கிரஸ் குறைவாகப் பெற்றிருந்தும் இரண்டு ஆசனங்களையே பெற முடிந்தமைக்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று மாவட்டத்தில் முஸ்லிம்கள் எண்ணிக்கையில் மிகக்-குறைவு. திட்டமிட்டு மேற்கொள்-ளப்பட்ட சிங்களக் குடியேற்றம். இரண்டாவது பேரினவாதிகளுக்கு தொடர்ந்தும் வாக்குப் போடும் முஸ்லிம்கள் எனவே கல்லோயாக் குடியேற்றத் திட்டம் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களும் இம்மாவட்டத்தின் சிறுபான்மை மக்களின் அரசியல் வலுவாட்சியைத் தவிடுபொடியாக்கும் தந்திரோ-பாயத்தில் ஒரு நிகருக்கு நிகரான வரலாற்றுப் பாத்திரத்தை வகித்துக் கொண்டிருக்கும் இத்தறுவாயிலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் கல்லோயா பொன்விழாவுக்கு தலைமை வகித்தாரெனில் உண்மையில் இது வெட்கித் தலைகுனிய வேண்டிய வேதனை மிக்க விடயம்.

நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியிலும், கட்சி அரசியலின் ஆதாய நோக்கிலும் கீரியும் பாம்புமாய் முற்றிலுமே முரண்பட்டு மோதிக் கொள்ளும் இருபெரும் பேரினவாதக் கட்சிகள் எல்லா விடயங்களிலும் முரண்பட்டாலும் ஒன்றே ஒன்றில் மாத்திரம் எப்போதும் உடன்பாடாகவே இருந்து வந்திருக்கின்றன என்பதற்கு கல்லோயாப் பொன்விழாவும் ஒரு நல்ல சான்று. ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க, அநுருத்த ரத்வத்தை, மங்கள சமரவீர, தயாரத்ன என இருகட்சி உறுப்பினர்களும் இவ்விழா-வில் கலந்து கொண்டமை, சிறுபான்மை என்று வரும் போது தங்களது உண்மைச் சொரூபங்களைக் காட்ட எந்தப் பேரினவாதக் கட்சியும் பின்னிற்கவோ புறங்காட்டவோ மாட்டாது என்ப-தையே இது புடம் போட்டுக் காட்டுகின்றது.

போதாக்குறைக்கு சிறுபான்மை இனங்களின் நிலங்களை நீர்ப்பாசனத் திட்டம் என்ற போர்வையில் சூறையாடி சிங்களாதிக்கத்தைத் தக்க வைத்த துரோகிகளின் வாரிசுகளோடு ஆக்கிரமிப்பின் பொன்விழாவை குதூகலமாகக் கொண்டாடி முடித்த மாண்புமிகு எங்கள் அமைச்சரும் மூத்த துணைத்தலைவர்களும் பாராளுமன்ற தேர்தல் விபத்தில் மயிரிழையில் உயிர்த் தப்பி பாராளுமன்ற உறுப்பினராகி-யவர்களும் பேரினவாத அராஜ-கத்துக்கு துணை நிற்பதையும், தேர்தல் வியாபாரத்துக்கு முன் தங்களை சுயவிளம்பரம் செய்வதற்குமேயன்று வேறெதனைத்தான் எதிர்பார்த்தி-ருப்பார்கள்.

சிறுபான்மைகளின் மண்டை-யோட்டில் மது அருந்தியவர்களுக்கு மாலை அணிவித்துக் கொண்டிருக்கும் சில சிறுபான்மைத் தலைமைகள் அரசியலை வெறும் பகடைக்காய் வியாபாரமாக்காமல் தங்களது சமூகங்களின் விடுதலைக்குரலாக பிரயோகிக்க வேண்டும் என்பதே எங்கள் அவா.

# அதிகாரப்பகிர்வில் இலங்கை முஸ்லிம்களுக்கான இடம் எது?



இலங்கை வாழ் முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரையில் கடந்தகால நீண்ட நெடிய வரலாற்றில் இலங்கையில் வாழும் இனங்களுக்குள் மிகவும் புறக்கணிக்கப்பட்டு, மிகவும் நெருக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்ட ஒரு இனமாகவே முஸ்லிம் இனம் உள்ளது. நிகழ்காலமும் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கு பஞ்சணை மெத்தையில் பூத்தூவி அவர்களை இருத்தி வைக்கவில்லை. சுதந்திரம், விடுதலை, சமத்துவம் போன்ற கருத்தியல்களின் நேர் பலாபலன்கள் அவர்களை அடையவேயில்லை மாறாக இக்கருத்தியல்களின் நேர்மறையான பலாபலன்களே அவர்களின் வாழ்வாக இருந்துள்ளது - இருக்கின்றது.

இந்த வாழ்வை அவர்கள் அனுபவித்துத்தான் தீர வேண்டுமா? இந்த வாழ்வை அவர்கள் அனுப வித்துத் தான் ஆகவேண்டுமென சொல்பவர்கள் யார்? அவர்கள் அதற்காக என்னென்ன வாதங்களை முன்வைக்கிறார்கள்? என்பன போன்ற வினாக்கள் இன்று நமக்கு முக்கிய மாகின்றது.

முஸ்லிம்கள் என்பவர்கள் யார்? அவர்கள் இந்த நாட்டின் வந்தேறு குடிகள், வியாபாரிகள், அவர்களுக்கு இந்த நாட்டில் எவ்விதமான பாத்திய தையும் இல்லை. அவர்கள் இந்த நாட்டில் எட்டு சதவீதமாகவே வாழ்கின்றனர். அவர்கள் இலங்கை நாடு முழுவதும் பரந்து வாழ்கின்றனர். அவர்களுக்கென்று ஒரு மொழியில்லை. அவர்களுக்கென்று ஒரு பிரதேசம் இல்லை. அவர்களுக்கென்ற அரசியல் நிறுவனம் தேவையில்லை - அவர்கள் தமிழ் பேசும் மக்கள், அவர்கள் இஸ்லாமியத் தமிழர்கள், வடக்கு முஸ்லிம்கள் தமிழர்களுடன் வாழ வேண்டும் என்கிறார்கள், தென்னிலங்கை முஸ்லிம்கள் சிங்களவர் களுடன் வாழ விரும்புகின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் முஸ்லிம் தலைவர்கள் இருக்கிறார்கள், ஐக்கிய தேசியக் கட்சியிலும் முஸ்லிம் தலைவர்கள் இருக்கிறார்கள். தமிழ் மிதவாத அமைப்புக்கள் தொடக்கம் விடுதலை இயக்கங்கள் வரை முஸ்லிம்கள் இருந்தனர். இருக்கின்றனர் என்பது போன்ற விவாதங்கள் நீண்ட காலமாய் முன்வைக்கப்படுகின்றன.

இவ்விவாதங்கள் உண்மை தான். இந்த விவாதத்தின் மீதான உண்மைகளின்படி இந்த வாதத்தை முஸ்லிம் மக்களுக்கெதிராக முன் வைப்பவர்கள் இந்த விவாதங்களை ஏன் தாங்கள் தொடர்பாகவும் ஒரு நாளும் முன்வைக்க விரும்புவதில்லை. இந்த நாட்டில் பூர்வீகக் குடிகள் யார்? சிங்களவரா? தமிழரா? அல்லது வேடுவ சமூகத்தினரா? இந்த நாட்டின் பாத்தியதை யாருக்கு மட்டும் உண்டு? சிங்களவர்களுக்கு மட்டுமா? வடக்கு கிழக்கின் பாத்தியதை தமிழர்களுக்கு மட்டுமா உண்டு? சிங்களவர்களுக்கான அரசியல் நிறுவனங்கள் ஏன் தமிழர்களுக்கான அரசியல் நிறுவனங் கள் ஏன்? யாழ்ப்பாணத்தில் லீலா பேக்கரி வைத்திருந்த காமினி யாருடன் போய் மீண்டும் யாழ்ப்பாணத்தில் வாழ விரும்புகின்றார்? தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள் யாருடன் வாழ விரும்புகின்றனர். இக்கேள்விகளை எழுப்பிக் கொண்டு போயின் இதற்கான பதில்களில் இருந்து ஒரு இனத்தின் - அரசியல் தீர்வை கண்டறிய முடியுமா?

இலங்கை அரசியலில் என்ன நடந்தது? என்ன நடக்கிறது? ஏன் தமிழர்கள் ஆயுதப் போராட்டம் நடத்துகிறார்கள்? ஏன் வடக்குக்கு ஒரு சிங்களவர் தானும் போய் தனது பழைய வாழ்விடத்தில் வாழ முடியாதுள்ளது? தென்னிலங்கையில் ஏன் தமிழர்கள் இலங்கை அரசின் இராணுவ நெருக்கு வாரத்துக்குள் திணறி நிற்கின்றனர்? ஏன் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர்? ஏன் காத்தான் குடி பள்ளிவாசல், ஏறாவூர் கிராமங்கள் மீது மனித வேட்டை நடந்தது? கோணஸ்வரிகளுக்கு ஏன் இத்துயரம்? ஏன் நவாலி தேவாலயம் குண்டு வீசி தாக்கப்பட்டது? ஏன் தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்டது? ஏன் புலிகள் ஆயுதம் தூக்கினர்? முஸ்லிம் காங்கிரஸ் ஏன் வந்தது? தமிழர்கள் ஏன் இலங்கையில் இப்படி வாழ முடியாது என்கின்றனர்? முஸ்லிம்கள் ஏன் தமக்கான அதிகார அலகு கேட்கின்றனர்? இவை பொய்யா? இவை உண்மையெனில் நாங்கள் முஸ்லிம்கள் தொடர்பாகவும் நியாயமாகவே சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்! நியாயமாகவே பேச வேண்டியவர் களாக வுள்ளோம்

இலங்கை வாழ் முஸ்லிம் களின் பூர்வீகம் குறித்த பிரச்சினை இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான அரசியல் பிரச்சினையை ஒருக்காலும் குழிதோண்டிப் புதைத்து விடாது! சமகால முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினைகள் அதன் பரிமாணத்தை யொட்டியே விளங்கிக் கொள்ளப்பட்டு தீர்வுக்கான வழிவகைகள் பற்றி பேசப்படுதல் முக்கியமானதாகும் - இதனைவிட்டு நழுவி முஸ்லிம்களுக்கு வெளியிலேயும், முஸ்லிம்களுக்குள் ளேயும் உள்ள எதிர்க்கருத்துக்களை மாத்திரம் வைத்துக் கொண்டு பிரச்சினைக்கான தீர்வின் மார்க்கத்தை கண்டடைய முடியாது!

யதார்த்தத்தில் இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் தங்களை ஒரு தேசிய இனமாகவே நிலைநிறுத்தி இருக்கின்றனர். இந்நாட்டில் சிங்கள, தமிழ் இனங்களுக்கு எவ்வெவ் வகையான உரிமைகளும், அரசியல் அபிலாஷைகளும் இருக்கின்றதோ, அவை அனைத்தும் முஸ்லிம் மக்களுக்கும் உள்ளது. இலங்கையின் அரசியலானது இன்று பற்றி எரிந்து கொண்டிருக்கும் தீயாகவுள்ளது. இந்தத் தீயின் நாக்குகள் சிங்களவர்கள், தமிழர்களை மாத்திரமல்ல முஸ்லிம் களையும் சுட்டெரித்து வந்துள்ளது, வருகின்றது.

இலங்கையில் நீண்ட காலமாய் நடந்து வரும் இனப்போரி னுள் முஸ்லிம்கள் வெறும் பார்வையாளர்களாக ஒரு பாதிப்பும், ஒரு இழப்பும் அடையாதவர்களாக இருக்கவில்லை. மாறாக முஸ்லிம்களின் இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது. மனித நாகரீக வரலாறு தலைகுனியுமளவு முஸ்லிம் இன அழிப்பு, இனச் சுத்திகரிப்பு நடந்துள்ளது. உடைமைகள் இழக்கப்பட்டிருக்கின்றன, பிறந்த மண் மறுக்கப்பட்டிருக்கின்றது. அகதிகளாகி யுள்ளனர். மத சுதந்திரம் மறுக்கப் படுகின்றது, அந்நிய நாட்டின் இராணுவத்தின் படுகொலைக்கும் அடக்கு முறைக்கும் அழிவுக்கும் உட்பட்டிருக்கிறார்கள், முஸ்லிம் புத்திஜீவிகள் ஆயுத முனையில் படு கொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழ் மக்களுக்கு என்னென்ன நடந்ததோ அவை அனைத்தும் முஸ்லிம் மக்களுக்கும் நடந்து தான் உள்ளது.

இங்கு மிகவும் முக்கியமாக பார்க்கப் பட வேண்டிய விடயம் யாதெனில் இலங்கை முஸ்லிம்களுக்கெதிரான அடக்குமுறையின் வடிவம் என்பது இரு இனவாதத்தின் பெரும் சப்பாத்துக் கால்களின் கொடூரத்தின் வடிவமாக முஸ்லிம்கள் மீது பாய்ந்தது. இதனது பெருந்தாக்கத்தைச் சுமந்தவர்கள் வடக்கு கிழக்கு முஸ்லிம்களே. தென்னிலங்கை முஸ்லிம்களின் மீதான அடக்குமுறையின் வடிவம் தென்னிலங்கையில் பெரும் இரத்த ஆறாக ஓடவில்லை. ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் தென்னிலங்கையிலிருந்து விரட்டியடிக்கப்படவில்லை. அகதி முகாம்களில் வாழவில்லை. தமிழ் இயக்கங்களின் ஆயுத அராஜகத்தின் கொடூரத்தினைச் சந்திக்கவில்லை. மரணமும் கண்ணீரும் வாழ்வாக வாழ நிர்ப்பந்திக்கப்படவில்லை. மாறாக அவர்களது அரசியல், மத, கலாசார உரிமைகள் முஸ்லிம் என்ற அடிப்படையில் மறுக்கப்பட்டதே தவிர, நான் மேற்சொன்ன துயரங்கள் அவர்களது வாழ்வை கபளீகரம் செய்யவில்லை. ஒட்டுமொத்தமாக இதனை விரிவாகச் சொல்வதற்கு 1915க்கு, 1985க்கோ, 1990க்கோ போக வேண்டியதில்லை. வரலாறு பற்றிச் சிந்திப்பவர்களுக்கும், எழுதுபவர் களுக்கும் ஏலவே இதனை சரித்திர மாக்கி கையளித்துள்ளது. இந்த நிலையில் இலங்கைவாழ் முஸ்லிம்களின் வாழ்வுக்கும், பாதுகாப்பிற்கும் என்ன தீர்வு? அவர்களை எப்படிப் பாதுகாப்பாகவும், சமத்துவமாகவும் வாழவைக்க முடியும். இதுபற்றிய சிந்தித்தல் அவசியம்.

அடிப்படையில் இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இரு வகையான அரசியல், பொருளாதார பிரதேச வலயங்களாக முஸ்லிம்களை வகைப்படுத்த முடியும்.

I. வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்கள்.

II. தென்னிலங்கை வாழ் முஸ்லிம்கள்.

கடந்தகால வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களின் இருப்பினதும் வாழ்வினதும் மீதான அராஜகத்திற்கும் அடிமைத்தனத்திலிருந்தும் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களைப் பாதுகாப்பது உடனடியான இம் மக்களுக்கான அரசியல் தீர்வினால் மட்டுமே முடியக்கூடிய ஒன்றாகும். வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வின் போது தென்னிலங்கை வாழ் தமிழ் மக்களின் வாழ்வுக்கு என்ன தீர்வு என இன்னும் யாரும் கேள்வி எழுப்பவில்லை, அக்கேள்வியை நாம் எழுப்பிப் பார்க்கினும், வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வென்பது தென்னிலங்கையில் வாழும் முஸ்லிம்களுக்கான ஒரு பாதுகாப்பாகும்.

சிங்கள மக்கள் தங்களுடைய பிரச்சினையை இனப்பிரச்சினையாகப் பார்க்கும் போது, தமிழ் மக்கள் தங்களுடைய பிரச்சினையை இனப் பிரச்சினையாகப் பார்க்கும் போது, முஸ்லிம்களுடைய பிரச்சினையை மட்டும் ஏன் ஒரு மூன்றாம் தரப் பிரச்சினையாக இனப்பிரச்சினைக்கு வெளியில் பார்க்க முற்படுகிறார்கள் என்பது எழுப்பப்பட வேண்டிய கேள்வி. முஸ்லிம் மக்களுடைய பிரச்சினையை இனப்பிரச்சினையாகப் பார்க்க தவறும் போது வரலாற்றுப் புண்ணுக்கு மருந்தைக் கண்டுபிடிக்கத் தவறியவர்களாக நாம் மாறி இந்தப் புண்ணை ஆறாத புண்ணாக ஆக்கி விடுவோம்.

இலங்கையின் இன்றைய யதார்த்த அரசியல் சூழலில் இனப்பிரச்சினைக்கான தீர்வு இலங்கையில் வாழும் இனங்களை ஏற்றுக் கொண்டு அவர்களது பாரம்பரிய மண்ணை அங்கீகரித்து அவர்களுக்கும் சம அந்தஸ்தை வழங்குவது தானே ஒழிய அதற்கான தீர்வு வெறும் பிரதேச தீர்வாக ஒரு நாளும் மாறி விட முடியாது. பிரதேசத்திற்கான அதிகாரம் என்பது இன்று என்ன? இனங்களுக்கான அதிகாரமும் சமத்துவமும் என்பதே இன்றைய போராட்டம். இன்றைய நிகழ்வு, இன்றைய வாழ்வு இது.

தமிழர்கள் 1948க்கு முன்பு ஒரு தனிநாடு கேட்கவில்லை. முஸ்லிம்கள் 1980க்கு முன்பு முஸ்லிம் மாகாணம் கேட்கவில்லை. சிங்கள இனவாதம் எப்போது இலங்கை நாடு என்பது சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம் என மார்தட்டி தமிழர்களைப் புறந்தள்ளி நசுக்கியதோ அதன் எதிர் விளைவே தமிழ் மக்களின் தனிநாட்டுச் சிந்தனை.

1980க்குப் பின் தோற்றம் பெற்று உக்கிரமடைந்த தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டத்தின் தீவிரத்தால் கிளையுடைத்து வெடித்து நின்ற தனித்தமிழ் வாதமும் அதன் கொடூரங்களின் விளைவே, முஸ்லிம் மாகாணக் கோரிக்கை - இது வரலாற்றுக் காலகட்டங்கள், நெருக்குதல்கள் தோற்றுவித்த தேவைப்பாடுகள் அன்றி வேறு என்ன? இவை தேவையில்லை என்று மறுப்பவர்கள் இத்தேவைப் பாட்டுக்கான கோரிக்கையின் கடந்த கால நிகழ்வுகளை மறுக்க முடியுமா?

பிரபாகரன் தேவையில்லை என்று சொல்ல முடியுமா? தமிழீழம் தேவையில்லை என்று சொல்ல முடியுமா? ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேவையில்லை என்று சொல்ல முடியுமா? அஷ்ரஃப் தேவையில்லையென்று சொல்ல முடியுமா? இலங்கை சிங்களவர் களுடைய நாடு என்றால், வடக்கு கிழக்கு தமிழர்களுடைய தேசம் என்றால் - முஸ்லிம்கள் எங்கே போவது? முஸ்லிம்களும் இந்த நாட்டில் வாழ்ந்து தானே வந்திருக்கிறார்கள். வாழ்ந்து தானே வருகின்றனர். அப்படியானால் தெற்கில் சிங்கள[illegible]களுக்குக் கீழேயும் வடக்கில் பிரபா[illegible]கரனுக்குக் கீழேயும் முஸ்லிம்கள் கைகட்டி, வாய்பொத்தி குற்றேவேல் செய்ய வேண்டும் என்றா சொல்கிறார்கள்?

யதார்த்தத்தின் அடிப்படை யில், மனிதாபிமானத்தின் அடிப்படை யில் முஸ்லிம்களும் இந்த நாட்டில் வாழ்ந்து தான் ஆகவேண்டும். அவர்களுக்கும் அதிகாரம் பகிர்ந்தளிக் கப்படல் வேண்டும். அவர்களும் சிங்கள, தமிழ் இனங்கள் அனுபவிக்கும் உரிமைகளையும், அபிலாஷைகளையும் அனுபவித்தே தீரவேண்டியவர்கள். இதனை ஏற்றுக்கொள்பவர்கள் - முஸ்லிம்களையும் சமமாக நடத்தித் தான் தீர வேண்டும், அவர்களுக்கான அதிகாரத்தைப் பெறுவதில் ஏனையவர்கள் ஏன் தடையாக இருக்[illegible] வேண்டும்?

சிங்களவர்கள் தமிழர்களைக் கொல்வதும், தமிழர்கள் சிங்களவர் களைக் கொல்வதும் முஸ்லிம்கள் தமிழர்களைக் கொல்வதும், தமிழர்கள் முஸ்லிம்களைக் கொல்வதும் பிரச்சினைக்கான தீர்வல்ல. கடந்த கால வரலாற்றில் நடந்தவைகளின் பெறுபேறுகள் நமக்கு முன் உள்ளது. அந்தப் பெறுபேறுகளின் விளைவுகள் பற்றி நாம் அறிவோம். இதனை நாம் உதாசீனம் செய்ய முடியாது!


அதிகாரப் பகிர்ந்தளிப்பு என்பது தமிழ் ஈழத்திலிருந்து சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் வெளியேற்றுவதும் தென்னிலங்கையிலிருந்து முஸ்லிம்களையும், தமிழர்களையும் வெளியேற்ற நினைப்பதும், அவர்கள் வாழ்வதற்கான உரிமையை மறுப்பதும், முஸ்லிம் மாகாணத்திலிருந்து தமிழர்களையும், சிங்களவர்களையும் வெளியேற்ற நினைப்பதும், அவர்கள் வாழ் உரிமையை மறுப்பதும் அல்ல. ஒவ்வொரு இனமக்களும் அதிகாரம் கோருவது சமத்துவ தளத்தில் சந்திப்பதற்காகவே அன்றி - எதிர் நிலைக்கு இனங்களை தள்ளுவதற்காக அல்ல. இலங்கையில் வாழும் இனங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவது இன்றுள்ள அமைதியின்மையை தீர்ப்பதற்கான ஒரேயொரு மார்க்கமின்றி வேறு எந்த வழியுமே இல்லை.

*(1999மார்ச் 27,28ம் திகதிகளில் 'இலங்கை முஸ்லீம்களின் தேச வழமைகளும் அரசியல் தலையீடும் என்ற தலைப்பில் மோர்ஜ் அமைப்பு நடாத்திய நடாத்திய கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரையில் சுருக்கிய வடிவம் இது.)*

நன்றி - நூலகத்திட்டம்



# நீலன் திருச்செல்வம்



பிறப்பு: 1947 - இறப்பு: 1999

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கொலைப் படிமங்களுக்குப் பாரிய ஆற்றல் இருப்பதில்லை. ஆனால், எனக்கு மிகவும் பரிச்சயமான ஒரு தெருமுனையில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் போராளி ஒருவரால் மோதிச் சிதைக்கப்பட்ட நீலன் திருச்செல்வத்தினது காரும், அதனுடைய பின் கதவூடாகச் சரிந்த நிலையில் கொலையுண்டு கிடந்த நீலன் திருச்செல்வமும் இந்தக் கொலைப் படிமமும் உலக அளவில் எழுப்பிய அனுதாப அலைக்கும் அதிர்ச்சிக்கும் என்ன காரணம்?

தமக்குப் பரிச்சயமான ஒரு முறையில், குருதி சிந்தப்படுவதையும் உடல் பிளக்கப்படுவதையும் பற்றி அலட்டிக் கொள்ளாமல் அறுவைச் சிகிச்சை வைத்தியரின் நிதானத்தோடு ஆனால் மூர்க்கத்தனமாக இத்தகைய படுகொலைகளை விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் புரிந்து வருவதற்கு என்ன காரணம்?

இத்தகைய கேள்விகளுக்கு நிதானமாகவும் பொறுப்புணர்வோடும் அதே சமயம் அரசியல் உணர்வையும் அரசியல் கருத்துக்களையும் வெளியிடுவதில் எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய உரிமைகள் பற்றிய சிந்தனையோடும் பதிலைத் தேட முற்படும் மிகச் சிலரில் நானும் ஒருவன்.

இனப்பிரச்சினை போராக வெடிப்பதற்கு முன்பு இருந்தே அரசியல் படுகொலைகள் ஆரம்பமாகிவிட்டன. இந்தப் படுகொலைகளில் நீலன் முதலாவது ஆளுமல்லர், கடைசி ஆளுமல்லர். இந்தப் படுகொலையைப் பற்றிய எவ்வளவு தீவிரமான கண்டன வார்த்தையும் புலிகளைப் பொறுத்தவரை எருமைமாட்டுக்கு மேல் மழை பெய்த கதை தான். நூறு அரசியல் கருத்தரங்குகள் வைப்பதன் மூலம் பொதுமக்களின் அபிப்பிராயங்களை வெல்லலாம் என்பதை மறுத்து வெற்றிகரமான ஒரு இராணுவத் தாக்குதலே போதும் மக்களைத் திருப்புவதற்கு என்கிற குறுக்கு வழி அரசியலில் உடல் பொருள், ஆவி, சித்தம் அனைத்தையுமே குவித்து வைத்திருப்பவர்களுக்கு, தனிநபர்களை அழித்துவிடுவதன் மூலம் அரசியல் கருத்துக்களையும், மாற்றுக் கருத்துக்களையும் ஒழித்து விடலாம் என்ற நம்பிக்கை வலுவாக இருப்பது ஆச்சரியம் தருவதில்லை. ஆனால், இவர்கள் எத்தகைய வரலாற்றுக் குருடர்கள் என்பதை வரலாறு எழுதத்தான் போகிறது.

000

இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையம் (International Centre for Ethnic Studies - ICES), சட்ட சமூக நம்பிக்கை நிதியம் (Law and Society Trust) ஆகியவற்றின் நெறியாளர்களில் ஒருவராக நீலனை கடந்த பன்னிரண்டு வருடங்களாக நான் நன்கு அறிவேன். மூன்றரை வருடங்கள் ICES இல் ஆய்வாளனாகப் பணியாற்றியபோது ஒரு நல்ல சகபாடியாகவும், இலக்கியம் அரசறிவியல், சமூகவியல், சினிமா, சமூக வரலாறு, ஓவியம் போன்ற பலதுறைகளிலும் ஆழமான ஈடுபாடும் தேர்ச்சியும் உடைய ஒருவராகவும் நீலனை நான் அறிந்துள்ளேன். தமிழர் விடுதலைக்கூட்டணியின்தலைவர்களில் ஒருவராகவும் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராகவும் கொழும்பில் கூட்டணியின் இயங்குதிசையைத்தீர்மானிப்பவர்களுள் முக்கியமானவராகவும் நீலன் இருந்தாலும்ICES, LST போன்ற அவர் தலைமையேற்றிருந்த ஆய்வு, சமூக நிறுவனங்களோடு தொடர்புற்றிருந்த நூற்றுக்கணக்கான பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், சட்ட வல்லுனர்கள், கலைஞர்களை தன்னுடைய கூட்டணி அரசியல் முகத்திலிருந்து நீலன் வெகுதூரம் தள்ளியே வைத்திருந்தார். அந்த வகையில் ஆய்வையும், புலமைத் துறையையும், கலையையும் அவ்வத் துறைகளுக்குரிய தன்னாட்சியோடு மதிக்கவும் பேணவும் அவரால் முடிந்திருந்தது. அவருடைய சிறப்புக்களில் முக்கியமானது அது தான்.

விடுதலைக் கூட்டணியின் அரசியலை அவரிடம் விமர்சித்தாலும் ஒரு புன்சிரிப்புடன் விவாதத்தைத் தவிர்த்து விடுவதோடு ஆய்வுத்துறைகள், சமூக நீதி பற்றி உரையாடலை நகர்த்தி விடுவார். அவருடைய பாராளுமன்ற அரசியல் ஈடுபாடு அவருடைய ஏனைய புலமைத்துறைப் பங்களிப்பையும், விழுமியங்களையும் பாதிக்கிறது என்று நண்பர்கள் பலர் வாதாடியபோதும், தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து சற்றும் தளராமல் உறுதியாக நின்றார். பல்வேறு அரசியல் கருத்து உள்ளவர்களும் பல்வேறு கட்சி சார்ந்தவர்களும் அவருடன் நட்பையும் உறவையும் பேணி வந்துள்ளனர்.

லிபரல் ஜனநாயகத்தின் கண்ணியமான ஒரு சில மனிதர்களில் நீலனும் ஒருவர் என்பது பலரும் ஏற்றுக் கொண்ட ஒரு விஷயம் ஆகும்.

நீலனுடைய அரசியலை வெறுமனே 'புறோக்கர்' அரசியலாகவும், தீர்வுப் பொதியின் கர்த்தாக்களில் ஒருவர் என்பதாகவும், கூட்டணியின் அரசியல் என்பதாகவும் சொல்லுவது ஆழமற்ற, மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட ஒரு அரசியல் விமர்சனம் என்று தான் நான் கருதுகிறேன். இந்த எளிமைப் படுத்தப்பட்ட விமர்சனங்கள், புரிதலில் இருந்து தான் பல அபத்தமான குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் இலங்கையிலும் தமிழர் புலம் பெயர்ந்து வாழும் பிற நாடுகள் பலவற்றிலும் தமிழ்ப் பத்திரிகைகள் பலவால் முன் வைக்கப்படுகின்றன.

நீலனுடைய அரசியல் சிந்தனையும், புலமைத்துறை ஆய்வும் பாரம்பரிய ஜனநாயக அரசியல் கட்டமைப்பையும் அதற்கு மூல ஆதாரமாக விளங்குகிற சுயாதீனமான நீதித்துறை, பலம் வாய்ந்த அரசியல் யாப்பு ஆகிய இரண்டையுமே மையங் கொண்டிருந்தது. பல கட்சி அரசியலும் ஜனநாயக வழிமுறைகளும் செழிப்பாக இருக்க வேண்டுமானால் சிறந்த அரசியல் யாப்பும் அந்த யாப்பைப் பேணி நடக்கக் கூடிய ஒரு திறன் வாய்ந்த நீதித்துறையும் இன்றியமையாதவை என்று அவர் உறுதியாக நம்பியவர். அவரது இந்தச் சிந்தனையும் பார்வையும் அவர் கூட்டணி அரசியலுக்குள் வருவதற்கு முன்பு இருந்தே அவரிடம் பலமாக இருந்த ஒன்று. அவருடைய எழுத்துக்களும் நூல்களும் இதற்கு மிகவும் உறுதியான ஆதாரங்களாகும். யுத்தமோ, சமாதானமோ எதுவாயினும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இத்தகைய லிபரல் ஜனநாயகக் கட்டமைப்புக்குள்ளாகப் போய்த்தான் ஆக வேண்டும் என்பது அவருடைய வாதமாக இருந்தது. அவருடைய இந்த அரசியல் யாப்பு உரிமைகள் சார்ந்த புலப்பதிவு (Constitutional Rights Perspective) எவ்வளவு தூரம் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகலாம் என்பதில் நாங்கள் வேறுபடலாம். ஆனால், அரசியலமைப்பு உரிமைகள் ஒரு தேசத்தின் அல்லது ஒரு தேசிய இனத்தின் இறைமையின் மையம் என்று அவர் தொடர்ந்து வாதிட்டு வந்தமையை நாம் அவதானிக்க வேண்டும் என்பதோடு அக்கருத்துடன் நாம் முரண்பட்டால் அதனைக் கருத்துத் தளத்தில் தான் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

மனிதரின் அடிப்படை உரிமைகள், குடியியல் உரிமைகள் என்பன யாப்பு மூலம் தான் உறுதி செய்யப்பட முடியும் என்று அவர் திடமாகவே நம்பினார். இந்த நம்பிக்கை கொஞ்சம் அதீதமானது தான். யாப்பையும் உரிமைகளையும் செவ்வனே நடைமுறைப்படுத்தக்கூடிய பொறிமுறைகளும் பொருத்தமான அரசுக் கட்டமைப்பும் இல்லையென்றால் அற்புதமான அரசியல் யாப்புக்கும் கூட அவ்வளவு மதிப்பு இராது. எனினும், இத்தகைய பிரச்சினைகளை லிபரல் ஜனநாயகக் கட்மைப்புக்குள் இணக்கப்பாடு, சமரசம், தொடர்ந்த முயற்சி என்பவற்றுக் கூடாக மெல்ல மெல்லத் தீர்த்து விடலாம் என்று நீலன் நம்பினார். அவருடைய அரசியலின் கருத்தியல் பின்னணி இது தான்.

000

விடுதலைப் புலிகள் தொடர்பாக நீலனுக்கு நிறையவே விமர்சனங்கள் இருந்தன. எனினும், தன்னுடைய விமர்சனங்களை அவர் எப்பொழுதுமே கருத்து நிலை சார்ந்து நிதானமாகத் தான் வெளியிட்டு வந்திருக்கிறார். பல சந்தர்ப்பங்களில் சர்வதேச நிறுவனங்களும், அகதிகளுக்கான சர்வதேச அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை நிறுவனங்களும் இலங்கை அரசின் ஒடுக்குமுறை மற்றும் பயங்கரமான மனித உரிமை மீறல்கள் பற்றி அவரிடமிருந்தே தகவல்களையும், ஆதாரங்களையும் பெற்றுள்ளன. இந்த நிறுவனங்களின் பட்டியல் மிக நீண்டது. எனினும், ஒரு சிறு சம்பவத்தை இங்கு குறிப்பிடலாம். கனடாவில் விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவராக இருந்த சுரேஸ் மாணிக்கவாசகர் கனடிய அரசால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட இருந்தவேளை கனடாவின் The Globe and Mail பத்திரிகை நிருபர் John Stackhouse, வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைப் பேட்டி கண்டு கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். சுரேஷின் வழக்கு அப்பீல் செய்யப்பட்டிருந்தது. சுரேஷ் நாடு கடத்தப்பட்டார். அவருக்கு எவ்வித 'தீங்கும்' நேராது என்று இலங்கை அரசு உறுதி மொழி கொடுத்திருந்தது. லக்ஷ்மன் கதிர்காமரும், சுரேஷ் திருப்பி அனுப்பப்பட்டால் விசாரணை செய்யப்படுவாரே தவிரச் சித்திரவதைக்குள்ளாக மாட்டார் என்று John Stackhouse இடம் தெரிவித்திருந்தார். இலங்கை அரசு பற்றி ஓரளவுக்காவது தெரிந்திருந்த John Stackhouse அமைச்சரை நம்ப மறுத்து, நீலனைத் தொடர்பு கொண்டார். சுரேஸ் திருப்பி அனுப்பப்பட்டால் நிச்சயமாகவே வதைக்குள்ளாவார் என்பதையும் இலங்கைப் பொலிஸ் நிலையங்களிலும், இராணுவ முகாம்களிலும் வதை என்பது ஒரு வழக்கமான (routine) அம்சம் என்றும் நீலன் சொல்லியதை மேற்கோள் காட்டி John Stackhouse எழுதிய கட்டுரை சுரேஸின் வழக்கில் ஆதாரமாகச் சமர்ப்பிக்கப்பட்டது. சுரேஷ் இலங்கைக்கு நாடு கடத்தப்படக் கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தகவலை ஒரு நீண்ட கட்டுரையாகவே John Stackhouse எழுதியிருக்கிறார்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக Amnesty International, Human Rights Watch போன்ற நிறுவனங்களுக்கு ஒரு முக்கிய ஆலோசகராக நீலன் மிக நீண்ட காலமாகவே பணியாற்றி வந்திருக்கிறார். அவரோடு முரண்பாடுற்றவர்கள் பலர் கூட இந்த அம்சத்தைப் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்கள். தனிப்பட்ட முறையில் நீலனின் படுகொலைக்காக மனம் வருந்துகிற பல தமிழ்ப் புத்திமான்கள், வழக்கறிஞர்கள், ஏன் புலி ஆதரவாளர்கள் பலர் கூட வெளியில் மௌனம் சாதிக்கிறார்கள். இந்த நிலைமை மாற்றுக் கருத்துக்கள் உள்ளவர்களை அழித்தொழிக்கும் செயலை நியாயப்படுத்துகிற ஒரு பாரம்பரியத்தை எமது சமூகத்துக்குள் நன்றாக வளர்த்து வருகிறது. வேரூன்றி விடுகின்ற இத்தகைய பாரம்பரியங்கள் நூற்றாண்டுக் கணக்காக விலகாது. இது நிச்சயமாகவே ஒரு நல்ல அம்சம் அல்ல. உலக அரசியல் வரலாற்றில் சில சமூகங்கள் இத்தகைய பயங்கரமான வன்முறைப் பாரம்பரியங்களுள் மூழ்கி விட்டு வெளியே வர முடியாமல் தத்தளித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், துரதிருஷ்டவசமாக வரலாற்றில் இருந்து நாம் எதைக் கற்றுக் கொள்கிறோம் என்றால், ஒன்றையுமே அல்ல என்பதைத் தான்.

000

கடந்த ஒன்பது வருடங்களாக விடுதலைக் கூட்டணியையும், நீலனையும் கூட சரிநிகர் தீவிரமாக விமர்சித்து வந்துள்ளது. எனினும், ஒரு தரமாவது இத்தகைய விமர்சனங்களை நிறுத்தும்படியோ, குறைக்கும்படியோ நீலன் என்னைக் கேட்டுக் கொண்டதில்லை. அந்த வகையில் மாற்றுக் கருத்தின் மதிப்பையும் விமர்சனத்தின் இடத்தையும் உயர்வாக மதித்தவர் நீலன். ஆரோக்கியமான அரசியலுக்கு இது ஒரு முதுகெலும்பான பண்பு அல்லவா?

**சேரன்**

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அறிக்கை

சர்வதேச செஞ்சிலுவை குழுவின் திருகோணமலை பணிமனை, இவ்வாண்டின் முதல் ஆறு மாதகாலப்பகுதியில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அடங்கிய விபரக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

யுத்தக் காலங்களில் மனித கௌரவத்தையும், உயிர்களைப் பாதுகாத்து தேவைப்படும் அடிப்படை உதவிகளை செய்வதற்கென நடுநிலைமையும், சுதந்திரமும் கொண்டதாக 1863ல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பு, 1989ல் ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் இலங்கையில் காலடி வைத்தது.

திருகோணமலை பணிமனை 1990 ஜூலை 2ம் திகதி திறக்கப்பட்டு மூன்று பேராளர்களையும், 30 இலங்கையர்களையும் கொண்ட அலுவலகமாக இன்று செயற்படுகிறது.

திருகோணமலை பணிமனைக் குழுவானது 1999 ஜனவரி முதல் ஜூன் வரையான காலப்பகுதியில் 76 கைதிகளைச் சந்தித்துள்ளது. இவர்களில் 39பேர் முதன்முறையாக பார்வையிடப்பட்டனர் என்றும், இவர்கள் திருகோணமலை தலைமை பொலிஸ் நில்லயம், துறைமுகப் பொலிஸ் நிலையம், உப்புவெளி, கந்தளாய் பொலிஸ் நிலையங்கள், தடுப்புக் காவல் நிலையம் என்பவற்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் எனவும் அவ்வறிக்கை கூறுகின்றது.

காணாமல் போனோர் என்ற சந்தேகத்தில் உறவினர்களால் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து தாம் 16 பேர் பற்றிய தகவல்களை கண்டறிந்து குடும்ப உறவினர்களுக்கு வழங்கி மன நிம்மதியை ஏற்படுத்தியதாகவும் அவ்வறிக்கையில் தெளிவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறே 17 செய்திகள் உறவினர்களிடமிருந்து கைதிகளுக்கும், 34 செய்திகள் பொதுமக்களுக்கும் விநியோகிக்கப்பட்டதும், விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட 3 பேர் அவர்களது உறவினர்களுடன் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

சுகாதார சேவையை பொறுத்தமட்டில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத மூதூர் பகுதியைச் சேர்ந்த பட்டாளிபுரம், நல்லூர், இலங்கைத்துறை முகத்துவாரம், வாழைத்தோட்டம், கூனித்தீவு. சூடைக்குடா, ஈச்சிலம்பற்றை, ஆனைத்தீவு, பள்ளிக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் வாராந்தம் திங்கள் வெள்ளி வரை நடமாடும் வைத்திய சேவை வழங்கப்பட்டு வருவதாகவும், இதனால் 12,500 நோயாளிகள் நன்மை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 38 கிராமங்களில் உள்ள 1888 கிணறுகள் மாதமிருமுறை தொற்று நீக்கம் செய்து வருகிறது என்றும் அது கூறுகிறது.

கப்பற் சேவையின் மூலம் 927 நோயாளர்களும் 591 துணையாளர்களும் நன்மையடைந்துள்ளனர். 653 மெற்றிக்தொன் எடையுள்ள பொருட்களும் 4504 தபாற் பைகளும், கப்பற் சேவை மூலம் உரிய இடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

போர்க்காலங்களில் மனிதாபிமானமும், கௌரவமும் பேணப்பட வேண்டிய பரப்புரை அமர்வுகளும் இடம்பெற்றிருக்கின்றன. போராளிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இவை நடாத்தப்பட்டிருக்கின்றன. இதனால், இராணுவ அதிகாரிகள் உட்பட 330, இராணுவத்தினர் 50, கடற்படை அதிகாரிகள் 110 சிவில் நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் நன்மை அடைந்துள்ளனர். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் கச்சகொடித்தீவு, ஆலங்கேணி, சம்பூர், கிளிவெட்டி ஆகிய இடங்களில் வாராந்தம் இடம்பெறும் வைத்திய சேவை மற்றும் பற்சிகிச்சை சேவை ஆகியவற்றால் 4200பேர் நன்மையடைந்துள்ளதாகவும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**விவேகி**

நன்றி - நூலகத்திட்டம்



புதிய இடதுசாரிமுன்னணி: உறவும் முறிவும்!

# புலம் பெயர் முற்போக்கு சக்திகளுக்கும் பொருந்துமா?

அண்மையில் சரிநிகர் இதழ் 178இல் வெளிவந்த கட்டுரையே இவ் எண்ணத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது. அக்கட்டுரை இலங்கையை மையமாகக் கொண்டதாக அமைந்திருந்தது. இப்போக்கினை ஐரோப்பிய சூழலிலும் இனங்காணக் கூடியதாக உள்ளதா என வினா எழுப்புவதே எனது நோக்கமாகும். புலம்பெயர்ந்த சமூகத்தினை வசதிக்காக மேலெழுந்த ரீதியில் பின்வருமாறு வகைப்படுத்துகின்றேன்.

-தமிழ் ஈ.வி.புலிகள் அமைப்பு கொள்கை சார்பு

-மாற்று அமைப்புகளின் கொள்கை சார்பு

-மேற்குறிப்பிட்ட இரண்டு பிரிவுகளுக்கும் அடங்காத கொள்கை

-தனித்த ஈழ வி.பு.எதிர்ப்பு

இவற்றினை இன்னும் மேலோட்டமாக இரண்டு எண்ணங்களின் அடிப்படையில் பார்க்கலாம்.

1- ஈழப்போராட்ட தேவை கருதிய தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பிற்கான தொடர்ச்சியான பங்களிப்பு

2- ஜனநாயக மறுப்புக்கு எதிரான போராட்டம் - மாற்றுக்கருத்து வேண்டிய முதல் பிரிவின் மீதான விமர்சனத்தை தவிர்த்து இரண்டாவது பிரிவான ஜனநாயக மறுப்புக்கு எதிரான கோசத்தின் கீழ் அணி திரளும் முற்போக்கு குழுக்களை நாம் கவனிப்போமாயின் புலம்பெயர்ந்த நாடுகளில் (ஐரோப்பா) இடம் பெறும் நிகழ்வுகளான நிதி சேகரிப்பு (அகதிகள் புனர்வாழ்வு) கண்காட்சிகள், ஊர்வலங்கள், ஒலி, ஒளிபரப்பு சேவைகள், சஞ்சிகை வெளியீடு என்பவற்றைக் குறிப்பிடலாம். ஒலி, ஒளிபரப்புச்சேவை தொடர் நிகழ்வுகளாகவும் ஏனையவை அவ்வப்போது தேவை கருதி செய்யப்படுபவை சஞ்சிகைகள், ஒலிபரப்பு சேவைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தமது நிலைப்பாடுளைத் தெளிவாகக் காட்டுகின்ற வகையில் வெளிவந்தன. ஆனால் பல சஞ்சிகைகள் காலப்போக்கில் செயலிழந்து போயின. இந்நிலைமை ஒரு புறம் யதார்த்தமானது என்று கொள்ளலாம். உயர்ந்த அரசியல் நோக்கமற்ற எந்த ஒரு வேலைத்திட்டமும் நீண்ட கால ஓட்டத்திற்குத் தாக்குப் பிடிக்க இயலாதவையாகி விடுகின்றன.

சஞ்சிகைகள் நின்று போனமைக்கு மேற்குறிப்பிட்ட காரண நோக்குடன், வெளியில் இருந்து பார்க்கும் போது குழுவிற்கான வேலைத்திட்டம், நடைமுறைப் பிரச்சினைகள், வாழ்நிலை, முரண்பாடுகள், பிரமுகர்த்தனம், போலித்தன்மையான தியாக வெளிப்பாடுகள், தலைமைக்கான போட்டி, சிலரைத் தனிமைப்படுத்த வேண்டும் என்ற சிலரின் அதீத வேட்கை என்பவற்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அமைப்புக்கும், சஞ்சிகைக்கும் பாரிய வேறுபாடு இருப்பதை நாம் கவனத்தில் கொள்ளலாம், சஞ்சிகையை கடந்து கொள்கை/நோக்கங்களின் அடிப்படையில் ஏற்பட்ட இணைவுகள் கூட குறுகிய காலத்தில் செயலிழந்து போயின. இதுசாரி அமைப்புக்கள் என இவற்றைக் கூற முடியாது போனாலும் சமூக மாற்றத்தை விரும்பும் முற்போக்கு எண்ணங்களைக் கொண்டவர்களாக இனங்காணப்பட்ட பலரது இணைவாக இவற்றைக் கொள்ளலாம். முயற்சி/நடவடிக்கைக்குரிய தெளிவான இயங்குநிலை கொண்ட நடைமுறைக்கு சாத்தியமான வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை நீண்ட காலம் நிலைக்கவில்லை. ஐரோப்பிய நாடுகளில் உருப்பெற்ற அமைப்புக்கள் பலமாக வளராமைக்கு:-

அமைப்பு முறையில் ஏற்பட்ட கோளாறு நேர்மையீனம், தளம் பற்றிய பிரேமை, அது பற்றிய பூச்சாண்டி காட்டும் தன்மை, விமர்சனப்போக்கு, அதிமேதாவித்தனம், வேலைக்காகப் பயன்படுத்தும் தன்மை, தலைமை பற்றிய உள்மன விருப்பு, காரணங்களாக இருக்குமா என்ற கேள்வியை உரியவர்களிடம் விட்டு வைக்கிறேன்.

இது தவிர புலம் பெயர்ந்த நாடுகளில் பல செயற்பாடுகள் தனிநபர்களின் முயற்சியில் சாத்தியமாகின்றது. மாற்றுக்கருத்திற்காக குரல் எழுப்புதல், மக்கள் தொடர்பு சாதனங்களில் மாற்றுக் கருத்துக்கான வாய்ப்பு ஏற்படுத்துதல், கருத்துப் பரிமாற்றத்திற்கான களம் அமைத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மறுக்கப்பட்ட ஜனநாயகத்தினை மீட்பதற்காய் உருவாக்கப்பட்ட பல அமைப்புக்கள் தாம் கடந்து வந்த பாதையில் மீண்டும் நடைபோடுகின்ற நிலைமைக்கு செல்லுகின்ற தன்மைகளையும் கூட அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இங்கு (நோர்வேயில்) இடதுசாரி அமைப்புகளில் "விமர்சனத் தளம்" என்றொரு நிகழ்வு இடம் பெறுவதுண்டு அமைப்புக்கள்/நபர்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய மீள் விமர்சனம் செய்தல் நபர்கள் அமைப்புகளிளிருந்து வெளியேறிய/வெளியேற்றப்பட்ட பின்பும் தமது கருத்தினை அமைப்பின் ஏதாவது ஒரு ஒன்று கூடலில் வெளிப்படையாக முன்வைப்பதற்குரிய உரிமையும், வாய்ப்பும் அளிக்கப்படுவது வழமை. இது போன்ற அம்சங்கள் புலம்பெயர் சூழலில் இயங்குகின்ற மாற்று அமைப்புகளிடம் இருந்திருக்குமாக இருந்தால் பல பிளவுகள், உடைவுகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

அவ்வகையான சக்திகளுக்கு இப்படியான ஏற்பாடுகள் மிகுந்த பயனளித்திருக்கக்கூடும்.

- தயாநிதி

# சாதனைப் பட்டியல்!

அம்மையாரின் அரசாங்கத்தின் சாதனைகளுள் அதிகம் பேசப்படாத ஒரு சாதனை பற்றி இங்கு குறிப்பிடவேண்டும். அதுதான் கொழும்பு நகர்ப் புற வீதிகள் அனைத்திலும் உள்ள வாகன நெரிசலை இரண்டு, மூன்று மடங்காக அதிகரித்தது.

ஜனாதிபதிப் பதவியை நீக்குவது அவசியமில்லை என்று கருதுபவர்களைக் கூட அது இல்லாமல் போனால் நல்லது என்று எண்ண வைக்கும் சன நெரிசலை அவரது கொள்ளுப்பிட்டி அலரி மாளிகை வாசஸ்தலம் ஏற்படுத்தி விட்டிருக்கின்றது.

அதுவும் காலை நேர காலி வீதி வாகனப் பயணிகளுக்கு ஜனாதிபதி என்பவர் மக்களை வாகனங்களுக்குள் வதைக்க வந்த ஒருவர் என்று நிச்சயமாகத் தோன்றத்தான் செய்யும்.

பொ.ஐ.முயின் "வரலாறு காணாத சன நெரிசலை"த் தந்த ஐந்தாண்டு நிறைவுக் கொண்டாட்டத்தில் அதன் சாதனைகளைத் தனது ஒன்றரை மணி நேரப் பேச்சில் ஹவ்லொக் மைதானத்தில் அம்மையார் பட்டியலிட்டுக் கொண்டிருக்கையில், வெளியே அவரது ஆட்சியின் இந்த வாகன நெரிசலை அதிகரித்த சாதனை தெளிவாக அரங்கேறிக் கொண்டிருந்தது.

ஆம், நெரிசலில் சிக்குப்பட்ட, அசைய முடியாமல் நின்று போய்விட்ட வாகன நெரிசலுக்குள் அகப்பட்ட, பஸ் வண்டிகளில் இருந்த பயணிகள், இறங்கி மைல்க் கணக்காக நடக்கத் தொடங்கி விட்டார்கள். வீடு போய்ச் சேர்வதற்குக் கால் நடையே இந்த நெரிசலில் வேகமானது என்ற அவர்களது முடிவு சரியென்று நிரூபிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 03 - 04 மணி நேரமாகப் புளுமெண்டோல் வீதி, அளுத்மாவத்த வீதி, களனி - ஜப்பான் பாலம் போன்ற பல வீதிகளில் வாகனங்கள் அசையவே இல்லை.

நெரிசலில் அகப்பட்ட எனது நண்பரான ஒரு வைத்தியர் இப்படிச் சொன்னார் :

எனது காரை வீதி ஓரமாக ஒரு சுவரை அண்டி நிறுத்தி விட்டு இறங்கி நடந்து வீடு போய்ச் சேர்ந்தேன். சாப்பிட்டு விட்டு, ஒரு சிறிது நேர குட்டித் தூக்கமும் போட்டுவிட்டுப் போய் அதை எடுத்து வந்தேன். கிட்டத்தட்ட 04 மணி நேரத்திற்குப் பிறகு.

சாதனை என்றால் இதுவல்லவோ சாதனை என்று வியந்து போயிருப்பீர்கள் - அன்றைய நெரிசலில் நீங்களும் அகப்பட்டிருந்தால் !

# யுக்திய

## தமிழ் மக்கள் கொழும்பில் வசித்தலும் தொடர்பூடகங்களின் பொறுப்பும்

தொடர்பூடகங்களின் சுதந்திரத்திற்காக போராடும் எமது நண்பர்கள் தொடர்பூடகங்களுக்கு பெரும் சக்தி உள்ளதென்பதை நினைவிலிருத்திக் கொள்ளல் வேண்டும். அரசியலமைப்பு, நீதிமன்று சாதனங்கள் போன்று சுதந்திரமான தொடர்பூடகம் அரச நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த உதவுகின்றன. இதனை நான்காவது அரசாக ஒரு சிலர் கருதுவதும் இதனாலேயே.

தொடர்பூடகவியலாளரின் கையிலிருக்கும் இந்தப் பலத்தை பொறுப்புடன் பயன்படுத்துவது தொடர்பூடக சுதந்திரத்தைப் பேண அத்தியாவசியமான நிபந்தனையாகின்றது. தொடர்பூடக சக்தியை பொறுப்பின்றி பயன்படுத்துவதாக மக்கள் அபிப்பிராயம் கொண்டால் அதன் விளைவாக தணிக்கை சரியானதென்ற கருத்து தோன்றும். இநநிலைமையின் விளைவுகள் பயங்கரமானதென்பதை மீண்டும் மீண்டும் கூறத் தேவையில்லை.

கடந்த 25ம் திகதி புதன்கிழமை "திவயின" பத்திரிகையின் தலைப்புச் செய்தி மேற்கூறப்பட்ட அக்கருத்தை மீண்டும் வலியுறுத்த சந்தர்ப்பத்தை அளித்துள்ளது.

"வாரத்தில் 1500 தமிழர்கள் கொழும்பில் பதியப்படுகின்றனர்" என்று அச்செய்தி குறிப்பிடுகின்றது. கொழும்புக்கு வாராவாரம் வருகை தரும் தமிழர்கள் பற்றிய பொலிஸ் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அச்செய்தி எழுதப்பட்டிருந்தது. செய்தி கொழும்பில் தமிழர் சனத்தொகை 65வீதமாக அதிகரித்துள்ளது என்ற வாக்கியத்துடன் நிறைவுறுகின்றது.

இந்நிகழ்வு பெரும் அச்சுறுத்தல் என்ற பொருள்படவே அச்செய்தித் தலைப்பும் செய்தியாக குறிப்பிடப்பட்டிருந்ததெனலாம். அவ்வாறில்லாவிட்டால் அது வெறும் தகவல் மட்டுமே. கொழும்பில் தமிழர் சனத்தொகை அதிகரிப்பதனால் சிங்களவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று சுட்டிக்காட்டவே இச்செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கலாம். அது மட்டுமன்றி கொழும்புக்குள் பிரவேசிக்கும் புலிக் குண்டுதாரிகளை பொலிஸார் கண்டு பிடிக்க இந்தத் தமிழர்கள் தடையாக உள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு தமிழர்கள் அங்கு யுத்தம் நிலவுதன் காரணமாகவே கொழும்புக்கு வருகின்றனர். அவர்கள் பெரும்பாலும் அகதிகள் என்ற நிலையிலேயே வருகை தருகின்றனர். இல்லாவிட்டால் வாழ்தலுக்கான பொருளாதாரத்தை ஈட்டும் வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவாகும். இவர்களில் பெரும்பாலானோர் வடக்கில் நிலவும் யுத்தத்துடன் எவ்வித தொடர்புமற்றவர்கள். அவர்கள் அப்பிரதேசத்தை கைவிட்டு நிம்மதியான வாழ்க்கையை வாழவே இங்கு வருகின்றனர். கொழும்பில் பாதுகாப்பு உண்டு என அவர்கள் நம்புகின்றனர். புலிகளின் தாக்குதல்கள் சில எப்போதாவது இடம்பெற்றாலும் மேற்கூறப்பட்ட யதார்த்தம் அவ்வண்ணமே நிலவுகின்றது.

இந்நாட்டில் சமாதானத்தை வேண்டும் எவரும் இவ்வாறு கொழும்புக்கு வருகை தரும் அப்பாவித் தமிழர்களைப் பாதுகாக்க முயலுதல் வேண்டும். அவர்களிடம் சுமுகத்தன்மையைக் காட்டுதல் வேண்டும்.

திவயின பத்திரிகையில் மேற்கூறப்பட்ட செய்தி மற்றும் அவ்வாறான பிற செய்திகள் தொடர்ந்து பிரசுரிக்கப்படுவதனால் இதற்கு முற்றிலும் மாறுதலான ஒரு நிலைமையே தோன்றும் எனலாம். இது மிக மென்மையாக அம்மக்களுக்கு எதிரான விரோத மனபான்மையை ஏற்படுத்துவதோடு கொழும்பில் தமிழர்கள் வசிப்பதற்கு எதிரான அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்பவும் உதவும். இவ்வாறான செய்திகள் எதிர்காலத்தில் மீண்டும் தமிழர்களைத் தாக்கி வட - கிழக்குக்கு விரட்டியடிக்கும் சூழ்நிலையை உருவாக்கவே வழிவகுக்கும். இது தனி அரசுக்கான புலிகளின் போராட்டத்துக்கு உதவி செய்யும் ஓர் நிலைக்கு ஒப்பானது.

மறுபுறம் நாட்டில் எந்தவொரு இடத்திலும் வசிக்கும் உரிமை எந்தவொரு மக்களுக்கும் இருக்க வேண்டும் என்பதனை சிங்கள இனவாதிகள் கூட ஏற்றுக்கொள்கின்றனர். மேற்கூறப்பட்ட செய்தி, ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமையை கேள்விக்குட்படுத்துகின்றது. அதுவும் ஈழவாதத்தை பலப்படுத்தும் எனலாம்.

நாம் திவயின பத்திரிகையின் குறிப்பிட்ட செய்தியை தெரிவுசெய்தது. இவ்வாறான ஒரு செய்தி மட்டுமே அதில் பிரசுரமாகியிருக்கிறது என்ற கருத்தில் அல்ல. ஆனால், அண்மையில் பிரசுரிக்கப்பட்ட செய்திகளில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய மோசமான செய்தி இதுவொன்றேயாகும்.

எமது தொடர்பூடகவியலாளர்கள் இதைவிட பொறுப்புடன் செயற்பட வேண்டும் என நாம் எண்ணுகின்றோம். அவ்வாறு செய்யாதுவிடலானது இச்சமூகத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் தன்கையாலேயே தன் கழுத்தை நெரித்துக் கொள்வதற்கு ஒப்பாதனாகும். அது மட்டுமன்றி, உண்மையில் அது ஒரு மோசமான குற்றமுமாகும்.

**(99.08.29இல் வெளியான யுக்திய பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் இது)**

நன்றி - நூலகத்திட்டம்.



# ஒரு பெண் எழுத்தாளரின் அறை கூவல்


அன்பான கடவுளும் பயங்கரமான இரவும்

" அன்பான கடவுளும் பயங்கரமான இரவும் " ஒரு இலக்கியப் படைப்பல்ல. அது ஒரு இலங்கைப் பெண்ணின் தனித்த அபிப்பிராயம் மட்டுமே. அச்சு தொடர்பூடகத்தில் புதிய பயணத்தை தேடிச் செல்லும் பரீட்சார்த்த முயற்சி.

கடந்த காலத்தில் எனது அனுபவங்களையும் கருத்துக்களையும் பத்திரிகைகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளினூடாக வெளிப்படுத்தி வந்தேன். தற்போது நான் அத்தொடர்பூடகங்களிலிருந்து விலகி நிற்பதால் இவ்வாறானதொரு வெளிப்பாட்டு முறையை கட்டியெழுப்பும் தேவையை உணருகின்றேன்.

ஆனால்....

நூலக சேவைகள் மன்றம் இந்த படைப்பு சிறுகதையா, நாவலா என வினவியது. ஐ.எஸ்.பி.என். இலக்கத்தை பெற வேண்டியிருந்ததால் அங்கு என் படைப்பு " சிறுகதை " என முத்திரை குத்தப்பட்டது.




நூலை அச்சிட வெளியீட்டாளர் ஒருவர் இல்லாததால் அச்சு செலவை ஏற்கவும் வேண்டியேற்பட்டது.

கலாசார அமைச்சின் " எழுத்தாளர்களுக்கான உதவி திட்டத்தின் " கீழ் நூலை கொள்வனவு செய்ய- ( கிடைத்த தகவலின்படி) ஆய்வாளர் குழு இரு முறை சரிபார்த்த பின் - " சரியான தரத்தை கொண்டிராததால் " (?) நூலை கொள்வனவு செய்யாது நிராகரித்துவிட்டது.

கொழும்பு பொது நூலக நூலகர் " இவ்வாறான சுருக்க நூலை வாசகர்கள் வாசிக்க மாட்டார்கள் என்பதை தான் நன்கு அறிவதால்" 20 நூல்களை மட்டும் கொள்வனவு செய்ய ஒப்புக்கொண்டார்.

அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் ஊடகங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய பெண்கள்,ஆண்கள் 15 பேருக்கு மார்ச் மாத முதல் பாகத்தில் நூல்களை விற்பனை செய்ய முடிந்தது. எனினும், ஓகஸ்ட் மாத நடுப்பகுதி வரை அவர்களிடமிருந்து எந்தவிதமான நூல் பற்றிய அபிப்பிராயங்களும் கிடைக்கவில்லை.

மார்ச் மாத முற்பாகத்தில் கொடகே புத்தக நிலையத்திற்கு 50 நூல்களை வழங்கினேன். ஓகஸ்ட் மாதம் நூல்கள் விற்பனை செய்யப்பட்டதா என ஆராய்ந்து பார்த்த போது அப்புத்தகங்கள் 50ம் பத்திரமாக நிலைய களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டிருந்ததாக அறிய முடிந்தது.

" இனந்தெரியாத பெண் ", வெளியேற்றப்பட்ட பெண் " ஆகிய நூல்கள் கலாசாரத்தை சீரழிப்பதனால் அவற்றை விற்பனை செய்ய அனுமதிக்க முடியாதென தயாவங்ச ஜயக்கொடி நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டிருந்ததால் இந்நூலை அங்கு எடுத்துச் செல்லவில்லை.

பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பிடம் இந்நூலை விற்பனை செய்ய உதவுமாறு கோரிக்கை விடுத்ததன் பிரதிபலனாக அவர்கள் 10 நூல்களை கொள்வனவு செய்ய பேச்சளவில் ஒப்புக் கொண்டுள்ளனர்.

குருணாகலை பெண்கள் அபிவிருத்தி மன்றமும் 10 நூல்களை கொள்வனவு செய்வதாகக் கூறியுள்ளது.

விபவி கலாசார நிலையமும் 40 சதவீத விலைக்கழிவுடன் அவர்களது புத்தக அலுமாரியில் 10 புத்தகங்களை வைக்க ஒப்புக்கொண்டுள்ளது.

இவற்றைத் தவிர.......

தமிழ் மாற்றுப் பத்திரிகையான சரிநிகரில் ரத்னா இந் நூல் பற்றி விமர்சனக் குறிப்பொன்றை எழுதியுள்ளார் யுக்திய பத்திரிகையில் சீதா ரஞ்சனியும் விமர்சனம் எழுதியுள்ளார்.

தற்போது கிடைக்கப்பெற்ற நூல் பற்றிய அபிப்பிராயங்கள் இவை மட்டுமே.

மேலும்.........

"அன்பான கடவுளும் பயங்கரமான இரவும்" நூல் பற்றிய உங்களது கருத்துக்கள், விமர்சனங்கள், நிராகரிப்புகள் என்பனவற்றை அறிய ஆவல்.

1000 பிரதிகளை அச்சடிக்க ரூ. 30,000 செலவாகியுள்ளது. அதனால் அன்பர்களுக்கு இலவசமாக நூலை வழங்க இயலாமற் போனதற்கு தயவு கூர்ந்து மன்னிக்கவும்.

நான்,

..............................

811, சீ, ஒரேன்ஞ்ஹில் தோட்டம்,

தேவத்தை,

ராகம

99-08-20

# X எனும் பெண்ணின் நாள் குறிப்பேட்டிலிருந்து

மே 10

இன்று நித்திரை விட்டு எழும்ப நேரம் பிந்தியதால், அலுவலகத்திற்கு செல்ல நேரமாகிவிட்டது. அலுவலகம் சென்றவுடன் Short Leave போடவும் முடியவில்லை. ஏனெனில் என் Short Leave அனைத்தும் முடிந்து விட்டன. இது பற்றி தலைவரிடம் சொல்ல சென்றேன். அவர் சிரித்துவிட்டு. நீ நேரம் பிந்தி வருவதை நானும் கண்டேன். ஊழியர்கள் அனைவரும் நேரத்தோடு அலுவலகம் வர அலுவலக போக்குவரத்துக்கென ஒரு வாகனத்தை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். பின்னர் வீதியில் தூசு துகள்களுக்கிடையில் வந்தால் உன் அழகு கெட்டுப் போய்விடும் என்றார். எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

மே 11

இன்று வேலை கொஞ்சம் அதிகம். அதனால் முழு நாளும் தலைவலி. என் மேசைக்கருகில் இருக்கும் பீற்றர், நான் எழுத வேண்டிய கடிதங்களை எழுதித் தருவதாக அக்கறையுடன் கூறினான். எங்கள் பியோன் தனது வேலைகளை ஒதுக்கி விட்டு ஓடிச் சென்று தலைவலி மாத்திரைகளை வாங்கி வந்தான். பார்க்கவே பாவமாக இருந்தது. தலைவலி சுகமாகியவுடன் நானும் சாந்தியும் சட்டைத் துணி வாங்குவதற்காக வெளியில் செல்லும் போது புத்தகத்தில் கையொப்பமிட்டு செல்லுமாறு ர்நயன ஊடநசம கூறிவிட்டு அவருக்கு மிட்டாய்கள் இரண்டு வாங்கிவரச் சொன்னார்.

மே 12

இன்று சனிக்கிழமை. நானும் ரகுவும் கடைத்தெருவுக்கு சென்றோம். அவர் எனக்கு ரூ.650 க்கு சட்டை ஒன்று வாங்கித் தந்தார். பரவாயில்லை. அவரது தெரிவு. நான் ஒன்றும் சொல்லவில்லை. பஸ்ஸில் சரியான நெரிசல். என் கையில் இருந்த பொருட்களை பஸ்ஸில் அமர்ந்திருந்த நடுத்தர வயது மனிதர் வாங்கிக் கொண்டார். ரகு பாவம். எனக்கு சரியான சிரிப்பு. பஸ்ஸை விட்டு இறங்கிச் செல்லும் போது யாரோ ஷ்,ஷ் என்றார்கள். கறுப்பு கண்ணாடி அணிந்த மன்மதன் புன்னகை பூத்தான்.



மே 13

இன்று, நானும் அக்காவும் கோவிலுக்கு போனோம். அம்மா, தம்பியை அழைத்துக் கொண்டு போகச் சொன்னார். எங்கள் பின்னால் சிறு பையன்கள் ஏதோ உளறிக் கொண்டே வந்தார்கள். தம்பிக்கு கடும்கோபம். வீட்டிற்கு திரும்பும் போது இரவாகி விட்டது. ஓட்டோவில் செல்ல ஆட்டோக்காரன் 100 ரூபாய் தருமாறு கேட்டான். நானும் அக்காவும் சற்று கெஞ்சியவுடன் 60 ரூபாய்க்கு ஒத்துக்கொண்டார். அநியாயம், தெரிந்திருந்தால் கட்டையாக பாவாடை போட்டுக்கொண்டு வந்திருக்கலாம் என அக்கா கூறினார்.

மே14

இன்று என் நண்பியுடன் கூட்டமொன்றுக்கு சென்றிருந்தேன். ஏதோ என்.ஜி.ஓவாம். மனித உரிமைகள், பெண்ணுரிமைகள் பற்றி ஆண்கள் சிலர் உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. கூட்டம் நிறைவடைந்தவுடன் கூட்டத்தில் உரையாற்றியவர், என்னிடம் தன்னுடைய உரை பற்றி அபிப்பிராயம் கேட்டார். நான் எதுவும் விளங்கவில்லையென்றேன். அடுத்த சனிக்கிழமை நான் சும்மாதான் இருப்பேன். நீங்கள் வாருங்கள் நான் எல்லாவற்றையும் விளக்கப்படுத்துகின்றேன் என்றார்.

# X என்ற அப் பெண்ணிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளும் அவர் அளித்த பதில்களும்

**உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. வரலாறு முழுவதும் பெண்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கருதப்பட்டு வருகின்றனர்.**

**இந்நிலைமையை மதம், கலை, நிறுவனம் ஆகிய அனைத்திலும் காணலாம். வேலைத் தளங்களில் பெண்கள் இரண்டாம் பட்சமாகவே கருதப்படுகின்றனர். ஆண்களை விட குறைந்த சம்பளம் பெண்களுக்கு. பதவி உயர்வுகளில் முதன்மை பெறுவதும் ஆண்களே. பெண்களுக்கு அலுவலகத்தில் நட்பை பேண முடியாது. வேலை செய்யாது நேரத்தைப் போக்குகின்றனர் என்பர். பெண் ஊழியர்களிடம் தமது ஆணாதிக்கத்தை திணிப்பர்அல்லவா?**

நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு புரியவில்லை. எங்கள் வேலைத் தளத்தில் அப்படியில்லையே. ஒரு வேளை பிற அலுவலகங்களில் அப்படி இருக்கக் கூடும். எங்கள் பொஸ் தொடக்கம் பியூன் வரை என்னுடன் மிக மிக அன்பாய் பழகுகின்றனர். நீங்கள் கூறுவது போல் எந்தப் பிரச்சினையையும் நான் சந்தித்ததில்லை.

**நீங்கள் ஒருவரை காதலிக்கின்றீர்கள் அல்லவா? உங்கள் விடயம் தொடக்கம் எந்தப் பிரச்சினையானாலும் உங்கள் காதலர் அல்லவா தீர்மானம் எடுக்கிறார். நீங்கள் அதன்படி செயற்படுகின்றீர்கள். நீங்கள் என்ன உடை உடுக்க வேண்டும். எங்கு போக வேண்டும். யாரோடு உடன் செல்ல வேண்டும் இவையெல்லாவற்றையும் தீர்மானிப்பது அவர்தானே?**

ஐயோ. இவற்றையெல்லாம் யார் கூறினார்கள்? அவர் அப்படியில்லை. அவர் தான் என்னை எல்லா இடத்திற்கும் கூட்டிப் போவார். அவரது



நண்பர்களிடம் என்னை அறிமுகப் படுத்துவார். நான் கஷ்டப்படுவதை அவர் பொறுப்பதேயில்லை. உடைகளை கழுவுவதற்குக் கூட கோபித்துக் கொள்வார். ஏனெனில் விரல் நகங்கள் அசிங்கமாகிவிடுமாம். அவ்வளவு நல்லவர் அவர்.

**சமூகத்தில் பெரும் அசமத்துவம் நிலவுகின்றது. இதனால் பெண்கள் தான் பெரும்பாலும் துன்பத்திற்கும். பக்கச் சார்பிற்கும். அழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர். இவர்கள் இதனால் பாதிப்படைவதுடன். மேற்கூறப்பட்ட விடயங்களினால் பாதிப்புறும் ஆண்களின் அழுத்தத்திற்கும் மீண்டும் உள்ளாகின்றனர்.**

நீங்கள் எப்பொழுதும் மறையான பக்கங்களையே எதிலும் காண்கிறீர்கள். மனிதர்கள் அவ்வளவு மோசமானவர்கள் அல்லர். பஸ்ஸில் செல்லும்போது பாருங்கள். ஆண்கள் எங்களுக்கு இடம் தருகிறார்கள். பொருட்களை எடுத்துச் செல்லும் போது அவற்றை உடனடியாக வாங்கிக்கொள்கிறார்கள். எங்கு சென்றாலும் அவர்கள் சுமுகமாகப் பழகுகிறார்கள். உதவி செய்கிறார்கள். ஓட்டோவில் செல்லும் போது ரேட் அதிகம் என்றால் கூட அவர்கள் ரேட்டை குறைக்கின்றார்கள்.

**சமூகத்தில் பாலியல் பெண்களால் பேசப்படக் கூடாத விடயமாகும். பாலியல் பற்றி சுயமான முடிவு எடுக்கும் சுதந்திரம் பெண்களுக்கு இல்லை. பெண்களை பாலியல் பண்டமாகவே ஆண்கள் கருதுகின்றனர். அதே நேரம் பாலியல் பற்றி சுயமாக தீர்மானம் எடுக்கும் பெண்கள் விபச்சாரிகளாக . மோசமானவர்களாக ஆண்களாலேயே முத்திரை குத்தப்படுகின்றது அல்லவா?**

எனக்கு இது பற்றி ஒன்றும் தெரியாது. நான் இவ்விடயம் பற்றிக் கதைக்க விரும்பவில்லை.

மேற்கூறப்பட்டவை நம் சமூகத்தைச் சேர்ந்த, ஒரு நடுத்தர வர்க்க, வேலைக்குச் செல்லும் பெண்ணின் தினக் குறிப்புகளும், அவருடனான உரையாடலும் ஆகும். இந்த உரையாடலும் தினக்குறிப்பேடும் அன்றாடம் நாம் முகம் கொடுக்கும் ஆணாதிக்க சம்பவங்களுக்கு சிற்சில உதாரணங்கள் மட்டுமே.

" எந்த விடயத்திலும் எதிர்த்துப் போராடுவதை விட தோல்வியை ஏற்றுக்கொள்வது வாழ்க்கையை சுகப்படுத்தும்" என யாரோ(?) ஒரு பெண் கூறியதுபோல் நம் சமூகத்தில் பல பெண்கள் இப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதேவேளை போராடும் பெண்கள் மோசமானவர்களாக சித்திரிக்கப்படுகின்றார்கள்.

எத்தனை பெண்கள் ஆணாதிக்கத்தை விளங்கிக் கொள்கிறார்கள்? அறிந்து விடுபடப் போராடுகின்றார்கள்?

"நீ அழகாக இருக்கிறாய்" என ஒரு பெண்ணைப் பார்த்து, ஆண் குறிப்பிடுகின்றான் எனின், அப்புள்ளியிலிருந்தே ஆணாதிக்கம் பிரயோகப்படத் தொடங்குகின்றது.

அதன்பின் அது காதலாக, திருமணமாக ஒவ்வொரு கட்டமைப்பிலும் மீளமைக்கப்படுகின்றது. ஆபாசத்திற்கும் அழகுக்கான மதிப்பிற்கும் விதைகள் இங்கிருந்தே தூவப்படுகின்றன.

( மேற்கூறப்பட்ட தினக்குறிப்பேட்டில் குறிப்பிடப்படும் விடயங்களின்படி X எனும் பெண் அழகி என்பது நிருபணமாகின்றது. )

ஒரு பெண்ணின் திறமைக்கு ஆர்வத்துக்கு மதிப்புக் கொடுக்காத சமூகம் 36-28-36க்கு பெரும் மதிப்பளிக்கின்றது.

இறுதியாக ஓ எனும் பெண்ணிடம் நீங்கள் அழகாக இருப்பதற்கு பெருமைப்படுகிறீர்களா என வினவியப் பொழுது அவர் பெருமையுடன் பதில் கூறத் தொடங்கினார்.

'நீ அழகாக இருக்கிறாய்' எனக் கூறும் போது எரிந்து விழும் பெண்கள் உள்ள சமூகத்தில் மட்டுமே எத்தனையோ பெண்களின் தினக்குறிப்பேடுகளும், வாழ்க்கை முறைகளும் பெரும் மாற்றத்தை நோக்கிச் செல்லும் எனலாம்.

ரத்னா

நன்றி - நூலகத்திட்டம்





# பொ.ஐ.மு.வின் ஐந்து வருட காட்டாட்சிக்கு ஒரு சடங்கு!

கடந்த 21ஆம் திகதியன்று பொ.ஐ.மு தனது ஆட்சியின் ஐந்தாண்டுப் பூர்த்தியை வெகு கோலாகலமாகக் கொண்டாடியது. அன்றைய தினம் சில பெரும்தெருக்களை போக்குவரத்துத் தடைசெய்து, பெரும் ஊர்வலம் நடத்தி, நாடு முழுக்க போஸ்டர்கள் (இதில் பெயருக்கு சில தமிழ் போஸ்டர்களைத் தவிர சகலதும் சிங்களத்தில் தான்) வெளி மாவட்டங்களிலிந்து பந்தோபஸ்துக்கு பொலிஸ் இராணுவத்தினரை கொழும்பில் குவித்து பிரமாண்டமாக பரபரப்பாக நடத்தி முடித்தது.

ஆட்சிக்கு வருமுன் மக்களிடம் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் இன்னமும் ஒன்றைக் கூட நிறைவேற்றாத நிலையில் ஆட்சியின் ஆயுசு முடிவடையப் போகும் தருணத்தில் இப்படி ஒரு களியாட்டத்தை நடத்தி தனது சாதனைகளென பறைசாற்ற முயன்றது.

சந்திரிகா அம்மையார் தனது சாதனைகளாக என்னத்தைத் தான் அப்படி கூறப் போகிறார் என மிக விழிப்பாக பார்த்துக் கொண்டிருந்தனர் பலர். ஏனெனில் ஆட்சிக் காலம் முடிந்து போகும் தருவாயில் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எதைக் கூறப்போகிறது என்பது சகலரதும் எதிர்பார்ப்பாக இருந்தது.

இன்னும் ஒரு வருடம் தான் அரசாங்கத்துக்கு பாக்கி உள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் போது தான் வரும் நாட்களில் தாம் செய்ய விருப்பதாக ஒரு பட்டியல் இடுவது வழக்கமானது தான். தமது அரசாங்கம் செய்து முடித்தாகப் பெருமையுடன் கூறும் ஒரு விடயம் ஊழலையும் மோசடிகளையும் ஒழித்தது என்பதையே. ஒவ்வொரு வருடமும் தவணை கேட்பது வழக்கம். இனி வரப்போகும் வருடம் தேர்தல் வருடம். இன்னுமொரு சந்தர்ப்பத்தை தரக்கூறியும், பாதியில் தமது முயற்சியை பாழடிக்க விடாதீர்கள் என்றும் நிச்சயம் கூறத் தான் போகிறது பொ.ஐ.மு. இது சகல அரசாங்கங்களும் தமது அந்திம காலத்தில் புலம்புவது தான்.

இந்தளவு வாக்குறுதிகளை வழங்கிய கட்சியையோ, வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் மீறிய கட்சியையோ வரலாற்றில் வேறொன்றையும் காண மாட்டீர்கள்.

1995 ஒகஸ்ட் 19ஆம் திகதியன்று அரசாங்கத்தின் ஒரு வருட பூர்த்தி பற்றி சந்திரிகா அம்மையார் வெளியிட்ட அறிக்கையை இங்கு கவனிப்போம்.

"ஒரு வருடத்துக்கு முன்னர் மக்களின் முகங்களில் நிலைபெற்றிருந்த பீதி பயம் இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அது முதல் முக்கிய பணியாக இருந்தது. அந்த பீதி, பயத்தை போக்கியது பொ.ஐ.முவின் மாபெரும் வெற்றி. அந்த பீதியை ஒழிக்க நாங்கள் செய்த முதற் காரியம் அவசரகாலச் சட்டத்தை ஒழித்தது. இன்று வடக்கு கிழக்கு போன்ற பிரச்சினை உள்ள பகுதிகளில் மட்டும் தான் அவசரகாலச் சட்டத்தை அமுலில் வைத்திருக்கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இனவாதத்தை ஒழித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது என்பது எமது தேர்தல் வாக்குறுதி. எதிர்காலத்தில் அதற்கு ஒரு நல்ல பதில் கிடைக்கக்கூடிய வகையில் மக்கள் தற்போது அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். காணாமல் போனோர் பற்றிய விசாரணை குழுக்கள் மூன்றை இயக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். ஊழலை ஒழிப்பதென்பது எமது முக்கிய வாக்குறுதி.எனவே தான் எமது அரசாங்கத்தின் முதலாவது சட்ட மூலமாக அதனைக் கொண்டு வந்தோம்...."

இரண்டாவது வருடம் பூர்த்தியடைந்த போது அதாவது 1996 ஒகஸ்ட் 19ஆம் திகதியன்று அம்மையார் வெளியிட்ட அறிக்கை இப்படி இருந்தது:

"மிகவும் கடினமானதும், நீண்டதுமான பயணத்தின் முக்கிய சந்தியை நாங்கள் வந்தடைந்திருக்கிறோம். மக்கள் கொடுத்த வரத்தின் இரண்டாவது வருட பூர்த்தியின் வெற்றிக் களிப்பு இது. அது எமது மக்கள் இரண்டு வருடகாலமாக சுதந்திரம், சமாதானம், ஜனநாயகம் எனப் பெற்ற வெற்றிக்களிப்பு இது. எமது மக்கள் இரண்டு தசாப்தங்களாக அனுபவித்து வந்த துயரத்திலிருந்து விடுபட்ட களிப்பு. கழிந்த இரண்டு தசாப்தங்களில் யுத்தம் தோன்றியது குறித்தும், அது நாடு முழுவதும் பாதித்த விதம் பற்றியும் சிந்திக்கும் போது யாழ்ப்பாணத்தைக் கைப்பறியதானது வெறும் சம்பவம் மட்டுமல்ல. அத்தோடு இரண்டு வருடத்தில் அரசாங்கம் ஈட்டிய வெற்றி குறித்து மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அரசியற் தலைவர்களின் படுகொலைகள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணைக் குழுவின் காரணமாகவும் எமது சமூகம் ஜனநாயகத்துக்கு அடித்தளம் இட்டுள்ளது...."

இரண்டாவது வருடத்தின் போது இப்படிப் பேசினார் என்றால் மூன்றாவது வருடப் பூர்த்தியின் போது அவர் ஒரு அறிக்கையையும் வெளியிடவில்லை.



ஆனால் "சாம தவளம"வை 1997 ஒகஸ்ட் 26 அன்று ஆரம்பித்து தனது மூன்று வருடகால ஆட்சியின் வளர்ச்சி குறித்து ஒரு உரையை ஆற்றியிருந்தார். "எமது அரசாங்கம் பதவியிலமர்ந்து மூன்று வருடம் பூர்த்தியடைகின்ற இவ்வேளையில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் இறுதிக் கட்டத்தைப் பூர்த்தி செய்யும் தருணத்திலேயே இதில் கலந்து கொண்டிருக்கிறேன். இந் நாட்டுக்கு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகளைத் தற்போது ஆரம்பித்திருக்கிறோம். முழு நாட்டையும் ஐக்கியப்படுத்தக்கூடிய அரசியலமைப்பை எதிர் வரும் ஆண்டுக்குள் முன் வைப்போம். மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் ஜே.ஆரின் இந்த அரசியலமைப்பை தூக்கியெறிந்துவிட்டு சகல மக்களும் சமாதானமாக வாழக்கூடிய வகையிலான ஒரு அரசியலமைப்பை 1998க்கு முன்னர் கொண்டு வந்து விடுவேன்..."

அமைதியானதும் சமாதானமானதுமான ஒரு நாட்டை உருவாக்குவதாக அப்படிக் கூறியது 1997இல்.

1998 இல் அரசாங்கத்துக்கு 4 வருடங்கள் பூர்த்தியானது. அப்போதும் அவர் அறிக்கை எதனையும் வெளியிட்டிருக்கவில்லை. 1998 ஒகஸ்ட் 28ஆம் திகதியன்று அனுராதபுரத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் மாநாட்டின் போது 4 வருட வளர்ச்சி குறித்து உரையாற்றியிருந்தார்.

".... சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படையான தீர்வுகளை நான் வழங்குவதாக தேர்தல் மேடைகளில் வாக்குறுதி அளித்திருந்தேன். லஞ்சம், ஊழல், என்பவற்றை ஒழித்து சாத்தியமான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதாகவும் உறுதியளித்திருந்தேன். பதவியில் அமர்ந்த 24மணி நேரத்தில் வன்முறையை ஒழித்தேன். மக்கள் அதனால் நன்மை அடைந்தார்கள். யுத்தத்தில் 80 வீத வெற்றியை அடைந்திருக்கிறோம். மிகுதி காலத்துக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து விடுவேன். அடிப்படைப்பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு கண்டு விட்டு தான் மீண்டும் நாங்கள் உங்களிடம் வருவோம். நாங்கள் இதற்காக ஒரு அரசியல் தீர்வு யோசனையை முன்வைத்திருக்கிறோம். அதனை நிறைவேற்ற ஐ.தே.க.வின் 16 வாக்குகளே தேவையாக இருக்கிறது...."

அது நான்கு வருடங்கள் பூர்த்தியான போது சொன்ன கதை. இன்று ஐந்து வருடங்கள் ஆகி விட்டிருக்கிறது. முதலாவது வருடத்தில் யுத்தத்துக்கு முடிவொன்றைக் காண்பதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கை எதிர்காலத்தில் அதன் வெற்றியை மக்கள் அனபவிக்கப் போகிறார்கள் என்று. இன்று இன அழிப்பு யுத்தத்தின், விளைவை முழு நாடுமே எதிர் கொண்டு விட்டிருக்கிறது. இரண்டாவது வருடம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதை பெரிய வீறாப்புடன் கூறிக்கொண்டது. ஆனால் அரசு யுத்தத்தில் பெற்ற அடிகளும், இழப்புகளும் முழு உலகமும் அறிந்தது. இரண்டாவது வருடம் போலி சமர்தான பிரச்சாரத்துக்கென வெண்தாமரை இயக்கத்தையும், மூன்றாவது வருடம் "சாம தவளம" திட்டத்தையும் நடத்தி அரசியலமைப்பை முன்வைப்பதன் மூலம் 1998இல் சமாதான நிலைமை ஏற்படுத்துவதாகக் கூறியிருந்தார். நான்காவது வருடமோ அந்த சமாதானத் திட்டத்தை நிறைவேற்ற ஐ.தே.க.வின் 16 வாக்குகள் தேவைப் படுவதாகத் தெரிவித்திருந்தார். இன்று 5வது வருடத்திலும் ஜனாதிபதி அம்மையார் பாடுவதும் அதே பல்லவியைத்தான். 1996 இல் "வெண் தாமரை", 1997 "சாம தவளம", 1999 "எங்கள் குரல்", இதிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகப் புலனாகிறது பொ.ஐ.மு.வுக்கு தமது வாக்குறுதிகள் நினைவுக்கு வருவது அதன் வருடப் பூர்த்திகளின் போது மட்டும் தான்.

இன்றும் "சமாதான சௌஜன்ய" இலங்கையை உருவாக்குவதை விட்டு, "அரசியல் தீர்வு யோசனை" கூட கனவாகியுள்ள நிலை. முடிவில்லாமல் யுத்தம் தொடர்கிறது. இனஅழிப்பு என்பது மிகவும் சூசகமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அவசரகாலச் சட்டம் நாடு முழுவதையும் ஆட்சி புரிகிறது. அவசரகாலச் சட்டம் தமிழ் மக்களை ஒடுக்க மட்டுமல்ல தேர்தலை ஒத்தி வைக்கவும் பயன்படுத்தப்பட்டது. தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களையும், வெகுஜன எதிர்ப்புப் போராட்டங்களையும் நசுக்கவும் அது பயன்படுத்தப்பட்டது. மக்கள் கருத்தறியும் சுதந்திரத்தை மறுக்கவும் (தணிக்கைக்கூடாக) அது பயன்படுத்தப்பட்டது.

காணாமல் போனோர் பற்றிய விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட எந்தப் படையதிகாரியும் தண்டனைக்குள்ளாக்கப்படவில்லை. மாறாக அவர்கள் பதவியுயர்வுகளுடன் வடக்கு கிழக்கில் தங்களின் நரவேட்டையைத் தொடர்ந்து வருகின்றனர்.

லஞ்சம், ஊழல் பற்றிய விசாரணைகள் கிடப்பில் கிடக்கின்றன. லஞ்ச ஆணைக்குழு திணைக்களத்தை இல்லாது செய்துவிட்டு ஒரு நிலையான ஆணைக்குழு அமைப்பதாகக் கூறியது அரசாங்கம். ஆனால் நடந்தது இருந்த திணைக்ளமும் இல்லாமல் செய்யப்பட்டது தான். இன்று நாட்டில் ஊழல்களை விசாரணை செய்ய எந்தத் தளமும் இல்லை என்பது தான் உண்மை.

அரசியற் தலைவர்களின் படுகொலை பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு விட்டது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை 1995 யூலை 15 ஒழிப்பதாகக் கூறியமை இன்று வரைக்கும் செய்யப்படாதது மட்டுமன்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையைப் பிரயோகித்து தமது அதிகாரத்துவத்தை பலப்படுத்தி வருகிறது. அதேவேளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களையும் செய்து வருகிறது.

ஐ.தே.க.வின் திறந்தபொருளாதாரக் கொள்கையைக் கடுமையாகக் கண்டித்த சந்திரிகா, தனியார் மயத்தை நிறுத்துவதாக ஐந்து வருடங்களுக்கு முன்னர் கூறினார். 1994 தேர்தல் கிட்டிய போது அந்த நிலைப்பாட்டிலிருந்து மாறி "திறந்த பொருளாதாரத்துக்கு மனித முகம்" தருவதாகக் கூறினார். இன்று ஐ.தே.க.வை விட வேகமாக நாட்டின் தேசிய வளங்களை தனியாருக்கு விற்றுவிட்டு எஞ்சியதையும் விற்பதற்காக PERC போன்ற நிறுவனங்களை நிறுவி முழுக்க முழுக்க நாட்டை அந்நிய ஏகாதிபத்தியம் சுரண்ட வழிதிறந்துவிட்டு வருகிறார்.

இந்த நாட்டு மக்கள் சந்திரிகாவிடம் பாண் விலையை 3.50க்கு குறைக்கும்படி ஒரு நாளும் கோரியதில்லை. தேர்தல் வாக்குறுதியாக தானாக முன்வந்து 3.50க்கு பாண் தருவதாகக் கூறியதும் சந்திரிகா தான். ஆனால் இன்று பாணின் விலை 8.50இல் போய் முடிந்துள்ளது என்பது தான் உண்மை. அரிசியின் விலை 115வீதத்தால் அதிகரித்தள்ளது. பால் மாவின் விலை 75 வீதத்தால் அதிகரித்துள்ளது. பஸ் கட்டண உயர்வு 140 வீதத்தால் உயர்ந்துள்ளது. (இந்தத் தரவைக் கூறியிருப்பவர் அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ)

தாம் ஆட்சியில் அமர்ந்தால் அமைச்சர்களின் எண்ணிக்கையை 20ஆக ஆக்கி தேவையற்ற கோடிக்கணக்கான செலவை குறைப்பதாகத் தெரிவித்த பொ.ஐ.மு. அரசாங்கம், இன்று அமைச்சர்களின் எண்ணிக்கையை 75ஆக உயர்த்தியுள்ளது.

இப்படி மீறப்பட்ட வாக்குறுதிகளையும், அரசின் மக்கள் விரோத செயற்பாடுகளையும் பெரும்பட்டியலிட்டு தரவுகளாகக் கூறிக் கொண்டே போகலாம். ஆனால் சாராம்சத்தில் எல்லாம் ஒன்று தான். மீண்டும் தேர்தல், வாக்குறுதி, ஆட்சி, அதிகாரம் என அவர்கள் அவர்களது நோக்கங்களை செவ்வனே செய்ய மக்களும் அதே சுழற்சி முறையில் நம்பிக்கை, தேர்தலில் வாக்கிடுதல், உரிமைகளை பலிகொடுத்தல் எனத் தொடரத்தான் போகிறது.

அம்மையார் 21ஆம் நூற்றாண்டில் எல்லாம் தீர்ந்து விடும் என்றும், இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வு கிட்டிவிடும் என்றெல்லாம் கூட புலம்பித் தள்ளியுள்ளதும் இந்த ஐந்தாண்டு "சடங்கின்" போது தான். ஆனால் யார் நம்புவர். நம்பி கெட என்ன மிச்சமுள்ளது.

ஆக மொத்தத்தில் அரசாங்கமும் அதன் கூட்டாளிக் கட்சிகளும் மீண்டும் மக்களை ஏமாற்றுவதற்கான "நாள் குறிப்பு" விழாதான் அன்று நடந்துள்ளது. 21ஆம் நூற்றாண்டின் முதல் வருடம் இலங்கைக்கு தேர்தல் வருடம். ஓட்டுப் பொறுக்கிகள் ஜாக்கிரதை.

-ஜென்னி

அம்மையார் 21ஆம் நூற்றாண்டில் எல்லாம் தீர்ந்துவிடும் என்றும், இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வு கிட்டிவிடும் என்றெல்லாம் கூட புலம்பித் தள்ளியுள்ளதும் இந்த ஐந்தாண்டு "சடங்கின்" போது தான். ஆனால் யார் நம்புவர். நம்பி கெட என்ன மிச்சமுள்ளது.

ஆக மொத்தத்தில் அரசாங்கமும் அதன் கூட்டாளிக் கட்சிகளும் மீண்டும் மக்களை ஏமாற்றுவதற்கான "நாள் குறிப்பு" விழாதான் அன்று நடந்துள்ளது. 21ஆம் நூற்றாண்டின் முதல் வருடம் இலங்கைக்கு தேர்தல் வருடம். ஓட்டுப் பொறுக்கிகள் ஜாக்கிரதை.

நன்றி - நூலகத்திட்டம்



# சிங்களச் சிறுகதைகள் பதினைந்து சின்னத் திரையில்

*தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி பெரும் கதையாடல்களுக்குட்பட்ட "பாவனா" தொலைக்காட்சி தொடரின் இயக்குனர் பேட்ரம் நிஹால். கம்பெரலிய போன்ற சிங்கள இலக்கியத்தின் முதல் தர படைப்புகளை சின்னத்திரை வழியே கொண்டு வந்த அவர், இம்முறை "பாவனா" என்ற தொலைக் காட்சித் தொடரின் மூலம் சிங்கள மொழியில் வெளியான சிரேஷ்ட சிறுகதை படைப்பாளிகள் பதினைந்து பேரின் சிறுகதைகளை சின்னத் திரையூடாக கொணர்ந்துள்ளார். சோமரத்ன பாலசூரியவின் மெஜிக் லன்த்தேரும (மாயவிளக்கு), முத்தா (பாட்டன்) - எட்வின் பீரிசின் ஜீவித்தய ஹா மரணய (வாழ்வும் சாவும்), விஜயகிரஹணய (வெற்றி), பூத்தாக்ஷ (சாத்தான்)- சயிமன் நவகத்தேகமவின் பாவனா (தியானம்), பிரேத்தவத்து (பொறாமைக்காரனின் கதை), அகால ராத்திரிய (அகால இரவு)- திஸ்ஸ அபேசேகரவின் சத்பிரசாத (புதுநன்மை), இரட்ட உடின் இரமுதுனின் (சூரியனின் விளிம்பில்)- கே.பி.ஹேரத்தின் ஒன்ச்சில்லாவ (ஊஞ்சல்), துன்க்கல்மாயாவ (முக்கால் மாயம்)- பேட்ரம் நிஹாலின் நயா(பாம்பு), மனோ விப்பாகீத்த (மனோ விபரீதம்), அப்பாயட்ட கிய கமனக் (நகரத்துக்குச் சென்ற பயணம் என்பனவே அந்நாடகங்கள். அவருடனான ஒரு நேர்காணலின் தமிழாக்கம் இது.*

**பலதரப்பட்ட பல் அங்கங்களைக் கொண்ட தொலைக்காட்சி நாடகங்களை இயக்கிய நீங்கள். "பாவனா" போன்ற ஓரங்க நாடகத் தொடரை இயக்கியதன் காரணம் என்ன?**

இது இலகுவான காரியமல்ல. அவ்வாறான நாடகங்களை இயக்குவதனை விட இது கடினமானது. தொலைக்காட்சியூடகத்தை நான்கு எல்லைக்குள் அடக்கிவிட எப்போதுமே முடியாது என நான் எண்ணுகின்றேன். பிற அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்த ஊடகம் இயல்பிலும், தொழினுட்பத்திலும் பெரும் வளர்ச்சியுற்று வருகின்றது. எமது நாட்டில் அவ்வாறான நிலைமையில்லை. எமது பாராட்டிற்குரிய தொலைக்காட்சி நாடகங்களில் பிரயோசனமற்ற விடயங்கள் பற்றியே சித்திரிக்கப்படுகின்றன. இது சிறப்பானதொரு வளர்ச்சி என்று கூறிவிட முடியாது. பாவனாவின் மூலம் இந்த நிலைமையிலிருந்து சற்று விடுபட்டு பார்வையாளர்கள் புதிதாக சிந்திக்கக் கூடிய, அனுபவிக்கக் கூடிய விடயமொன்றை அவர்கள் முன் சமர்ப்பிக்கவே நான் விரும்பினேன்.

**ஆசியாவிலேயே உயர் கல்வி வளர்ச்சி விகிதம் கொண்ட இலங்கையில், பார்வையாளர்களின் ரசிப்புத் திறன் மிகக் குறைவு எனக் கூறப்படுவதில் பரஸ்பர வேற்றுமை இருக்கின்றது அல்லவா?**

நாட்டின் கல்வி விகிதம் உயர்வாக இருந்தாலும் இந்த ஒரு குறிப்பிட்ட பின்னணியில் அரசியல் அதனுடன் இணையவில்லை எனலாம். தொலைக் காட்சியினால் செய்யக்கூடிய எவ்வளவோ பணிகள் உண்டு. ஆனால் எமது அரசியல் பின்னணி, தெரிந்தோ தெரியாமலோ அப்பணியைச் செய்யத் தடையாக இருப்பதே இதற்கு காரணம்.

**"பாவனா" போன்ற நாடகத் தொடர்களினால் இப்பணியைச் செய்ய முடியும் என எண்ணுகின்றீர்களா?**

இல்லை. அவை எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. ஆனால் எமது அடையாளத்தைத் தெரிந்து கொள்ளலாம். விளங்கிக் கொள்ளலாம். அதேபோல் ஒரு ஊடகத்தின் மூலம் பரப்பக்கூடிய திறன்களை அறிமுகப்படுத்தலாம்.

**தொலைக்காட்சியினூடாக கலைரீதியான விடயங்கள் எதனையும் சித்திரிக்க முடியாதென்ற கருத்து நிலவும் போது எப்படி நீங்கள் குறிப்பிடுவதனைப் போன்று மாற்றம் ஒன்றை நிகழ்த்திக் காட்ட முடியும்?**

ஓம். தொலைக்காட்சியினூடாக முழுமையான கலையை வழங்க முடியாதென்ற கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். சிற்சில தடைகள் காரணமாக நாம் கூற விளையும் செய்திகள் தொலைக் காட்சியூடாக பார்வையாளர்களுக்கு எட்டக் கூடிய வாய்ப்புகளில் சில தடைகள், வரையறைகள் காணப்படுகின்றன. காட்சி ஊடகத்தினால் ஒரு விடயத்தை கூறும் போது ஒளி, காட்சியின் ஆழத்தை சுட்டல் என்பனவற்றில் அர்த்தம் பொதிந்து கிடக்கும். ஆனால் இவ்விடயங்கள் தொலைக்காட்சியுடன் அவ்வாறே பொருந்தி விடாது. நாம் படைப்பாளிகள் என்ற வகையில் எமக்குத் தேவையான வகையில் ஒளிக் கலவையை நிறங்களுடன் பொருத்தினாலும் தொலைக்காட்சி பார்வையாளர்களுக்கு தமக்கு விரும்பிய வகையில் அதனை மாற்றிக் கொள்ளக் கூடிய வசதிகள் உண்டு. அப்பொழுது நாம் எதிர்பார்த்தது அங்கு நடைபெறாது. சுருக்கமாக, தொலைக்காட்சியில் முப்பரிமாணக் காட்சிகளை பாதுகாத்தல் என்பது கடினமானது.



ஆனால் சாத்தியமான விடயமொன்றும் உள்ளது. பிற நாடுகளில் பலர் தொலைக்காட்சியில் சிறந்த படைப்புக்களை 16 மில்லி மீற்றர் செலோலொயிட் தளத்தில் படைத்துள்ளனர். அதேபோல் அபிவிருத்தியடைந்த நாடுகளில் இதற்கென பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொண்டும் வருகின்றனர். இதன் காரணமாக இப்பொழுது எனக்கு வழங்கப்பட்டுள்ள இந்த நான்கு கோட்டிற்குள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது தான். ஆனால் செய்ய முடியாததென எதுவுமில்லையே.

**நீங்கள் "பாவனா" நாடகத்திற்கு படைப்பாளர்களின் கதைகளை அவதானித்தா. அல்லது கதையின் உள்ளடக்கத்தை காட்சியாக வடிக்கக் கூடிய சாத்தியப் பாட்டை அவதானித்தா சிறுகதைகளைத் தெரிவு செய்தீர்கள்?**

முதலில் எனக்குப் பரீட்சார்த்த ரீதியிலான அனுபவம் ஒன்று தேவைப்பட்டது. அதன் விளைவு தான் இது. உலகத்தில் பலதரப்பட்ட கிரமங்களை, முறைகளை பயன்படுத்தும் கலைஞர்கள், படைப்பாளர்கள் உள்ளனர். குரசோவா, ரே, கோபொலா, ஸ்பில்பர்க் போன்றவர்களின் படைப்புக்களில் வெவ்வேறுபட்ட கிரமங்கள், முறையியல்கள் நிலவுகின்றன. இவர்கள் அனைவரும் வெவ்வேறுபட்ட பரீட்சித்துப் பார்த்தல்களூடு மேற்கொள்ளுபவைகளை நானும் பரீட்சித்துப் பார்க்க விரும்பினேன். பாராட்டிற்குரிய நாடகங்களை இயக்கும் போது அதன் உள்ளடக்கம் வேண்டும் மாதிரிகள், யுக்திகள் என்பனவற்றை ஒழுங்குபடுத்துதலை தவிர்த்து எனக்குத் தேவையர்னவற்றை மேற்கொள்ள முடியாது. அதனால் எனக்குத் தேவையான பரீட்சார்த்த விடயங்களை செய்யக் கூடிய வகையில் வெவ்வேறுபட்ட தொனிப்பொருளுடன் கூடியதான கதைகளையே தெரிவு செய்தேன்.

**வெவ்வேறுபட்ட கதைகள் கொண்ட தொடருக்கு "பாவனா" என்ற பெயரைச் சூட்டியதன் காரணம் என்ன?**

நான் தெரிவு செய்த சிறுகதைகள் பதினைந்திலும் வெவ்வேறுபட்ட தொனிப்பொருள் காணப்பட்டாலும், மனித கருணை எனும் ஒரே ஒரு தொனிப்பொருள் மட்டுமே அவற்றில் தொக்கி நின்றது. எனினும் படைப்பில் அது ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் வெளிப்படுகின்றது. அனைத்துக் கதைகளிலும் மனித காருண்யம் தொனிப் பொருளாக விளங்கியதால் பாவனா என்ற பெயர் சூட்டப்பட்டது. ஆனால், ஒரு விடயத்தை இங்கு சொல்ல வேண்டியுள்ளது. எந்தவொரு படைப்பும் பிரபல்யமாகும் வாய்ப்பு 70 சதவீதத்திற்கு அதிகம் எனின் அது வெற்றி பெற்ற படைப்பாகும். அதன்படி இந்தத் தொலைக்காட்சி நாடகமும் வெற்றி பெற்றது. பார்வையாளரைச் சென்றடையாது என நான் கருதிய சில விடயங்கள் கூட நான் நினைத்ததை விட சிறப்பான முறையில் அவர்களைச் சென்றடைந்துள்ளது.

**"பாவனா" சிறப்பான சிறுகதைகளைக் கொண்டு இயக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டாலும். அப்படைப்புக்கள் விகாரப்படுத்தப்பட்டுள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதைப் பற்றி?**

அசல் சிறுகதையில் உள்ளவாறே இவற்றை செய்யும் அபிப்பிராயம் எனக்கிருக்கவில்லை. எமக்குப் பொருந்தும் வகையில் அவற்றை மாற்றி செய்யும் நோக்கமே இருந்தது. ஜப்பானில் குரோசாவா, ஷேக்ஸ்பியரின் மெக்பத், கிங்லியர் போன்ற படைப்புகளைக் கொண்டு "ரான் அன்ட் தோன் ஒப் பிளட் " போன்ற படைப்பினை ஜப்பான் கலாசாரத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தியே படைத்துள்ளார். அதேபோல் உலக தரம் வாய்ந்த படைப்புக்களை அவற்றின் தன்மையைக் குலைக்காது எமக்குப் பொருந்தும் விதத்தில் பயன்படுத்திக் கொள்வதே நோக்கமாகியது.

**பாவனாவுக்காக தெரிவுசெய்யப்பட்ட சிறந்த சிறுகதை படைப்புக்களின் முக்கிய எய்துதலை. நோக்கத்தை அழிக்காது அவற்றை காட்சிப்படுத்த முனைந்ததாக நீங்கள் குறிப்பிட்டீர்கள். ஆனால், உங்களது கம்பெரலிய தொலைக்காட்சி நாடகத்தில் அவ்வாறு இடம் பெறவில்லையல்லவா?**

கம்பெரலிய பற்றி பிழையாகக் கருதிக்கொண்டது நானில்லை. இந்நாட்டு விமரிசகர்கள். கம்பெரலிய ஒளிபரப்பப்பட்ட காலத்தில் காட்சியூடகம் தொடர்பாக விமரிசகர்கள் தெரிந்து வைத்திருக்கவில்லை. அன்று போன்றே இன்றும் அந்தப் பலவீனம் அவர்கள் மத்தியில் நிலவுகின்றது. காட்சியூடகத்திற்கு படைப்பொன்றை உருமாற்றம் செய்யும்போது அப்படைப்பில் இருக்கும் அனைத்தையும் உருமாற்றம் செய்ய முடியாது. அப்படிச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கவும் முடியாது. அதற்கான பொருத்தமான உத்திகள் உண்டு. இந்த உபாயத்திற்குள் உள்ளடக்கப்படும் விடயத்தைத்தான் காட்சியாக மாற்றலாம்.

**பாவனா தொலைக்காட்சித் தொடர் பிரபல்யமானது எனக் கூறப்பட்டாலும் சில விடயங்களை விளங்கிக் கொள்ள முடியவில்லை என் ஒரு சில பார்வையாளர்கள் கூறுகின்றார்களே?**

ஓம். அப்படி கூறுபவர்களும் உள்ளனர். அதற்கான காரணம், இந்த கதைகள் பதினைந்திலும் அதற்கேயுரியதான அடையாளங்கள், உணர்ச்சி வெளிப் பாடுகள் மிகச் சிறப்பாக இருந்ததே. அவற்றைப் பாதிக்காத விதத்தில் காட்சிப்படுத்த வேண்டியிருந்தது. ஒரு சில கதைகளில் பாத்திரத்தின் முற்றிலும் மாறுபட்ட இயல்பும் காணப்பட்டன. அவற்றை விளங்கிக் கொள்ள இயலவில்லை என்பதற்குக் காரணம் எமது பார்வையாளர்களின் ரசிப்புத்தன்மை பலவீனமடைந்துள்ளமையாகும்.

**இந்நிலைமைக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யாவர்?**



படைப்பாளிகள் தாம் பொறுப்புச் சொல்ல வேண்டும். அதேபோல் தொடர்பூடகங்களும் பொறுப்புச் சொல்ல வேண்டும். தொடர்பூடக அமைப்புகளிடம் சரியான திட்டங்கள் இன்மை, அதேபோல் வர்த்தக நிறுவனங்களுடன் தொடர்புகளை பேணிக் கொள்ளும் வகையிலான விளக்கம் அற்றவர்கள் அக் கட்டமைப்புக்குள் இருப்பதும் இன்னுமொரு காரணமாகும். அதே போல் படைப்புகளுக்கு அநுசரணை வழங்கும் வர்த்தக நிறுவனங்களும் இந்நிலைமைக்கு பொறுப்புச் சொல்ல வேண்டும். இந்த அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து ஒரு திட்டத்தின் கீழ் செயற்பட்டால் இந்நிலையிலிருந்து மீள முடியும்.

**மேடை நாடகங்களின் மூலம் வரவேற்பை பெற்று தொலைக் காட்சியூடகத்திற்குள் பிரவேசித்தவர் என்ற வகையில். இந்நாட்டு பிரபல்யமான திரைப்படவியலாளர்கள் தொலைக்காட்சி படைப்புக்களில் தோல்வியுற்றதன் காரணத்தை தெளிவுபடுத்த உங்களால் முடியுமா?**

எமது பெரும்பாலான திரைப்படவியலாளர்கள் இந்த ஊடகத்துடன் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் திரைப் படத்துறையில் பிரயோகித்தவற்றையே தொலைக் காட்சி ஊடகத்திலும் பிரயோகிக்க முனைந்தனர். அவர்களது கருத்துக்கள் ஒரே தளத்தில் குவிக்கப்பட்டிருந்ததும் ஒரு பெரும் . காரணமாகும்.

**நீங்கள் முதலில் எமது படைப்பாளிகள் சிறந்த படைப்புக்களை மேற்கொள்வதில்லையென குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் ஆய்வுகள் அவ்வாறு குறிப்பிடவில்லையே?**

ஓம் . பலதரப்பட்ட நிறுவனங்கள் ஆய்வுகளை மேற்கொள்கின்றன தான். அந்த ஆய்வுகளின்படி இலங்கையில் கல்வியறிவு உயர்மட்டத்தில் இருக்க முடியாது. அந்தளவுக்கு மோசமான படைப்புக்களை தான் பார்வையாளர்கள் ரசிப்பதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். அந்த அறிக்கைகளை பார்க்கும் போது படைப்பாளிகளான நாம் ஏன் படைப்புக்களை மேற்கொள்ளவேண்டும் எனத் தோன்றுகின்றது. இவை சில வர்த்தக அமைப்புகள் திட்டமிட்டு மேற்கொள்ளும் பொய்யான, போலியான ஆய்வுகள்.

**நன்றி- லக்பிம**

**தமிழில்- ரத்னா**

நன்றி - நூலகத்திட்டம்



# என்ன பெயரிட்டு அழைப்பது?

அண்மையில் சரிநிகர் 174வது இதழில் (ஜூன் 24 - ஜூலை 7) "இரு நாடகங்களும் இரண்டும் கெட்டான்களும்" என்ற தலைப்பில் வெளிவந்த நாடக விமர்சனம் சம்பந்தமான சில கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். இந்த நாடகக் கலைஞர்களை நேரடியாக அறிந்தவன் என்ற முறையிலும், இந்த நாடக விழாவை பார்வையிட்டவன் என்ற அடிப்படையிலும் இது எனது கடமை . எனது இந்தக் கருத்துக்கள் நாடகம் பற்றிய மதிப்பீடாக இல்லாமல் அழகு குணசீலன் அவர்களது விமர்சனத்துக்கான எதிர்வினையாக மட்டுமே இருக்கும்.

முதலில் இந்த விமர்சனத்தில் உள்ள கோளாறுகளைப் பார்ப்போம். அடுத்து இந்த விமர்சனப்போக்கு அல்லது 'அதன் நோக்கம் பற்றிப் பார்ப்போம். "சூரியன் உதிப்பதில்லை" என்ற நாடகத்தில் அழகு குணசீலன் அவர்கள் வைக்கும் முதலாவது குற்றச்சாட்டு; அது புலம்பெயர்ந்துள்ள ஈழத்தமிழ் மக்களைப் பார்த்து போராட்டத்தையும், தாயகத்தையும் துறந்தோடி வந்த 'குற்றவாளிகள்' என்று குற்றம் சாட்டுகிறது என்பதாகும். இதற்கு நேர் எதிர் உதாரணங்களாக, அவர் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் உரையையும், புதுவை இரத்தினத்துரையின் கவிதையையும் பக்கங்களில் இட்டு நிரப்பியுள்ளார். அதாவது புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் பயனும், மதிப்பும் பற்றிப் புரிந்து கொண்டதற்கு உதாரணமாக பிரபாகரன் அவர்களது உரையையும், அவர்களை மதிக்காத, குற்றம் சாட்டுகின்ற பாணிக்கு புதுவை இரத்தினதுரையையும், நாடக ஆசிரியர் ஏ.ஜி. யோகராஜாவையும் ஒப்பிடுகிறார். இது உண்மையில், மொட்டத்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் விடயமாகும். முற்றிலும் உண்மைக்கு மாறான பொய்! நாடகத்தில் வரும் காட்சியில் கவிதை நடையில் கூறப்பட்ட விடயம்; மண்ணையும், மக்களையும், தாயகத்தையும் பிரிந்த ஏக்கத்திலும், போராட்டத்தைப் பிரிந்த குற்றுணர்விலும் அந்தப் பாத்திரங்கள் தமக்குள் தாமே வருந்துவதான சுயவருத்தம் கொள்வதாகவே அமைந்திருந்தது. இது இந்த நாடகத்தில் மாத்திரமல்ல, புலம்பெயர்ந்த ஒவ்வொரு ஈழத்தமிழ் மக்களின் இதயத்திலும் இருக்கின்ற துன்பியலாகும். இது காலம், மற்றும் நபர்களுக்கு ஏற்ப வேறுபடுகிறது. இதன் வெளிப்பாடுகளாக பல கவிதைகளையும், கதைகளையும் கூட நாம் உதாரணம் காட்டலாம். இதனை; "அலஸ்கா வந்த ஒட்டகம் போல" என்றும், "அகதிப் பந்தாய் உலகின் மூலையில் தூக்கி எறியப்பட்டோம்" என்றும், என் ராஜவீதிகளில் எப்போது நான் நடப்பேன்" என்றும் எழுதுகின்றான் கவிஞன். இதன் எதிரொலியாகவே நாடகத்திலும் இக்காட்சி இடம் பெறுகிறது. கவிதை இதுதான்....

வைகறையில் துயில் எழுந்து
வானத்தை வட்டமிட்டு
பூபாளம் இசைக்கின்ற
வானம்பாடியா நான்... இல்லை...

இரவின் கொடூரங்களை
நெருப்புத்தணலாக்கி
கிழக்குத் திசையில் உதிக்கும்
சிவப்புச் சூரியனா நான்.. அதுவும்
இல்லை...

நள்ளிரவுச் சாமத்திலும்
துல்லியமாய் வேவுபார்த்து
எதிரியின் நிலைகளை
அழித்தொழிக்கும்
புலி வீரனா...
போராளித்தோழனா நான்...
இல்லை... இல்லவே இல்லை...

தாய்த் திரு நாட்டில்
மரணத்துள் வாழ்கின்ற
மனிதருள் மனிதராய்
வாழ மறுத்து,

தினம் தினம் ஏவப்படுகின்ற
எறிகணை வீச்சுக்களால்
சிதறிய இரத்தம் காய்வதற்குள்
மரணிக்கின்ற என் மண்
மக்களின் அவலத்தைக்
காண மறுத்து,

அசுரப் படைகளின் ஆக்கிரமிப்பில்
வீடிழந்து... புலமிழந்து...
வாழ்வின் கனவிழந்து...

வீதியோரங்களிலும்
மர நிழல்களிலும்
காடுகர்ம்பைகளிலும்
வாழ்வைச் சுமையாக்கிக் கொண்ட
மனிதர் வாழ்வை
உணர மறுத்து...

பலகாத தூரம்
பறந்து வந்த
மனிதப் பதர்களில்
ஒருவன் தான்... நான்
ஆம்...
அது தான் உண்மை.

புதுவையின் திட்டித் தீர்க்கும் கவிதையும், நாடகத்தில் பேசப்படும் கவிதையும் இரு வேறுபட்ட விடயங்களாய் இருக்கிறது. மலைக்கும், மடுவுக்கும் உள்ள இடைவெளியாய் நிற்கிறது. இதனைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அழகு குணசீலன் அவர்கள் நிதானத்தை இழந்தது ஏனோ...? பார்வை இருந்தும் குருடர் ஆனாரா? அல்லது வேண்டுமென்றே செய்கிறாரா? பல குறைபாடுகளைக் கொண்ட நாடகங்கள் என்ற போதும், இந்த இரு நாடகங்களும் இரு வித்தியாசமான முயற்சிகள் என்றே சொல்லவேண்டும். அத்தோடு இவ்விரு நாடகங்களும் சுவிஸ்ஸில் பல நகரங்களிலும் மேடையேற்றப்பட்டு வருவதோடு, மக்களின் வரவேற்பையும் பெற்றுள்ளது. இந்த நிலைமையில் இல்லாத ஒன்றைச் சுட்டுவது என்பது, மக்களுக்கும், நாடகக் கலைஞர்களுக்கும் இடையில் சிண்டு முடியும் வேலையாகக் கூட கருதப்படலாம். புதுவையின் கவிதை வெளிவந்தபோது உடனடியாகவும், பரவலாகவும் மக்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியதை இங்குள்ள பலரும் அறிவர். ஆனால், இந்நாடகம் சார்பாக,

இவ்வாறான எதிர்ப்பு எதுவும் மக்களிடம் இருந்து எழவில்லை என்பதே இது பொய் என்பதற்குப் போதுமான சாட்சியாகும்.

அடுத்ததாக அழகு அவர்கள் வைக்கின்ற குற்றச்சாட்டு, தமிழ் மக்களின் புலம்பெயர்வுக்கு பேரினவாத ஆக்கிரமிப்பு மட்டும் காரணமல்ல. அத்துடன் இயக்கங்களின் ஆயுதக் கலாசாரமும் காரணம் என்பதும், அதை ஏன் நாடகாசிரியர் இருட்டடிப்புச் செய்துள்ளார் என்பதுமாகும். முதலில் நாடகாசிரியர் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்தாரா



என்பது ஒருபுறமிருக்கட்டும். ஆனால், நாடகத்தின் மிகப் பெரிய பலவீனமே அது பலவித பிரச்சினைகளை எடுத்துக் கையாள முனைந்தது என்பதேயாகும். இது பாலேந்திரா உட்பட பலராலும் சுட்டிக் காட்டப்பட்ட ஒன்றாகும். அப்படியிருக்கையில் இந்தப் பிரச்சினையை வேறு எடுத்துக் கொண்டிருந்தால் நாடகம் நிச்சயம் சொதப்பலாகவே போயிருக்கும். அப்படிச் சொதப்பியிருக்க வேண்டும்



என்பதுதான் அழகுவின் விருப்பமா? நாடகம் பொதுவாக விடுதலைப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்பதையும், அந்தப் போராட்டத்தில் புலம்பெயர் மக்களுக்குள்ள உறவையும் கடமையையும் பற்றியே பேசுகிறது. அத்தோடு போராட்டம் எவ்வாறு புதிய கருத்துக்களையும், சிந்தனைகளையும் உள்வாங்கி, அது பெண் விடுதலை, சாதிய விடுதலை என்ற பரிமாணத்தை எட்டி வீரியம் பெற வேண்டும் என்ற விருப்பத்தையும் கூற எத்தனிக்கிறது. இவற்றை மேம்போக்காக பொதுவாகவே பேசுகிறது. அதைக் காட்சிப்படுத்தவும் எத்தனிக்கிறது. இதனாலேயே இது பிரச்சாரத்தன்மை மிகுந்த நாடகமாகப் போய்விட்டது என்ற விமர்சனம் பலராலும் சுட்டிக் காட்டப்பட்டது. அத்துடன் இயக்க அராஜகங்களையோ அல்லது போராட்டத்தின் தவறான பக்கங்களை அலசி ஆராய்வதோ நாடகத்தின் நோக்கமாக இருக்கவில்லை என்பது கண்கூடு. இப்படி இருக்கையில் தாம் விரும்புகின்ற ஒன்றை நாடக ஆசிரியர் செய்யவில்லை என்பதற்காக, அது திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டதாக பழி சுமத்துகிறார். "அவற்றை ஒரு குறியீட்டு வடிவிலாவது சுட்டிக் காட்டியிருக்கலாமே ஐயா. அப்படி நீங்கள் காட்டவில்லை. அதனால் நீங்கள் 'தப்பித்துக்' கொள்கிறீர்கள். ஆகவே நீங்கள் பிழைப்பு நடாத்துகிறீர்கள்" இவை தான் அழகு சுமத்தும் குற்றச்சாட்டுக்கள். நண்பரே! மிக்க மகிழ்ச்சி. நீங்கள் விரும்புகின்ற ஒன்றை கலைஞன் படைக்காவிட்டால் அவன் இருட்டடிப்புச் செய்கின்றான். உங்கள் எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகிவிட்டால் அவன் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறான் அல்லது அவன் பிழைப்புவாதி, உங்களை அவன் திருப்திப்படுத்தி விட்டானானால் இதுவெல்லாம் இல்லை அப்படித்தானே!

வன்னி மக்களின் பசி தீர்க்க நாடகம் போட்டால் அது வன்னி மக்களைப் பற்றிப் பேசவில்லை என்கிறீர்கள். என்னப்பா நியாயம் இது. நல்லது! இப்படியே அவன் ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்த முனைந்தால் அவன் நாடகம் போட்ட மாதிரித் தான். ஐக்கிய இலங்கையை நேசிக்கும் ஒருவன் நீர் ஏன் மலையக மக்களையோ, அல்லது தென்னிலங்கையில் உள்ள ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களைப் பற்றியோ பேசவில்லை என்று கேட்டால் என்னாவது? உங்கள் நிலையில் அவன் இருந்தால் ஆசிரியரை இனவெறியன் என்றல்லவா கூறவேண்டும். ஆகவே நான் உங்களிடம் கோருவது, கலைஞர்கள், படைப்பாளிகள் மேல் உங்கள் விருப்பங்களையும், அரசியலையும் திணிக்காதீர்கள்! இருட்டடிப்பு தப்பித்தல், பிழைப்பு என்றெல்லாம் வன்முறையை வீசாதீர்கள்!

அடுத்து இந்நாடகத்தில் உள்ள பலமான அம்சமே அது பல முரண்பட்ட பாத்திரங்களையும், கருத்துக்களையும் மோதவிட்டிருப்பதே. அதற்கு உதாரணமாக, தாய், தகப்பன், மகளுக்கிடையே வரும் முரண்பாடு, தலைமுறை இடைவெளி மற்றும் போராளிகள்போல் காட்சி தருபவர்களிடையே காணப்படும் முரண்பாடு, தமிழீழ விடுதலை கிடைத்துவிட்டால் பெண் விடுதலை கிடைத்துவிடும். எல்லாப்பிரச்சினையும் 'தீர்ந்துவிடும் என்ற அப்பாவித்தனமான நம்பிக்கைகளும், அதனைத் தகர்க்கும் வகையில் வைக்கப்படும் ஏனைய தேசவிடுதலைப் போராட்டங்களின் படிப்பினைகளும் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த நிகழ்வு அதன் போக்கிலேயே விடப்படுகிறது. இப்படியிருக்க, "தமிழீழம் கிடைத்தவுடன் எல்லாம் சரி வரும்" என்ற கருத்துக்கே ஆசிரியர் அழுத்தம் கொடுப்பதாக அழகு குணசீலன் அவர்கள் குறிப்பிடுவது தவறு.

இது ஏதோ ஒரு கண்ணாடியை அவர் மாட்டிக் கொண்டு ஆசிரியரைப் பார்ப்பதனால் ஏற்படுகிறது. இதே தவறை 'பனிமுகடுகளில் புதிய சுவடுகள்' நாடகம் பற்றிய விமர்சனத்திலும் விமர்சகர் விட்டு விடுகிறார். இந்த நாடகத்தில்; பனைகளுக்கும், மாணவர்களுக்கும், முருகப் பெருமானுக்கும் இடையிலான பல முரண்பட்ட உரையாடல்கள் நடப்பதோடு, இன்றைய தலைமுறையைச் சேர்ந்த மாணவர்கள் மூலம் 'மனுநீதி கண்ட சோழனும்' கேள்விக்குள்ளாக்கப்படுகிறான். இப்படி இருக்கும்போது விமர்சகர் அழகு குணசீலன் அவர்கள் கூறுகிறார்; நாடகாசிரியர் மனுநீதிகண்ட சோழனை நியாயப்படுத்துவதன் மூலம் ஒரு அரசியலை நியாயப்படுத்த முனைந்துள்ளதாக. இதுவும் அந்தக் கண்ணாடியால் வந்த வினைதான். ஆனால், அது என்ன அரசியல் என்பதை அவர் கூறவில்லை. பனைகளுக்கு வசனம் எழுதிய அதே கைகள்தானே மாணவர்களுக்கும் வசனத்தை எழுதியது. மாணவர்கள் தாங்களாக வசனம் பேசினார்களா.. அல்லது வேறு யாராவது எழுதிக் கொடுத்தார்களா? அழகு தான் விடை கூற வேண்டும். இதற்கு விடை தெரியும் முன்பே பனைகளின் வசனத்துக்கு மட்டுமே ஆசிரியர் யோகராஜாவை சொந்தக்காரர் ஆக்கி தீர்ப்புக் கூறி விடுகிறீர்கள்: பலே! பலே!!

அடுத்து, "இப்படியொரு நாடகத்தை விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினர் மாவீரர் தினத்திற்குக் கூட தயாரித்து அளிக்கவில்லை. அந்தளவுக்கு ஒரு முழு நீளப் பிரசார நாடகத்தை 'சூரியன் உதிப்பதில்லை' என்ற பெயரில் யோகராஜாவும், வாவி பாஸ்கரும் தயாரித்துள்ளனர்" என்று குறிப்பிடுகிறீர்கள். உண்மை தான் ஆட்பலமும், மேடை வசதியும், பொருள் வசதியும் நிறைந்த பல வளங்களைக் கொண்ட கலை பண்பாட்டுக் கழகத்தினரால் செய்ய முடியாத ஒரு காரியத்தை ஒரு நகரத்தில் உள்ள சுயாதீனமாக இயங்கும் ஒரு சிறிய குழு, அதுவும் முன்னனுபவமற்ற சிறுவர்களை வைத்து இப்படியொரு நாடகத்தை வழங்கியுள்ளது என்றால் அது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான்.

யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட விடயத்தில் கண்ணனும், ரவியும் மட்டுமே கருத்துக் கூறியதாகவும் ஏனையோர் இது தொடர்பாகவோ, பிரதி தொடர்பாகவோ வாயே திறக்கவில்லை என்றும் விமர்சகர் குறப்பிடுகிறார். இங்கு ஒன்றை வலியுறுத்துவது அவசியம். வந்திருந்த விமர்சகர்கள் எவருமே முன்னுக்குப் பின் முரணாகப் பேசவில்லை. அவர்கள் ஏற்கெனவே இந்நாடகம் பல பிரச்சினைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு கஷ்டப்படுவதாக அபிப்பிராயம் கொண்டவர்கள். அப்படியிருக்கையில் முஸ்லிம் மக்கள் வெளியேற்றம் சம்பந்தமான கேள்வியை அவர்கள் எழுப்பவில்லை. மாறாக, நாடகம் பற்றிய விடயங்களிலேயே நின்றார்கள். ஆனால், விமர்சகரோ "ஆனந்தராணி, பாலேந்திரா, ஆதவன், அன்ரன் பொன்ராஜ் ஆகியோர் மேடை, நடிப்பு, ஒப்பனை, உரையாடல் தொடர்பாக நல்ல கருத்துக்களை முன்வைத்தார்கள் என்று கூறிவிட்டு கரு, பிரதி சார்பாக வாயே திறக்கவில்லை" என்று முரணாகப் பேசுகிறார். இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம், வந்திருந்த ஏனைய விமர்சகர்கள் ஒவ்வொருவரும்

⇨

நன்றி - நூலகத்திட்டம்



வெவ்வேறு அரசியல் அமைப்பு, அல்லது சுயாதீனப் பின்னணியைச் சார்ந்தவர்கள். ஆனாலும், சக கலைஞர்களைப் புரிந்து கொண்டவர்கள். அவர்களின் சுதந்திரத்தை மதிப்பவர்கள். ஆதலால் தமது அரசியலை இந்த நாடகத்தின் மீதோ அல்லது படைப்பாளிகள் மீதோ திணிக்கவில்லை. அதன் மூலம் தமது அனுபவ முதிர்ச்சியை வெளிப்படுத்தினார்கள். போராட்டத்தைப் பொதுவாகப் பேசப்போய், இந்நாடகம் விடுதலைப் புலிகளுக்குச் சார்பான தன்மையை எடுத்தது என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. என்றபோதும், சுயாதீனமான நாடகச் செயல்பாட்டை விரும்பும் பாலேந்திரா, ஆனந்தராணி போன்றோர் நாடக விழாவுக்கு அடுத்த நாளும் தங்கியிருந்து அந்த மாணவக் கலைஞர்களுக்கு பயிற்சி கொடுத்தமையை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, 'பனி முகடுகளில் புதிய சுவடுகள்" என்ற நாடகத்தை முதல் நாடகத்துடன் ஒப்பிடும் போது சிறந்தது என்று மிகச் சரியாகக் குறிப்பிடும் விமர்சகர், அந்நாடகம் குறித்தும் சில பிழையான விளக்கங்களைக் கொண்டுள்ளார். இது குறித்து அவர் தனக்கான விளக்கங்களை கற்பிதம் செய்யவும், வாசிக்கவும் முழு உரிமை உடையவர் என்ற போதும், வெளிப்படையாகத் தெரிந்த சில உண்மைகளைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேடையின் வலது பக்க மூலையில் (முன்னரங்கின்) "மெல்லத் தமிழ். இனி" என்ற வழி காட்டிப் பலகையின் கீழ் நின்று (மௌன நடிப்பில்) வாதிடுபவர்களை இரு வேறுபட்ட (மேற்கு - கிழக்கு) கலாசாரங்களின் குறியீடுகளாக விமர்சகர் சுட்டுவது தவறு. உண்மையில் அவர்கள் இரு வேறுபட்ட கற்பித்தல் முறைகளின் குறியீடுகளாகவே சுட்டப்படுகின்றார்கள். ஒருவர் தமிழ் மொழியைக் கற்பித்தலில் பழைய முறைகளை வலியுறுத்துபவராகவும், மற்றவர் நவீன முறைகளைக் கோருபவராகவும் உள்ளனர். இதற்கு அடையாளமாக, அவ்வப்போது எழுத்துச் சீர்திருத்தம், எழுத்தைக் கற்பிக்கும் முறை சம்பந்தமான விளக்கங்கள் ஆகியன அட்டைகளில் காண்பிக்கப்படுகின்றன. கடைசியில் பழைய முறையை கோருபவர் சரணடைகிறார். மற்றும்படி இக்காட்சி அமைப்பு சிறப்பானதாக இருந்தபோதும், பார்வையாளர்களை அலைக் கழித்தது என்பது உண்மையே!

அடுத்து, இந்நாடகத்தில் மாணவர்களுடன் உரையாடும் பனைகள் ஒரு சந்தர்ப்பத்தில் "தமிழீழத்தின் குறியீடாய் எங்கும் மிளிர்பவன் நான்" என்று குறிப்பிடும் வசனம் சம்பந்தமாக விமர்சகர் அழகு குணசீலன் சுட்டிக் காட்டும் "யாழ் மேலாதிக்கத்தின் வெளிப்பாடு" என்ற விடயம் சார்பாக சிந்திக்கத்தான் வேண்டும். இந்த வசனத்தை "போராட்டத்தின் குறியீடாய்" என மாற்றி எழுதப்பட்டிருக்குமாயின் விடயம் வேறு விதமாக அமைந்திருக்கும். ஏற்கெனவே பல படைப்புக்களில் பனை குறியீடாகப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. 'முறிந்த பனை மரம்', 'சிறு வயதில் பிழை செய்த இந்த யாழ்ப்பாணத்து வடலியை



மன்னிப்பாய் மலையக...", 'அழகான அந்தப் பனைமரம்' என்ற பாடல்கள் எல்லாம் இந்த அர்த்தத்திலேயே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நாடக ஆசிரியரும் அதையே நோக்காகக் கொண்டிருந்தது. புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தாலும் 'முழுத் தமிழ் ஈழம்' என அழுத்தம் கொடுக்கும் போது விடயம் வேறுவிதமாக அமைகிறது என்பதை ஆசிரியர் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்.

இந்த நாடகத்தில் 'முருகப் பெருமான்' பாத்திரம் அதன் உள்ளடக்கத்தில் வழமையாக இருக்கின்ற கற்பித்தலுக்கு மாறாக, முற்றிலும் தலைகீழாக படைக்கப்பட்டிருந்ததும், இதனால் இங்கு வந்திருந்த இந்து ஆன்மீக வாதிகளிடையே இது கோபத்தைக் கிளறியிருந்தது என்பதும், விழாவுக்கு வந்திருந்த அனைவரும் கண்டு கொண்ட உண்மை.

அத்துடன் சரியான நீதியான தீர்வை கடவுளே வந்து சொல்லும்போது ஏற்றுக்கொள்ளும் மக்களின் மனநிலை மற்றும் "மொழி சம்பந்தப்பட்ட பிரச்சினையில் அது சம்பந்தப்பட்ட கடவுளையே தீர்வு சொல்ல அழைப்பது" என்ற அர்த்தத்திலேயே நாடகம் நகர்கிறது. ஒரு படைப்பாளி தான் சார்ந்த, [illegible] கலாச்சாரச் சூழல்களில் நின்றே தனது படைப்புக்களை மையம் கொள்வான். இது பிரக்ஞைபூர்வமாகவும் பிரக்ஞைபூர்வமற்றும் நிகழக்கூடிய ஒன்று. இந்நாடகத்தில் 'முருகக் கடவுள்' எந்த நோக்கத்தில் என்ன உருவகத்தில் பயன்படுத்தப்படுகிறது



என்பதை எல்லாம் விட்டுவிட்டு உடனே குதர்க்கத்தில் இறங்கிவிடுகிறார் விமர்சகர். எத்தனையோ நாடகவியலாளர்கள், கவலைஞர்கள் தங்கள் படைப்புக்களில் (உ-ம்; இளைய பத்மநாதனின் கந்தன் கருணை) கடவுளர்களை எத்தனையோ முறை எதற்கெதற்காகவோ எல்லாம் எடுத்துக் கையாண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இதனையும் நாம் புரிந்து கொள்ள முடியும். அப்படியிருக்க இது வேற்று மதங்களைச் சார்ந்தவர்களைப் புறக்கணிப்பதாகக் கண்டுபிடித்து சிண்டு முடிகிறார் விமர்சகர். ஆகவே, மறுமுறை நாடகம் போட்டால் மறக்காமல் 'தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்ட அனைத்து மதக் கடவுளர்களையும் நாடகத்தில் இடம்பெற வைக்க ஆவன செய்வார்களாக..."

அடுத்து தனித்தமிழ் ஈழம் பற்றிய பிரச்சினைக்கு வருவோம். 'தனித் தமிழீழம்' என்பதே குழப்பத்தை உண்டு பண்ணுகின்ற விசயம் தான் என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஆயினும், நான் அறிந்தவரையில் தமிழீழம் என்ற நாடு தமிழர்களுக்கு மட்டுமே உரியது என்று கருதுபவராக ஆசிரியர் இல்லை.


இத்துடன் கவனிக்க வேண்டிய இன்னொரு விடயமும் உண்டு. இயக்கங்கள் எதுவும், தமது பெயரில் தனித்தமிழீழத்தைக் கொண்டிருக்கவில்லைத் தான். ஆனால், அதற்காகத்தான் போராடுகின்றன. தமிழீழம் என்பது ஒரு நாடு. அந்த நாட்டுக்குள் பல இனங்களும், ஏன்.. பல மொழிகளும் கூட வாழத்தான் போகின்றன. தமிழீழம் என்பது ஒரு நாட்டின் பெயர். அவ்வளவுதான். தமிழீழம் என்பதால் தமிழ் மொழி பேசத் தெரிந்தவர்கள் தான் வாழலாம் என்று அர்த்தம் கொள்ளத் தேவையில்லை.சமஷ்டி, சுயநிர்ணய உரிமை என்றெல்லாம் 'தீர்வுகள்' பற்றிப் பேசும் போதும், 'பிரிந்து செல்ல முடியாது' என்பன போன்ற குழப்பமான கருத்துக்கள் நிலவும் சூழலில், தமிழர்கள் 'தனி நாட்டுக்காகத்தான் "தனித் தமிழீழத்துக்காகத்தான்" போராடுகிறார்கள் எனும்போது பெறும் அழுத்தத்தையும் நாம் கவனிக்க வேண்டும். ஆயினும் 'தமிழீழம்' என்ற பதமே போதுமானதாக இருக்கும்போது, 'தனித் தமிழீழம்' என்பதை தவிர்த்திருக்கலாம்.

புகலிடச் சிறார்களின் சிந்தனா மொழி எது என்பது குறித்த சர்ச்சையில் ரவியின் கேள்விக்கு பதில் இல்லை என்கிறார் அழகு குணசீலன். இச்சர்ச்சைக்கு விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் நடாத்தி முடிவுக்கு வரவேண்டும் என்ற ரவியின் கருத்தை வலியுறுத்துகிறார். இதுதான் 'விஞ்ஞானவாதம்' என்பது. கைப் புண்ணுக்கு கண்ணாடி எதற்கு? எமக்கு முன்னால் வெளிப்படையாக உள்ள உண்மையை ஏற்றுக் கொள்ள மனம் இன்றி விஞ்ஞான ரீதியாக வந்தால் தான் நம்புவேன் என்று அடம் பிடித்தால் நாம் என்ன செய்ய முடியும்.

இந்த இரு நாடகங்கள் பற்றிய அழகு குணசீலன் அவர்களின் இறுதித் தீர்ப்பு இவ்வாறு அமைகிறது. இரு நாடகங்களும் போட்டியில் வெற்றி பெறும் நோக்கத்தை மையமாகக் கொண்டவை. எனவே அதற்கேற்ப சார்புத்தன்மையும், நெளிவு சுழிவுகளும் கொண்டவை என்பதாகும். போட்டிக்காகத் தயாரிக்கப்படும்போது போட்டியில் வெல்ல வேண்டும் என்ற நோக்கு எவனுக்கும் வந்துவிடும் என்பது வெளிப்படையான உண்மை. ஆனால், விடயம் என்னவென்றால், அவை தரமாக உள்ளனவா என்பதேயாகும். இது போட்டி நடத்துபவர்களின் கைகளிலும் தங்கியுள்ளது. இதற்கு அந்தப் போட்டியில் நடுவராகக் கலந்து கொண்ட கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கலைஞனான அன்ரன் பொன்ராஜாவின் பதில் திருப்தி தருவதாகவே இருக்கிறது. அவர் கூறுகிறர்; "நாம் முதலில் வைத்த போட்டியில் 'சூரியன் உதிப்பதில்லை' என்ற நாடகம் போராட்டத்தைச் சித்திரித்த போதும், அதற்கு இரண்டாம் இடமே வழங்கினோம். போராட்டத்துடன் சம்பந்தப்படாத வேறு பிரச்சினையைத் தொட்ட நாடகத்துக்கே முதலிடம் வழங்கியிருந்தோம். அடுத்த முறை, புலம்பெயர் வாழ்வில் மாணவர்களின் சிக்கல்களைச் சித்திரிக்கும் 'பனிமுகடுகளில் புதிய சுவடுகள்' நாடகத்துக்கே முதலிடம் வழங்கினோம்' என்று குறிப்பிடும் அவர், இதனைப் பல விழாக்களில் வலியுறுத்தியும் வருகிறார். இது இப்படியிருக்க "குறிப்பிட்ட பகுதியினரைத் திருப்திப்படுத்தி ஆசிரியர் வெற்றியும் கண்டுள்ளார்" என்று சேறு பூசுவது அநாகரிகமான செயலாகவே படுகிறது. அத்துடன் முத்தாய்ப்பாய் இதில் பங்கு பெற்ற கலைஞர்களின் உழைப்பு வீண் விரயம் செய்யப்பட்டுள்ளதாக அனுதாபப்படுகிறார் அழகு! ஆனால், தமது உழைப்பின் பலனை இத்தகைய வீண் பழிகளையும் தாண்டி கண்டடைகிறார்கள் இந்நாடகக் கலைஞர்கள் என்பதே உண்மை!

இறுதியாக; விமர்சனங்கள் ஆக்கத்தைத் தூண்டுபவையாக இருக்கவேண்டும் என்பதற்காகவும், அழிவை, நாசத்தை உண்டுபண்ணாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் எனது கருத்துக்களை இங்கு வைத்துள்ளேன். மற்றவர்கள் மேல் (இலகுவாக) முத்திரை குத்துவது, சேறு அள்ளிப் பூசுவது, தமது கருத்துக்களுக்குச் சார்பாக இல்லை, தமக்கு உடன்பாடான அரசியலைப் பேசவில்லை என்பதற்காக கலைஞர்கள் மேல் திணிப்புக்களையும், நிர்ப்பந்தங்களையும் உண்டு பண்ணுவது போன்ற பல போக்குகள் அழகு குணசீலனின் விமர்சனத்தில் இருப்பதை வாசகர் கண்டுகொள்வர். இந்த விமர்சனப் போக்குக்கு என்ன பெயரிட்டு அழைக்கலாம்? என்பதை வாசகர்களிடம் விட்டு விடுகிறேன்.

**அரிகரபுத்திரன்**
**சுவிஸ்**



## பூமித் தொட்டிற் சீலை

01

ஆடுது பூமி ஒரு தொட்டிலாக
சா, என்ன சுகம்!
பூமியின் இருதொங்கலின் நுனியிலும்
கண்படாத கயிறு கட்டி
உயர்த்திப் பிடித்து யாரோ வைத்துக் கொண்டு
உறங்கவும் உசுப்புகிறான்
எழும்பவும் ஆட்டுகிறான்

கண்படாத கயிறு கட்டி
இதமாக ஆட்டுகிறவரே
கை நழுவி கயிறு விழாது பார்த்துக் கொள்
கை தவறின் என்னவாகும்

தொட்டில் கட்டி
அதிலெம்மைப் போட்டு
ஆட்டி உறங்க வைப்பதும் பின் உசுப்பி எழுப்புவதும்
என்று மிக நன்று
அதற்காகத் தொழுது
நன்றி செலுத்துவேன் உனக்கு.

தொட்டிலாட்டியே,
ஏன் எமை இனங்களாக்கினாய்
ஏன் எமை பல மொழி பேசவைத்தாய்!
இனங்களாலும் மொழிகளாலும் நீகட்டிய வெண் தொட்டிற் சீலை
சிவந்து போயிருக்கிறது பார்!

தொட்டில் கயிற்று நுனியை நிலக்கிழவியின் குடிசைத் துணில்
பலமாய்க் கட்டிவிட்டு
கயிறு பிடித்து மெல்ல மெல்ல இறங்கி
வா இங்கே
வந்து தொட்டிற்சீலை விரித்துப்பார் - இரத்தம்... இரத்தம்!

நீ நினைத்தால்,
சீலையின் இரு தொங்கலையும் பிடித்து
இறுக்கி முடிச்சொன்று போட்டுக்கட்டி
உன் முதுகில் சுமத்து
ஓடும் சுவன ஆற்றில் போட்டுத் தாட்டுக் கழுவியெடு.

02


அவர்
இனங்களும் மொழிகளும்
உங்களை வித்தியாசம் கண்டு கொள்ளத் தான் என்றும்
என்னிடத்தில் எல்லோரும் ஒரே பிள்ளைகள் தான் என்றும்
செய்தி அனுப்பி வைத்தார்

03

பள்ளிகளும் கோயில்களும் பஞ்சலைகளும்
உள்ளே இருந்தும்

பூமித் தொட்டிற் சீலை இன்னும்
வெண்மையாகவில்லை

கே. முனாஸ்



நன்றி - நூலகத்திட்டம்



வடக்கிலிருந்து வீசும் காற்றே என் பாடல் கேளாயோ, தெற்கிலிருக்கும் மனங்கள் எரிவதை பாராயோ, நீ இதயமற்ற அரக்கனோ- எனதுயிர் தாய் நாட்டை துண்டாக்கி தர வேண்டுமா உனக்கு - அதுவரை தீராது இல்லையா என் கொலை கணக்கு.

சாரதி ஆசனத்தை ஒட்டினாற் போலிருந்த கம்பியொன்றில், தன் முதுகை வாகாக சாய்த்துக் கொண்டு, அச்சிங்களப் பாடலை பாடிக்கொண்டிருந்தான் ஒரு சிறுவன். ரபானில் இழைந்து, துரிதமாய் பிரிந்து நர்த்தனமிடும் அவ்ன் கைவிரலிடை துள்ளிசை பீறிட்டுக் கசிந்தது. அது காற்றிலாடி உருக்கொண்டு, சனங்களின் செவிகளை நிறைத்தது. அவன் குரலின் கம்பீரமும், அதனோடு அழுது வந்த சோகமும் ஏககாலத்தில் கேட்போர் உயிரையும், சதையையும் உலுக்கியெடுத்தன. பாதி மூடித் திறந்திருந்த அவன் விழிகள் பாடிப்பாடி மோனத்தில் லயித்திருந்தன.

பாடிக்கொண்டிருப்பவனுக்கு இதன் ஆழம் புரியாமல் இருக்கலாம். எழுதியவனுக்குமா., ஜன்னல் வழி யே இவன் பார்வை எகிறிற்று. சிலாபத்திலிருந்து ஆணமடுவ செல்லும் இந்த பஸ்ஸினுள் அப்பாடல் வரிகள் தான் கொழுந்து விட்டெரிந்தன. வெளியே ஒரே சுருதியில் மழை பெய்து கொண்டிருந்தது. வழக்கமாக பஸ் ஸ்டான்டில் மழைக்கு ஒதுங்கும் ஆடுகளும், கட்டாக்காலி மாடுகளும் போக்கிடமின்றி தறிகெட்டுத் திரிந்தன. நேற்றுப் பெய்த மழைக்கு நிரம்பியிருந்தகுழிகள் ஆரவாரமாய் ததும்பி வழிய ஆரம்பித்தன. இவனுக்குப் பின் சீட்டில் அமர்ந்திருந்தவன் கண்ணாடிகளை இழுத்து விட்டான். துவானம் விசிறும் சில்லென்ற காற்று பஸ்ஸினுள் நிறைந்தது.

ஒரே குடையுள் புதிதாக திருமணம் முடித்த ஒரு முஸ்லிம் ஜோடி, எதிரே உள்ள பழக்கடையில் பேரம்பேசி, ஈற்றில் எதுவும் வாங்காமலே அடுத்த கடைக்குத் தாவியது. இருவர் முகத்திலும் தாம்பத்திய சுகத்தின் உயிர்ப்பிருந்தது. லஜ்ஜை விலகாத அப்பெண்ணின் முகம் மஞ்சளித்து களித்திருந்தது. கூண்டிலிருந்து திறந்து விட்ட ஒரு ஜோடிப் புறாக்கள், கூரை மேலிருந்து சுதந்திரமாய் பார்ப்பது போல், பஸ் நிலையம் முழுக்க அவர்களே கமகமத்தனர். இந்த தூறல் மழைக்கு குடைபிடித்துச் செல்லும் அற்புதக் காட்சி பார்ப்பதற்கு பரவசமாய் இருந்தது. வெகுநேரம் அவர்கள் மறையுமட்டும் இவன் கண்களும் அந்த ஜோடிகளின் முதுகை விட்டும் அகல மறுத்தது.

இரண்டு நாட்களுக்கு முன் கிடைக்க வேண்டிய திருமண அழைப்பிதழ் தாமதமாகிக் கிடைத்ததாலும், அவசியம் கலந்துகொள்ள வேண்டிய நண்பனின் திருமணம் என்பதாலும், இந்த ஞாயிற்றுக்கிழமையின் விடுமுறையைக் கூட அனுபவிக்காமல் இப்படி அல்லாட வேண்டியதாயிற்றே! மனசுக்குள் சலித்துக் கொண்டான். அவன் திருமணத்திற்கு குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்பாவது போக வேண்டும் என்று நினைத்திருந்தான். கூடமாட ஒத்தாசையாகவும், அவனுக்கு பொழுதுபோக்கவும் இருந்திருக்கும். இப்படி மூன்றாம் மனுஷன் போல விருந்துக்குப் போய் திடுதிப்பென அமரும் காட்சியை நினைக்கையில் இவனுக்கே உரிய இயல்பான லஜ்ஜையும் - சங்கடமும் தொற்றிக் கொண்டன.

இந்தப் பேருந்து புறப்படுவதற்கு இன்னும் பத்து நிமிடமாவது பிடிக்கும். 'கண்டக்டர்' தன் சகபாடிகளுடன் வெளியே உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தான். சாரதியைக் காணவில்லை. கிராமங்களை ஊடறுத்துச் செல்வதால் இப்படியொரு அசட்டை இவர்களுக்கு. கருவிக்கொண்டு மறுபடியும் ஜன்னலுக்கு வெளியே புதினம் பார்க்கத் தொடங்கினான். இந்த திருமணத்திற்கு செல்வதில் உள் மனசில் ஒரு ரகஸ்ய இன்பம் அரித்துக் கொண்டே இருந்தது. அணைபோடவியலா ஆனந்த சாகரம் அது. இவனும், நண்பனும் தொழில் பார்த்த இடத்தில், இவன் காதலித்து பின் வேறொருவனுக்கு வாழ்க்கைப்பட்டுச் சென்ற முதற் காதலி, நண்பனின் ஊரில் தான் செட்டிலாகி இருக்கிறாள். "என் திருமணத்திற்கு வருவதன் மூலம் உனக்கு ஒரே கல்லில் இரு மாங்காய்கள்" என்று எழுதி இவனுக்கு மாப்பிள்ளை வேறு ஆசையூட்டியிருந்தான். முதல் காதல் என்றால் சும்மாவா. கல்வெட்டு மாதிரி, குருட்டு வௌவாலாய் அந்தக் கனவுகளைத்தேடி எப்போது நினைத்தாலும் மனம் இடறி விழுகிறது. மீட்டிப் பார்க்கையில் சொல்ல முடியாத ஆனந்த மயக்கம்.

அந்த சிங்களப் பாடகன் இறங்கியதைத் தொடர்ந்து ஒரு நோயாளி ஏறினான். கைபனியனும், சிங்களவர் விரும்பி அணியும் பிஜாமா' சாரனும் அணிந்திருந்த அவனுக்கு தலைப்பாகை அவ்வளவு எடுப்பாகத் தெரியவில்லை. முன்னர் கடும் உழைப்பாளியாக இருந்திருக்க வேண்டும். தசைகள் உருண்டு முறுக்கேறியிருந்தன. சில வைத்திய அறிக்கைகள் Xரே படங்கள் என கடை விரித்து மிக அட்டகாசமாக பேசத் தொடங்கினான். இவன் தனது அலுவலக நண்பர்களிடம் வரம் பெற்ற




சிங்கள மொழியின் கிருபையால் அந்த நோயாளியின் பேச்சை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினான். வெளிப்பராக்குகள் கண்ணை விட்டும் மறைந்தன. ஐம்பது வயது மதிக்கத்தக்க அவன், தன் மேற்சட்டையை நீக்கி வயிற்றுப் புண்ணை ஏலம் விட ஆரம்பித்தான். சில இளசுகள் அருவருப்பாய் முகம் சுழித்து ஜன்னல் வழியே சப்தமில்லாமல் எச்சில் துப்பினர். மழையை ரசிப்பது போல் பாவலாக் காட்டி அந்த அருசையை தவிர்க்க முயன்றனர்.

இவன் இதைப் போன்று எத்தனை ரணங்களைப் பார்த்துவிட்டான். தனது தாய் மண்ணில் தன்னெதிரில், உடன் பிறப்புக்களும், உடன் பிறவா உறவுகளும் தலைவேறாக, அங்கங்கள் சிதைந்து இரத்தம் உறைய மண்ணில் கிடந்த கொடூர நிகழ்வுகளைவிட, வேறென்ன கொடுமை உண்டு. அந்த கொலைக்களத்திலிருந்து இறுகிய மனம் இவனுடையது. ஏன் இவன் வாழும் மண்ணின் மைந்தர்களுக்கும் இந்த இறுக்கம் மனசில் கருவிக் கொண்டுதானிருக்கின்றது. வலுக்கட்டாயமாக இந்த தேசம் அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட அசௌகரியங்களில் இதுவும் ஒன்றாகிவிட்டது.

அவன் பணம் கறக்க பாவித்த உத்திதான் இவனை சினங்கொள்ளச் செய்தது. அவன் நோய்க்கு காரணம் தமிழர்களாம். 'பொடியன்'கள் இவனை கடலில் வைத்து சுட்டார்களாம். அதனால் இவனால் உழைக்க முடியவில்லை. குடும்பத்தை காப்பாத்த வேண்டும். இந்த புண்ணுக்கு வைத்தியம் வேறு செய்ய வேண்டும். ஆதலால், சிங்கள மக்களே உங்கள் இனத்தவனை காப்பாற்ற உதவுங்கள்.

சிங்கள இனத்தின் சாதாரண பிச்சைக்காரனுக்கும் சோறு போட இந்த யுத்தம் கை கொடுக்கின்றது. ஒருவன் பாடிக் கறந்தான். இன்னொருவனோ ஆடிக் கறக்கிறான். எல்லோருக்கும் மூலதனம் 'தமிழ்பேசும் இனம்'. போகிறபோக்கில் தெருக்கூத்தாடிகளையும் இந்தப் போர் இலட்சாதிபதியாக்கும் போல். நிகழ்வுகள் கடுமையாக உள்ளன. இவ்வாறான தருணங்களில் இவனுள் கனன்றெழும் உணர்வுகள் ஆற்றுப்படுத்த முடியாமல் எரியத் தொடங்கின. சொல்லி வைத்தாற்போல் ஒரு ஒழுங்கில், ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சி பெற்ற யாசகர்கள் பஸ்ஸில் ஏறி, சில்லறைகளை பிடுங்கிச் சென்றனர். கடைசியாக ஒரு பெண் தன் கைக்குழந்தையுடன் ஏறி, அதே பல்லவியைப் பாடி சற்று அதிகமாகவே வாங்கிக் கொண்டு போனாள். ஒரு இராணுவ வீரரின் விதவை மனைவிக்கு இந்த பஸ்ஸில் அதிகம் மரியாதை இருந்தது.

சற்று நேரம் கடலை விற்பவன், பேப்பர்காரன், "பென்ஸி" சாமான் விற்பவன் என பஸ்ஸே மூச்சுத் திணறி திமுதிமுத்தது. கண்டக்டர் முன் சீட்டிலிருந்து 'டிக்கற்' கிழிக்க ஆரம்பித்தான். அதக்கி வைத்திருந்த வெற்றிலை சொதப்பல் சற்றுக் குறைந்திருந்ததால் இப்போது தெளிவாக அவன் பாஷை புரிந்தது. அடிக்கடி வெற்றிலைசாறை புறங்கையால் வழித்து, மேற்களிசனில், தேய்த்துக் கொண்டே காரியத்தில் கண்ணாய் இருந்தான்.

இந்தப் பிரயாணமே இவனுக்குப் பல அசௌகரியங்களைத் தந்தது. குழந்தைத்தனமாக இந்நாட்டை சேதாரம் பண்ணும், புழுக்களைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினான். கையிலிருக்கும் தமிழ்ப் பேப்பரைக் கூட விரித்துப் படிக்க முடியாத ஒரு தமிழ வெறுப்பு அங்கிங்கொணாதபடி எங்கும் நிறைந்திருப்பதை உணர்ந்தான். இந்த இலட்சணத்தில் தமிழில் குயில் பாட கனவு காணும் வைரமுத்துவை எதிரில் நிறுத்தி நாலு வார்த்தை உறைப்பாக கேட்க வேண்டும் போல் ஆவேசம் வந்தது.

விடுதலையின் பெயரால், இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால் மக்களின் வரிப்பணத்தில் சண்டைபோடும் ரொபின் ஹூட்டுக்களும், அரசியல் அதிசயங்கள் நிகழ்த்திக் காட்டும் சக்திமான்களும் மலிந்துள்ள தேசமிது.

பஸ் ஓட்டம் பிடித்து, நகரத்தை விட்டும், கிராமங்களின் ஊடாக ஓடிக் கொண்டிருந்தது. இருமருங்கிலும் வயல்வெளிகள். கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராய் தலைகுனிந்து நின்றன. இவன் கிராமத்திற்கே உரிய ஈரலித்த காற்றை நீண்ட யுகங்களின் பின் ஆன்மா நிறைய சுவாசித்தான். நறுமணக்கதம்பம் முகத்தில் வழிந்தது. கண் தொடும் எல்லை வரை பச்சைக் கம்பள வயல்களே வியாபித்திருந்தன. வாய்க்காலில் மணவெட்டி சுமவும் உழவர்கள், கடகத்துடன் குதூகலித்து வரும் சிங்களப் பெண்கள். அவர்களைத் தொடர்ந்து கதிர்களுடன் வரும் சிறுமிகள். ஒரு கொக்கு எப்போதும் போல் உறுமீன் வரும் வரை வாய்க்கால் ஓரம் தவத்தில் நிற்கிறது. சில இயல்புகள் எல்லா மண்ணிற்கும் ஒத்ததாகவே அமைந்து விடுகின்றன. வயல்வெளிகளும், அதன் ரம்யக் காட்சிகளும், ஏகமாய் இசைவு பெறுவதில் இன, மொழி, தேச வேறுபாடுகள் காட்டுவதில்லை.

இவன் மனம் பரவசமடைகிறது. எப்போதோ மண்ணில் விழுந்த பறவை. உயிர் பெற்று, மீளவும் வெறி கொண்டு பறப்பதைப் போல் ஆகாசத்தில் சிறகு விரியப் பறந்தான். ஐந்து நிமிட தரிசனத்தில் எத்தனை யுகங்கள் கண் முன் விரிந்து பழிப்புக் காட்டி மறைந்து விட்டன. ஓடும் பஸ்ஸிலிருந்து எல்லாக் கனவுகளும் பின்நோக்கி நகர்ந்து போயின.

இந்தக் கிராமங்களின் புளிய மரங்களில், காரை பெயர்ந்த சுவர்களில் எல்லாம், ஒரே தேசம், ஒரே மக்கள் போஸ்டர்களே அடைத்திருந்தன. இவனுக்கு உதட்டின் கோணத்தில் கேலிச் சிரிப்பு துள்ளியது. இன நல்லுறவை எப்படியெல்லாம் கட்டியெழுப்புகின்றார்கள். அழுகின்ற பிள்ளைக்கு மிட்டாய் வாங்கிக் கொடுப்பதான கோஷங்கள், கேட்டுக் கேட்டு சலித்து விட்டது.

தெருக்கூத்தாடிகள் போல் பெரும்பாலான அரசியல்வாதிகள் நடந்து கொள்கின்றார்கள். வடக்கிலிருந்து இளைஞர், யுவதிகள் தென்னிலங்கைக்கு 'கிரிக்கற்' மட்டையை தூக்கிக்கொண்டு வருகிறார்கள். மகாநாயக்கர்கள் நெஞ்சம் பூரிக்கின்றார்கள். பத்திரிகையாளர்களோ விளையாட்டின் மூலமாக "இனவு உறவுப் பாலம்" என தலைப்பிட்டு எழுதிக் குவிக்கின்றார்கள்.

தென்னிலங்கை யுவதிகளும், இளைஞர்களும் யாழ்ப்பாணம் செல்கிறார்கள். இரண்டு தெருக்கூத்து. ஒரு விழா. சமாதானம் வந்துவிட்டது. தமிழர்களும், சிங்களவர்களும் ஒற்றுமையாக இருக்கின்றனர். அவர்கள் தான் வலிந்து சண்டை செய்கிறார்கள். மலவத்தையிலிருந்து அறிக்கைகள் பிறக்கின்றன. இனங்களுக்கிடையே நல்லுறவு

நன்றி - நூலகத்திட்டம்



தழைக்க தமிழ் யுவதிக்கும், சிங்கள இளைஞனுக்கும் அல்லது சிங்கள யுவதிக்கும், தமிழ் இளைஞனுக்கும் கற்பனையில் திருமணம் முடித்து வைக்கும் ஈஸ்வர எழுத்தாளர்களின் பேனா ஊற்றிலிருந்து எல்லாப் பிணிகளும் தீர்ந்து விட்டதான பிரமை.

கொழும்பில் கைகோர்த்து ஊர்வலம் போகின்றார்கள். கலியுக கதிர்காமக் கந்தர்களின் உள்ளம் பூரிக்கின்றது. பாருங்கள் ஐயா தமிழனும், சிங்ளவனும் எவ்வளவு ஒற்றுமையாக வாழ்கின்றான். அவர்கள் தான் சமாதானத்தின் எதிரிகள், 'சர்வ தேஸங்களுக்கும் பறந்து செஞ்சோற்றுக் கடன் கழிக்கின்றனர். இந்த இலட்சணத்தில் ஐந்து ரூபாய் நோட்டில் சமாதானத்தை எழுதிக் கொடுத்து, உலக மகா அற்புத இலக்கியங்களை படைப்போருக்கு நோபல் பரிசு வழங்கிய பெருமை நமது நாட்டின் முற்போக்குவாதிகளுக்கே சொந்தம்.

"ஆண்டிகம கட்டிய பஹிண்ட" இந்த அருசையான எண்ணங்களை தவிர்ந்திருக்க எவ்வளவு முயன்றாலும், வலிந்து வந்து இரத்தத்தை சூடேற்றி விடுகின்றது. பரபரப்புடன் இறங்கினான். ஆண்டிகம சந்தியில் இறங்கி தொடர வேண்டிய பாதையின் வரைபடத்தையும், ஆட்டோக் கூலியையும் முன் கூட்டியே விபரமாக எழுதியனுப்பி இருந்தது இவனுக்கு இலகுவாகிவிட்டது. புதிய முகம் என்பதால் கொஞ்சம் வழக்கமான 'ரேட்டை' விட கூடுதலாகவே கறக்கப் பாப்பானுகள். தவித்த முயலை அடித்துப் பழகியவன். எல்லா இடத்திலும், எல்லா சமூகத்திலும் பல்வேறு மொழிகளை பேசிக் கொண்டு இருக்கவே செய்வான்.



இவன் நினைத்தது மெத்தச் சரியாயிற்று. இருநூறு கேட்டான் ஒரு ஆட்டோக்காரன். நூறு ரூபாய்க்கு மேல் ஒரு சதமேனும் கூடத்தர முடியாது என்றான் கறாராக. இவனின் பிடிவாதம் தளர்வதாயில்லை. அவனும் விடுவதாயில்லை. நூற்றிஐம்பதுக்கு போவம் என்றான் ஆட்டோ. பரவாயில்லை தம்பி கொஞ்சம் லேட்டானா என்ன நான் பஸ்ஸில போய்க் கொள்றன் என்றவன் சற்று நகர்ந்து போய் நின்று கொண்டான். இதில் இன்னொரு வேடிக்கை சொல்லி வைத்தாற்போல், எல்லா ஆட்டோக்காரனும் ஒரே "ரேட்டை சொன்னது இவனை அதிசயிக்க வைத்தது. தொழில் போட்டி என்றாவது ஒன்று இருக்க வேண்டாமா. சிறீமா, ஜே.ஆர்./ பிரேமதாச, விஜேதுங்க/ ரணில், சந்திரிகா/ பிரபாகரன் அஷ்றஃப்/ மற்றும் மதிப்புமிகு தமிழ் விடுதலை ஆயுதக் குழுக்கள் இவர்களெல்லாம் அரசியல் வியாபாரத்தில் எப்படியெல்லாம் போட்டிபோட்டார்கள். இன்றுவரை போராடுகிறார்கள். 'ஏமாளிகள் தான்' இவர்களின் மூலதனம். இவன் தன்னை ஒரு ஹீரோவாக கற்பனித்துக்கொண்டு அந்தச் சந்தியில் நின்று வேடிக்கைப் பார்க்கத் தொடங்கினான்.

எந்தக் கொம்பனாயிருந்தாலும் தலைகுனியக் கூடாது. நியாயங்கள் ஜெயிப்பதற்கு அதிக விலை கொடுக்க வேண்டும். அதற்கு மிகுந்த பொறுமையும், விடாமுயற்சியும் வேண்டும். இவன் வாப்பாவின் குரல், மனசில் அதிர்கிறது. பத்து வருஷத்திற்கு முன் புளிய மரத்தடியில் இவனை இருத்திக்கொண்டு உபதேசித்த அவரின் ஓர்மமான குரல் இன்றுபோல் அவன் காதருகே ஒலிக்கத் தொடங்கிற்று. அதுவே எல்லையற்ற தைர்யத்தை தந்தது. விழிகளில் வீரம் ததும்ப, சுற்றத்தை அவதானித்தான். அந்த சந்தியில் பாராட்டிக் கொள்ளும் படியான எந்தக் கவர்ச்சியும் இருப்பதாகத் தெரியவில்லை. கழுத்தில் செயின் அணிந்த ஒரு பருத்த ஹிப்பியின் கரடுமுரடான தோற்றம் மனசை நெருடத் தொடங்கிற்று.

மறுபடியும் ஆட்டோக்காரன் அருகில் வந்தான். "சரிமாத்தயா நீங்க பிடிவாதம் பிடிக்கிறீங்க. உங்க ரேட்டுக்கே கொண்டு விர்றம். ஏறுங்க, அவனின் சகபாடிகளோ, ஹோட்டல் ரேடியோவிலிருந்து வழிந்து வரும் - " சுதுமல் சுஹந்தினி பாடலுக்கு தாளம் போட்டபடி கும்மாளமாய் இருந்தனர். இவன், ஆட்டோக்காரனை ஏறிட்டு ஒரு வெற்றிச் சிரிப்புடன் ஏறிக் கொண்டான்.

ஆட்டோ கிளம்புகையில் எதேச்சையாக குறுக்கே பாய்ந்த ஓர் அழகான சிங்கள யுவதியின் முகம் வெகுநேரமாகியும் மனசில் நின்றது. அற்புதமான அழகென்பது இதைத் தானோ? நேர்த்தியாக வார்த்தெடுத்த சிலையின் கீர்த்திமிகு கட்டுடலும், கிராமத்திற்கே உரிய அழகுக் கதம்பமும் மனதை பறித்தது. ஒரு மின்னலைப் போல், குறுக்காக பாய்ந்து சென்ற நளின வேகம் வெகுநேரமாகியும் ஆட்டோவுக்குள் நின்று சில்மிஷம் செய்தது.

மாப்பிள்ளைக்கு பூரிப்புத் தாழவில்லை. இவனைக் கட்டியணை தன் மகிழ்ச்சியை கொட்டினான். தாமதித்து வந்ததிற்கு செல்லமாக கடிந்து கொண்டான். "நீ கார்ட்டை ஒழுங்காக அனுப்பியிருந்தால் நான் ஏன் சுணங்குறன்''. இவனும் பதிலுக்கு டூ விட்டான். சரி, சரி, மூஞ்சிய தூக்கிடாத சொல்லிக் கொண்டே அழைத்துச் சென்று உட்கார வைத்து உபசரித்தான். திருமண வீடு சோபை இழந்து காணப்பட்டது. நண்பர்களும், உறவினர்களும் கலைந்து போக, எஞ்சிய கூட்டம் ஆரவாரம் அடங்கி சோர்ந்திருந்தது. மேசையில் கிடந்த அல்பத்தை விரித்தான். இது 'ரிஜிஸ்தர்' அன்று எடுத்த போட்டோக்கள். உன்ட பழைய 'காயு'ம், என்ட ஆளுக்கு பக்கத்துல நின்று ஒரு சொட் எடுத்திருக்கு. கண் கடுக்க பார்க்காத புருஷன் கண்டா பலாய். அவன் செல்லமாக இடுப்பில் நோண்டி விட்டு இவனை தனிமைப் படுத்தி விட்டு உள்ளே சென்றான். அவன் விட்டுச் சென்ற கேலிச்சிரிப்பு மண்டபத்தை விட்டும் அகல நாழிகை எடுத்தது.

இவன் அல்பத்திலிருந்த அவள் படத்தையே வெறித்திருந்தான். ஒரு குழந்தை பெற்றும் அந்த அழகு அப்படியே சேதாரமின்றி மின்னியது. உதட்டின் கீழ் மச்சம் விம்மிய மார்பின் தூக்கல். சிரிக்கையில் விழும் மோகனக்குமிழி. அப்படியே எல்லாம் நேர்த்தியாக அமைந்தாற்போல் 'கிளிக்' செய்யப்பட்டுள்ளது. அவளில் 'காபன்' வைத்து எழுதியதுபோல் - அந்தக் குழந்தை அவள் இடுப்பிலிருந்து உயிர் ததும்ப சிரித்துக் கொண்டிருந்தது. ஒரு வருடத்துக்குள் இப்படியொரு அதிசய மாற்றம் அவளில் நிகழ்ந்திருப்பது இவனை தடுமாற வைத்தது.

முதற்காதலின் திவ்யம் மனசை நெருட இதயம் விம்மித் தணிந்தது. அனுருத்த போரை முடிக்க காலக்கெடு விதித்தது போல், இவனும் வேலை தேடிய பின் திருமணம் என காலக்கெடு விதித்து ஈற்றில் சந்திரிகாவின் தீர்வுபொதி போல அவளுடனான வாழ்வும் பலத்த ஏமாற்றமாய் போயிற்று.

''இவனுக்கெல்லாம் என் புள்ளய குடுக்க மாட்டான். தத்துவம்பேசி, வெட்டியாக எழுதிக் கிட்டிருக்கிற இவனுக்கு குடுக்கிறதும், ஆத்துல தள்ளுறதும் ஒண்டுதான்''. சந்தியில் நின்று அவளின் தந்தை ஒரு தேர்ந்த அரசியல்வாதிபோல் கத்தியபோது இவனுக்கான சூரிய ஒளி முற்றாக இருண்டு போனது.

பனி பெய்த ஒரு முன்னிரவில் வஸந்தத்தின் முதற் செய்தியாக அவள் திருமணச் செய்தி நெஞ்சில் தீ மூட்டியது. இவன் கடைசியாக எழுதியனுப்பிய கவிதை, உட்பட கடிதங்கள், புகைப்படங்கள், பரிசுப் பொருட்கள் எல்லாவற்றையும் தன் தந்தையின் உறுமல் தாழ முடியாமல் அனுப்பி வைப்பதாக குறிப்பெழுதி திருப்பியிருந்தாள். சரி பார்த்து ஏற்பதற்கு நினைவுச் சின்னங்கள் மளிகைக் கடைச்சரக்கா என்ன?

அந்த அல்பத்தில் எல்லாமே உயிர் துடிப்புடன் சிரிப்பதுபோல் அவ்வளவு பூரிப்பாய் இருந்தது. திருமண வீட்டின் நறுமணம் நாசியை நிறைத்தது. பிரிக்காத பந்தலின் கீழ் சில கதிரைகள். ஒழுங்கின்றிக் கிடந்தன. சிறுவர்கள் அவற்றின் இருக்கைகளில் பாய்வதும், அமர்வதுமாய் குதூகலமாய் இருந்தனர். புத்தாடை சரசரக்க அங்குமிங்கும் நோக்கின்றி திரிந்த இளங்குமரிகள் இவனை நிமிர்ந்து பார்த்து தமக்குள் ஏதோ குசுகுசுத்து சிரித்துக் கொண்டு சென்றது வேறு லஜ்ஜையாக இருந்தது.

''நீ அவளை சந்திக்க விரும்புகிறாயா அவளும், நீ வந்தா வீட்டுப்பக்கம் கூட்டி வரச்சொன்னாள்." சாப்பிடுகையில் நண்பன் கேட்ட கேள்வி இவன் தொண்டைக்குள் குறுக்காக இறங்கியது. மடமடவென்று தண்ணீரை குடித்துவிட்டு அவசியமில்லை. நேரம் கிடைத்தால் பிறகு யோசிப்பம் என்றான் அசிரத்தையாக. ஓர் அரசியல்வாதிபோல் தானும் பேசக் கற்றுக் கொண்டதை நினைக்கையில் அருவருப்பாய் இருந்தது. சமயோசிதமாக பேசவதென்பது ஒரு கலை. இது எல்லோருக்கும் லாவகமாய் வசியப்படுவதில்லை. தென்னாபிரிக்காவில் ஒரு முகமும், இந்தியாவில் ஒரு முகமுமாய் தேஸத்தின் இளவரசி பேசியபோது அந்த இரட்டை முகத்தின் மேற்தோலை உரிக்க வேண்டுமென ஆக்ரோஷமாய் எழுதியவன் தன் நண்பனுக்கு முன் முகமூடி அணிந்து உட்கார்ந்திருப்பது அவமானமாய் இருந்தது. இவனின் அசிரத்தையான பதில் நண்பனுக்கு திருப்தி தரவில்லை என்பதை அவன் இவனைப் பார்த்த பார்வையில் உறைத்தது.

அவளைப் பார்க்க வேண்டுமென்ற உந்துதல் உள்ளூர பேயாட்டமாடியது. சந்திக்கும் போது எதிர்கொள்ளும் கேள்விகளையும், அதற்குரிய பதிலையும் சாவகாசமாக உட்கார்ந்து ஒத்திகைப் பார்த்தான். நண்பனும் கூட வரவா எனக் கேட்டதற்கு ''வேண்டாம். நீ புதுமாப்பிள்ளை, 'விசிட்டர்ஸ்' வருவாங்கள் வீட்டிலேயே இரு'' என்று தடுத்துவிட்டு, அவள் வீடு இருக்கும் திக்கில் நடக்கத் தொடங்கினான்.

அவளைப் போலவே வீடு பளிச்சென்றிருந்தது. எங்கு எந்தச் செடியை வைத்தால் எடுப்பாக இருக்கும் என்று இங்கு வந்த பின் தான் கண்டு கொண்டான். அங்குள்ள பெரும்பாலான வீடுகளைப் போலவே இவள் வீட்டு கூரைக்கும் தகரம் பொருத்தியிருந்தார்கள். சுற்றிவர வேப்ப மரங்களும், புளியமரமும் நிழல் சொறிந்தன. காற்று ஒரே சீராக வீசிக்கொண்டிருந்தது. இந்த நிழலில் ஒரு சாக்குக் கட்டிலை விரித்து தூங்கினால் உண்டாகும் சுகத்தை மானசீகமாக அனுபவித்தான். இரு மரத்தின் மருங்கிலும் தொடுக்கப்பட்ட கயிற்றுச்சாடியில் சில ஆடைகள் உலர்ந்தன. அவளுக்கு மிகவும் பிடித்தமான மல்லிகைப்பூவும், நட்ஷத்திரங்களும் பொறித்த ஒரு சோளி இவன் வரவை கண்டுவிட்ட ஆனந்தத்தில் கையசைப்பதுபோல் காற்றிலாடி குதூகலித்தது. அவள் கழுத்து வியர்வை சம்பந்தமில்லாமல் நாசியை நிறைத்தது.

மிகுந்த பெருமூச்சுடன் கதவைத் தட்டினான். இதயம் வேகமாக துடிக்க ஆரம்பித்தது. குறுகுறுவென்று முற்றத்தில் கோழிகள் வந்து மேய்ந்தன. பின்கட்டில் புகை கிளம்பி மேலேகிக் கரைந்தது. அடுப்படியில் ஏதோ வேலையாக இருப்பாள். மீண்டும் ஒரு பலமான தட்டு. உள்ளே நடந்து வரும் ஓசைத் தொடர்ந்து படீரென்று தாழ்ப்பாள் விலகியது. இருவரின் முகத்திலும் அதிர்ச்சி மின்னல் வெட்டி மறைந்தது.

பரஸ்பரம் குசலம் விசாரித்துக் கொண்டார்கள். பழைய நண்பர்கள் தோழிகள் பற்றி நிறையப் பேசினார்கள். அவளுடனான இவனின் நட்பையும், அதில் ரசிக்கத்தக்க சில நிகழ்வுகளையும் அவன் தோண்டியெடுத்து பேசியபோதெல்லாம் தான் இதில் சம்பந்தப்படவே இல்லையென்பதுபோல் பேச்சின் திசையை வெகு இயல்பாக திசை திரும்பியதைக்கூட இவன் கவனிக்கவே செய்தான்.

உள்ளே படுத்திருந்த குழந்தை வீறிட்டுக் கத்தியது. ஒரு பதற்றம் அவளைப் பற்றிக் கொண்டது. உறக்கம் கலைந்த எரிச்சலுடன் குழந்தை அவள் தோளில் முகத்தை உரசி கண்களை சிலுப்பிக் கொண்டு இவனைப் பார்த்து மிரண்டது. இனி மேலும் தாமதிப்பது அழகல்ல என்ற நினைப்பே அவனில் இருளாய் கவிழ்ந்தது. விடை பெற்று திரும்பியவன் ஏதோ நினைவு தவறியவனாய் குழந்தையின் பெயரைச் சொல்லலியே என்றான். "சுல்பா'' என்றாள் முகத்தில் எந்தச் சலனமுமின்றி. இவனுக்கு சர்வாங்கமும் ஆடிப்போயிற்று. மனசின் ஆழத்தை தீக்குச்சியால் சுட்டதுபோல் துடித்துப் போனான். 'சுல்பி' என்ற இவன் பெயரை மறக்கமுடியாமல் தன் குழந்தைக்கு சூட்டியுள்ளதை நினைக்கையில் விழிகள் நிறைந்தன.

அவள் விழிகளிலும் அந்த ஈரம் எட்டிப் பார்த்தது. ''அடுத்த முறை இங்கு வந்தால் அவசியம் வீட்டுக்கு வந்து போங்க தனிய இல்ல ஒரு துணையுடன்'' என்றவளின குரல் அடைத்திருந்தது.

நூற்றுக்கணக்கான வெண்புறாக்கள். ஏக காலத்தில் மனசில் சிறகடித்துப் பறந்தன. இன்னும் ''நான் நேசிக்கப்படுகின்றேன்" என்ற கர்வத்தில் அவன் நெஞ்சு பூரித்தான். உலகத்தில் தன்னைவிட அதிர்ஷ்டசாலி இல்லையென்ற தலைக்கணத்தில், காற்றில் மிதந்தபடி மறுபடியும் திருமண வீட்டுக்கே திரும்பிச் சென்றான்.



## எனது மரணம் சில வேளைகளில்

வாக்களித்தபடி
அங்கே உனக்காகக் கொணர்வதற்கு
நிறையவே இருந்தன

வந்திறங்கிய நாய் களைப்பு:
அக்கடற்கரை உல்லாச விடுதியின்
குளியலறையில் நனைந்ததில்
நான் மீண்டும் உயிர்த்தேன்.

தூரத்தே
அழகாக வானத்தைக் கவ்வியிருந்தது
அக்கடல்:
அலைகள் தமக்குள் என்னை விடுத்து
எதையெதையோ
பின்னிப் பின்னிப் பார்க்கின்றன.
நுரை மணிகள் கோர்த்து இழைக்கப்பட்ட
அக்கடற்கரைக் கம்பளத்தில்
குழந்தை நண்டுகள்
தம் சின்னஞ்சிறு கண்களை
எறிந்து எறிந்து விளையாடின.

படம் ஒன்று வரைந்தேன்

தனித்திருந்த அம்மரக்கிளையில்
திடுமென முளைத்துச் சிலிர்த்த
அணில் பிள்ளையும்
ஏதோ ஒரு செய்தியுடன்
வந்திருந்தது. அதனையும் எழுதினேன்.

பூஞ்சோலை நடுவே வெள்ளைக்கார
உல்லாசக் கன்னியர்களின்
கொங்கைகள் அழகழகாய் வீழ்ந்து
கிடந்த
நீச்சல் தடாகத்தில்
நான் எடுத்து வைத்தவற்றுள்
எப்படியோ அகப்பட்டுக் கொண்டன.

கைகளைப் பலாத்காரமாய்
கரண்டிகளாக்கி உணவருந்திய
என் நண்பனொருவனின்
அவஸ்தைகளும் இதில் அடக்கம்.

யாவற்றையும் சேகரித்து
இறுதியில் புறப்பட்டேன்
நடுமதிய சூரியன் கொளுத்தியிருந்த
புழுதிச் சுவாலைத் தெரு வழியே,
ஒவ்வொரு இராணுவக் காப்பரண்களிலும்
ஏறி இறங்கி
இறங்கி ஏறி வந்ததில்
எங்கு விழுந்து காணாமல்
போயின இவைகள்?
அல்லது
கைது செய்யப்பட்டு எங்கு
சிறை வைக்கப்பட்டுள்ளன
இவைகள்?

ஆசையுடன் கொணர்ந்த ஓர் அழகிய
வெண்புறாக் குஞ்சு
ஒரு நடு நிசியில் பூனையினால்
காணாமல் போன சோகம்.

விடு திரும்பிய போது,
அரிசி ஆலையின் அலறலில்
அதன் தீனக்குரலில்
வெறும் உமி மூட்டைகளையும்
நெல் மூட்டைகளையும்
சுமந்த பெரும் ராட்சத வாகனங்களின்
உறுமலில்
நான் செத்துக் கிடந்தேன்
எனது வாசலிலேயே

கல்லூரன்

நன்றி - நூலகத்திட்டம்



# தகவல் யுகத்தில் தமிழ்

- சி. ஜெய்சங்கர்

### 01. அறிமுகம்

இன்றைய உலகம் தகவல் யுகம் என்றழைக்கப்படுகின்றது. தொடர்பாடல் ஒளியின் வேகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்று தகவல்களை ஆள்பவர் உலகத்தை ஆள்பவராகின்றார்.

வரலாற்றில் அதிமுக்கியத்துவம் உடையதாக, தகவல் புரட்சி ரத்தம் சிந்தாத புரட்சியாக, புத்திசாதுரியம் மிக்கவர்களும், கடும் உழைப்பாளிகளுமான பல மனிதர்களின் பல ஆண்டுகால உழைப்பில் கனிந்து கொண்டிருக்கிறது.


தகவல் தொழில் நுட்பங்களில் கொண்டு வரப்பட்ட சில மாற்றங்கள் தகவல் புரட்சிக்கு வித்திட்டிருக்கின்றன. முக்கியமாக இரண்டு தொழில்நுட்பங்கள் இதில் பங்கெடுக்கின்றன. ஒன்று, தகவல்களைப் பரிமாற்றம் செய்வதற்கான நவீன தொடர்பாடல் தொழில்நுட்பம், மற்றையது, பரிமாற்றம் செய்து கொள்ளப்படும் தகவல்களை ஒழுங்காக்கம் (Process) செய்வதற்குரிய நவீன கணணி முறைமைகள் என்பவையே அந்த இரண்டுமாகும்.

தகவல்களின் அசைவியக்கம் கடுமையாக அதிகரித்திருக்கின்ற இத்தகைய உலகில், ஒரு சமூகத்தின் பலமான வளர்ச்சி என்பது தகவல்களையும் அறிவையும் அதிகளவிலும், அதிக வேகத்திலும் பரவச் செய்வதில் தங்கியிருக்கிறது. இதன் மூலம் பொருளை உற்பத்தி செய்வதில் அல்லது பெருக்குவதில் அறிவின் அதிகரித்த முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றது. தகவல் புரட்சி, பொருட் செல்வத்தின் முக்கியத்துவத்தை இழக்கச் செய்து, அறிவைச் செல்வமாகக் கொள்ளச் செய்திருக்கிறது. இது குறைந்த வளங்களில் நிறைந்த பயனைச் சாத்தியமாக்குவதுடன் தொடர்புபடுகிறது. எனவே இத்தகையதொரு சூழ்நிலைக்கேற்ற வகையில் தமிழர் சமூகம் எந்த வகையில் தகவமைத்துக் கொள்ளப் போகின்றது என்பதும், இவை பற்றிய ஆழ்ந்த சிந்தனைகளையும், திறந்த விவாதங்களையும் பொருத்தமான செயற்பாடுகளையும் எவ்வாறு முன்னெடுக்கப் போகின்றது என்பதும் ஆழ்ந்த அக்கறைக்குரிய விடயங்கள் ஆகின்றன.

இது பற்றிச் சிந்திக்கின்றபோது, தமிழ்ச் சமூகத்திற்குரியதாக தகவல் யுகம் ஆக்கப்படுதல் பற்றிச் சிந்தித்தல் அவசியமானதாகும். தகவல் யுகத்தை முழுமையாக தமிழ் மக்களுடையதாக்குவது என்பது மொழி தொடர்பாகவும், பண்பாடு தொடர்பாகவும், தகவல் தொழில்நுட்பம் தொடர்பாகவும், தகவல் தொடர்பாகவும் மற்றும் சர்வதேச ரீதியில் ஆதிக்கம் தொடர்பாகவுள்ள பிரச்சினைகளுடனும், தமிழ்ச் சமூகத்துள் நிலவுகின்ற ஆதிக்கம் தொடர்பாகவுள்ள பிரச்சினைகளுடனும் சம்பந்தப்படுத்த வேண்டியிருக்கிறது. தமிழர் சமூகத்தில் வாழும் சமூக விஞ்ஞானிகளாக இத்தகைய அரசியல் பற்றிச் சிந்தித்தல் இக்கட்டுரையின் நோக்கமாகும். இதன் மூலமாக இணையத்தமிழ் பற்றிய சமூக விஞ்ஞானப் பார்வையை நம்மிடையே தெளிவாக்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

### 02. காலனித்துவங்களும் விடுவிப்புக்களும்

பிரித்தானியக் காலனித்துவத்துக்கு உட்பட்டதன் காரணமாகத் தமிழர் சமூகத்தின் அறிவுச் செல்வம் காலனிய மயப்பட்டு, பிரித்தானிய மையப்பட்டு இருப்பது ஆழ்ந்த கவனத்திற்குரியது. எனவே காலனியமயப்பட்ட பார்வை அல்லது நோக்குநிலையிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கான போராட்டமும், அது தொடர்பான உரையாடல்களும் நடவடிக்கைகளும் இன்றைய அவசியத் தேவையாகியுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் எமது சமூகத்தில் அறிஞர்களாகக் கருதப்படுபவர்களில் பெரும்பாலானோர் பிரித்தானிய மையச் சிந்தனையாளர்களாகவும், அமெரிக்க மையச் சிந்தனையாளர்களாகவும் காலனித்துவத்தின் குழந்தைகளாகவும், நவகாலனித்துவத்தின் குழந்தைகளாகவும் இருப்பதை அவதானிக்க முடியும். சமகாலத்தில் தமிழில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சூழல் சார்ந்த வளர்ச்சிப் போக்குகள் பற்றிய பிரக்ஞை அற்றவர்களாக இவர்கள் இருப்பதையும் தெளிவாகக் காண முடிகிறது. இத்தகையவர்களே "கணனி அறிவும் ஆங்கில அறிவும் இல்லையேல் எதிர்காலம் இல்லை" என்று பேசியும் எழுதியும் வருவதை இன்று பரவலாகக் காணமுடியும். இத்தகைய சிந்தனைப் போக்கு அவர்களது சுயத்தை கேள்விக்குள்ளாக்குவதைக் கூட புரிந்துகொள்ள முடியாத பரிதாபநிலை அவர்களுடையது. இதே வேளை கணனி என்ற சாதனத்தின் அறிமுகம் தமிழ்இணையம் என்பதாக வளர்ச்சி கண்டு வருகிறது. தமிழ்நாட்டில் நடைபெற்ற தமிழ் இணையம் 99' மாநாடு இந்த வளர்ச்சிப் போக்கிற்கு சமூக, அரசியல், பண்பாட்டு அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறது. இந்த வகையில் இணையத்தில் பூகோளத் தமிழ்க் கிராம உருவாக்கத்தின் வாசல்கள் திறக்கப்பட்டிருக்கின்றன.




### 03. நவகாலனித்துவமும் தொழில்நுட்பமும்

தகவல் யுகத்தில் கணனிப் படிப்பறிவைப் பெற்றுக்கொள்ள ஆங்கில மொழியையும் கணனி மொழியையும் அறிந்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. பிரித்தானிய அமெரிக்கப் பண்பாடுகளின் உன்னத அறுவடையான கணனித் தொழில்நுட்பம் அப்பண்பாடுகளை பிரிதிநிதித்துவப்படுத்துவதாக, இயல்பில் பிரித்தானிய மயப்பட்டதாகவும் அமெரிக்கமயப்பட்டதாகவும் இருப்பது ஆச்சரியமானதல்ல. இதன் காரணமாக எமது சமூகத்தில் கணனித் தொழில்நுட்பத்தின் அறிமுகத்துடன் அதன் ஆங்கிலமயப்பாடும் உக்கிரமடைந்து வருவது தர்க்கபூர்வமான வளர்ச்சிநிலை ஆகியிருக்கின்றது. இதுவே "ஆங்கிலம் இல்லையேல் எதிர்காலம் இல்லை" என்ற நிலைப்பாட்டினை ஆழமாக வேரூன்ற விட்டுள்ளது. உண்மையில் இங்கு நவகாலனித்துவம் வெற்றி பெற்றிருக்கின்றது. ஊடகமே செய்தி (Medium is the Message) என்ற மார்ஷல் மக்லூஹனின் பிரசித்தமான கூற்றை மேற்கூறிய பின்னணியில் நன்கு விளங்கிக் கொள்ள முடியும். கணனி என்ற சாதனத்தின் வருகையுடன் அமெரிக்க மற்றும் பிரித்தானிய மையப் போக்கும், ஆங்கிலத்தின் மேலாதிக்கமும் மேலும் உறுதிப்பாடுடையதாகி வருவதைத் தெளிவாகவே அவதானிக்க முடிகிறது.

### 04. தமிழர் சமூகமும் தொழில்நுட்பமும்

இச்சூழ்நிலையில் இன்று உலகம் முழுவதும் வாழ்ந்து வருகின்ற எட்டுக் கோடி தமிழர்களும் ஆங்கில அறிவு பெற்று அதன் மூலமாகக் கணனி மற்றும் இணையம் என்பவற்றின் நன்மைகளைப் பெறுவது எந்தளவிற்குச் சாத்தியமானது என்பது பெரும் கேள்விக்குரியதாகின்றது. மேலும் ஆங்கில மொழிமூலமாகக் கணனி அறிவைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது சமூகத்தில் புதியதொரு ஆதிக்கப் பிரிவை வளர்த்து விடுவதாகவே இருக்கும். இது தமிழ் சமூகத்தில் ஏற்கெனவே நசுங்குண்டிருக்கும் சமூகப் பிரிவினர் மேலும் நசுங்குண்டு போவதற்கே வழிவகுப்பதாக இருக்கும். எனவே நவீனகால வளர்ச்சிகளில் தமிழ்மொழியை ஈடுபடுத்துவதன் அவசியம் பற்றிய சிந்தனையும் அது பொது மக்களுக்கு பொசிய வேண்டும் என்ற நோக்கும் கூர்மதி கொண்டோரில் உதித்துத் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக தமிழர்களில் பெரும்பாலானோர் தமிழை மட்டுமே அறிந்தவர்களாதலினால் அவர்களுக்கும் கணனி பயனுள்ளதாக வேண்டுமெனில் அது தமிழ்மயப்பட வேண்டும். அது சகல மக்களுக்கும் உரியதாக வேண்டும் என்ற சிந்தனை செயற்பாட்டு வடிவம் பெற்று வருகிறது.

தொழில்நுட்ப ரீதியாக ஈட்டப்பட்டுக்கொண்டிருக்கிற தமிழ் இணையம் உலகளாவிய ரீதியில் தமிழில் தொடர்பு கொள்ளவும், பொருளாதார உறவுகளை வளர்த்துக் கொள்ளவும், சிந்தனைப் பரிமாற்றங்களை செய்து கொள்ளவும் வழிவகுக்கின்றது. இந்த வகையில் பூகோளத் தமிழ்க் கிராமம் கட்டமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதன் அடுத்த கட்ட வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தமிழ் இணையம் 99' மாநாட்டில் மூன்று முக்கிய குறிக்கோள்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன, தமிழ் விசைப்பலகையின் சீரமைப்பு , தமிழ் எழுத்துக்களுக்கான குறியீடுகளில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல், வருங்காலத் தமிழ் இணையம் பற்றிய ஆய்வு என்பவையாகும். இந்தக் குறிக்கோள்களை நோக்கிய துரிதமான பயணிப்பு தகவல் யுகத்தில் தமிழின் வலுவை அதிகரிப்பதாக இருக்கும். தமிழர்களது பொருளாதார வாழ்வை வளப்படுத்துவதில் பெரும் பங்கு வகிப்பதாக இருக்கும்.



ஏனெனில் எந்தவொரு மொழியும் அந்த இனத்தின் பொருளாதார வாழ்வுக்குப் பயன்படாதுவிட்டால் அந்த மொழி காலத்தால் அழியும். மொழி அழிந்தால் இன அடையாளம் வலுக்குன்றும் இனத்தின் மனவெழுச்சி குன்றும். எனவே தமிழ் இணையம் மூலம் எய்தப் பெறும் தமிழர் சமூகத்தின் பொருளாதார ரீதியான வளர்ச்சி தமிழை தமிழர் சமூகத்தை முக்கியத்துவமுள்ளதாக்குவதில் பெரும் பங்கு வகிக்கும்.

### 05. சமாந்தரமான தொழில்நுட்ப முன்னெடுப்புகள்

தகவல் யுகத்தில் ஆங்கிலத்தின் மேலாதிக்கத்திற்கு மாற்றாக வேறு தொழில்நுட்ப முன்னெடுப்புகளும் நிகழ்ந்து வருகின்றன. இவை தகவல் யுகத்துள் நுழைவதற்கு மொழி ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. இந்த நோக்கத்தை அடைவதற்கான தொழில்நுட்ப முறைமைகளாக இயந்திரப் பொறி மொழி பெயர்ப்பு முறைமையும், உலகிலுள்ள மொழிகள் எல்லாவற்றுக்கும் பொதுவான குறியீட்டு முறைமையும் புழக்கத்திற்கு வருகின்றன.

"இயந்திரப்பொறி மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து மற்றுமொரு மொழிக்கு தன்னியக்க முறையில் கணனிகள் ஊடாக நிகழ்த்தப்படும் மொழிமாற்ற ஒழுங்காக்கமாகும். தற்பொழுது எழுத்து வடிவிலமைந்த இயந்திரப்பொறி மொழி பெயர்ப்பு முறைமையே அறிமுகமாகி வருகின்றது. பேச்சு வடிவிலமைந்தவற்றின் மொழி பெயர்ப்பு முறைமை இன்னமும் ஆராய்ச்சி மட்டத்திலேயே உள்ளது." (Mohanrajah S. 1998, Language Assistant, M.Sc Thesis (unpublished)

"தற்பொழுது உலகின் பல பாகங்களிலும் பல இயந்திரப்பொறி மொழிபெயர்ப்பு முறைமைகள் புழக்கத்தில் இருக்கின்றன. (உ-ம்) கனடா தேசத்தின் காலநிலை அவதானிப்பு நிலையம் காலநிலை அறிக்கைகளை மொழிபெயர்ப்பதற்கும், பேர்க்கிங் என்ஜின்ஸ் நிறுவனம் தனது டீசல் இயந்திரப் பாவனையாளர் கையேடுகளை மொழி பெயர்ப்பதற்கும் பயன்படுத்துகின்றன." (மேற்படி)

"இந்த இயந்திரப்பொறி மொழிபெயர்ப்பு முறைமை மனித மொழிபெயர்ப்பாளருக்கு மாற்றாக அமையக் கூடியதல்ல. ஏனெனில் இம்முறைமையினூடாக பருவரையான மொழிபெயர்ப்பினையே செய்ய முடிகிறது" (மேற்படி) மேற்படி இயந்திரப்பொறி மொழிபெயர்ப்பு முறைமை மேலதிக ஆராய்ச்சிக்கும், செயன்முறைக்கும் உள்ளாகியிருக்கின்ற சூழ்நிலையில் எமது சூழலில் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கான இயந்திரப்பொறி மொழிபெயர்ப்பு முறைமை பற்றிய ஆராய்ச்சியான Language Assistant-towards automatically translating text from English to Tamil in a controlled environment என்ற தலைப்பில் அமைந்த எஸ். மோகன்ராஜ்ஜின் ஆராய்ச்சி கவனிப்பிற்குரியதாகின்றது.

உலகிலுள்ள மொழிகள் எல்லாவற்றிற்கும் பொதுவான குறியீட்டு முறைமையை (Unicode),

அ. உலகிலுள்ள அனைத்து மொழிகளின் எழுத்துக்களுக்கும் ஒரே முறையிலான குறியீடு முறையை கொண்டு வருவதற்காக

ஆ. எல்லா மொழிகளிலுமே கணனிப்பொறியை உபயோகிப்பதற்காக

இ. வரிசைப்படுத்தல் (sorting), தேடுதல் (searching), தகவல் சேகரிப்பு (Data collection), தகவல் பரிமாற்றம் (Data interchange) ஆகியவற்றை எல்லா மொழிகளுக்கும் கொண்டு வர

ஈ. மொழி என்பது கணனிப்பொறி உபயோகத்திற்கு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக

வடிவமைக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இதனைத் தயாரித்து அளிப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ள Unicode consortium என்ற அமைப்பில் தமிழக அரசும் உறுப்புரிமை பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### 06. தமிழ்மொழியும் ஆராய்ச்சியும்

உலகின் புராதன மொழிகளில் ஒன்றாகக் கருதப்படும் தமிழ் மொழியின் வரலாறு செம்மையானதாகவும், பரவலான வாசிப்பிற்குரியதாகவும் எழுதப்பட்டதாக இல்லை. பல்வேறு காரணங்களால் வரலாற்றின் பல்வேறு காலங்களில் ஏற்பட்ட தமிழர்களது பரம்பல்கள் தமிழ்மொழியை உலகம் முழுவதும் பரவச் செய்திருக்கிறது.

தமிழர்களது வாழ்வியல் தமிழ் மொழியின் இருப்பையும் அதன் பாவனையையும் உறுதி செய்திருக்கிறது. இந்த வரலாற்று வளர்ச்சி பற்றிய விரிவானதும் ஆழமானதுமான எழுத்துக்களின் வரவு அவசியமாகிறது. இவ்விடயத்தில் சமூகவியல் மொழியியலாளர்களது பணி முக்கியமானதாகிறது.

ஏனெனில் தகவல் மைய நூற்றாண்டாகவும், அறிவுமைய நூற்றாண்டாகவும் அமைந்திருக்கின்ற 21ம் நூற்றாண்டிற்கு உரிய வகையில் தமிழ்மொழியை எடுத்துச் செல்லும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தவேளையில் தமிழ் மொழியின் இன்றைய நிலை, எதிர்காலத் தேவை என்பவை பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியமானதாக இருக்கின்றது. இத்தேவையைக்

கருத்தில் கொண்டு தமிழ்மொழியின் கடந்தகால மற்றும் சமகாலப் புழக்கம் அல்லது பயன்பாடு இவை காரணமாக மொழி வடிவமைக்கப்பட்டிருக்கின்ற முறைமை பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான ஆய்வுகள் அவசியமாகின்றன.

ஏனெனில் மொழி உலகநோக்கை வடிவமைக்கின்றது. எனவே மாற்றம் பற்றிச் சிந்திக்கின்றபொழுது அது பயில்முறையிலுள்ள அல்லது புழக்கத்திலுள்ள மொழிவழக்கை, மொழியமைப்பை மாற்றுவதுடன் தொடர்புபடுகிறது. இது சமகாலத்தில் சமூக நோக்கில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற பெண்ணிலைவாதம், தலித்தியம், பல்லினப் பண்பாடு, மனித உரிமைகள், சுற்றுச்சூழல் போன்ற எண்ணக்கருக்களுடனும், பின்காலனித்துவம், பின்நவீனத்துவம் போன்ற கோட்பாடுகளுடனும் புதிய தொழில்நுட்பச் சாதனங்களின் தன்மையுடனும் தொடர்புடையதாக இருக்கின்றது.

### 07. தமிழ் இணையத்தின் அரசியல்

பூகோள ரீதியாகத் தமிழரிடையே இணைவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற தமிழ் இணையம் இருவழித் தொடர்புடையதாக இருக்கின்றது. இந்த இருவழித் தொடர்புகொள்ளும் தன்மை சமூகத்தின் அதிகாரத்துவ மையத்தைத் தகர்த்துவிடுவதிலும் அதன் மூலமாக ஜனநாயகத் தன்மை வாய்ந்த சமூக ஊடாட்டத்தை உறுதிசெய்வதிலும் பங்கெடுக்கக் கூடியதாக இருக்கிறது. சமூகத்தின் அபிவிருத்தியில் இந்த ஜனநாயகத் தன்மையின் அவசியம் அமர்த்யா சென் போன்ற பொருளியலாளர்களாலும் வற்புறுத்தப்படுகின்றது. எனவே தமிழ் இணையம் தமிழர் சமூகத்தில் நிகழ்ந்து வருகின்ற புதிய சமூக மாற்றங்களின் வாசலாகவும் மாறி வருகின்றது.

எனினும் சமகாலத் தமிழ்ச் சமூகமானது அதிகாரம் அல்லது ஆதிக்க நிலைமைகள் சார்ந்து சமனற்ற முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ் இணையத்தின் செயற்பாட்டாக்கம் அல்லது பரவுகை சமனற்ற தன்மையை வெளிக்காட்டும். ஏனெனில் 'தமிழ்' அல்லது 'தமிழ்ச் சமூகம்' என்பது பிரச்சினைகளற்ற அல்லது பிரிவினைகளற்ற முழுமையல்ல. எனவே இந்தப் பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றோம் என்பது இங்கு உரத்த சிந்தனைக்குரியதாகும்.

அதாவது, தமிழ் இணையம் என்பது தமிழ்ச் சமூகத்திற்கு வெளியான அதிகாரத்துவ அல்லது ஆதிக்க நிலைமைகளை எதிர்கொள்வதாக மட்டுமல்ல தமிழ்ச் சமூகத்துள் நிலவுகின்ற அதிகாரத்துவ அல்லது ஆதிக்க நிலைமைகளை எதிர்கொள்வதாகவும் இருப்பது அடிப்படைத் தேவையாகும். அந்த வகையிலேயே மேற்படித் தொழில்நுட்ப வளர்ச்சி முன்னெடுக்கப்பட வேண்டும். இது தொழில்நுட்ப வளமும், தொழில்நுட்ப அறிவும் பரவலாக்கப்படுவதுடனேயே சாத்தியமாகும். இத்தகைய வளர்ச்சிப் போக்கே தமிழ் இணையம் முழுத் தமிழ்ச் சமூகத்திற்குமுரியதாக ஆக்கபூர்வமான முறையில் தமிழ்த் தகவல் யுகமாக பரிணமித்தலைச் சாத்தியமாக்கும்.

### 08. தமிழ்மொழியும் அரசியலும்

ஒரு மொழியின் வரலாறு அம்மொழியைப் பேசும் மக்களுடைய வரலாற்றுடன் மிக நெருக்கமாகப் பிணைந்திருக்கின்றது. தமிழர்களுடைய வரலாற்றில் நிகழ்ந்த சமூக, அரசியல் நிகழ்வுகள் அவர்கள் பேசும் மொழியிலும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. தமிழர்களது தேசிய அடையாளம் தமிழ்ப் பண்பாட்டை அடித்தளமாகக் கொண்டது. இந்த தமிழ்ப் பண்பாடு தமிழ்மொழியால் தீர்மானிக்கப்படுகின்றது. அரசியல் விடுதலைக்கான வரலாற்று இயக்கத்தில் தேசிய அடையாளமும், மொழியும் இணைந்தே காணப்படுகின்றன.

காலனித்துவப்படுத்துவதில் குறிப்பாக நவகாலனித்துவப்படுத்துவதில் மொழியும், இலக்கியமும் சக்திமிக்க முறைமைகளாகத் திகழ்கின்றன. நேரடி ஆதிக்கத்தின் மூலம் காலனியப் படுத்தப்பட்டவர்களின், மனங்களை தொடர்ந்தும் ஆதிக்கத்துள் வைத்திருப்பதற்கான ஊடகங்களாக மொழியும், இலக்கியமும் விளங்குகின்றன.

"ஒரு சமூகத்தில் மொழியின் பங்கு மந்தத் தன்மை வாய்ந்ததல்ல, வெறுமனே தொடர்பாடலுக்கான சாதனமாகச் சேவகம் செய்வதோ, நடைமுறையிலுள்ள சமூகத்தை அல்லது பண்பாட்டை பிரதிபலிப்பதோ மட்டுமல்ல. தமிழ்மொழி உரிமைக்கான போராட்டம் என்பது தமிழ் அரசியல் போராட்டத்துடன் உட்பொதிந்த பகுதியாகவே பார்க்கப்படவேண்டும்". "உத்தியோகபூர்வ மொழிகள்- யதார்த்த நிலை" என்ற ஆங்கிலக் கட்டுரையில், உத்தியோகபூர்வ மொழிகள் ஆ[illegible]க் குழுவின் தலைவராக இருந்த ச[illegible]ஸ் அபயசேகரா அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.(Sunday Observer 1.Sep.96).

மேற்படி கட்டுரையில் மதிப்புமிக்க அறிஞரான Burke என்பாரையும் மேற்கோள் காட்டுகின்றார். அந்த மேற்கோள், "சமூகத்தில் மிகவும் வலுவான சக்தியாக விளங்குகின்ற மொழி, மற்றவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகவோ அல்லது கட்டுப்படுத்தப்படுவதிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காகவோ தனிநபர்களால் அல்லது குழுக்களால் பயன்படுத்தப்படுகின்றது" என்கிறது தகவல் யுகத்தில் தமிழின் நிலையும் கட்டுப்படுத்தப் படுவதிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான முயற்சியாகவே இருக்கின்றது.

### 09. தமிழ்மொழியும் மனப்போக்கும் மாற்றமும்



நினைப்பும் மனப்போக்கும் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை விளங்கிக்கொள்ள, பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் பிரதித் தவிசாளர் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள், கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர், புலவர், வித்துவான்கள் மாநாட்டில் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆற்றிய உரை உதவும்.

"தமிழ்ப் பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் ஆங்கில மொழியை இலகுவாகப் படிக்க பேசுவதற்குப் படிப்பிக்கின்றனர். ஆனால் தாய் மொழியாகிய தமிழ் மொழியில் இந்த ஆர்வம் காட்டப்படுவதில்லை. பெற்றோர்கள் தம் பிள்ளைகளைத் தாய்மொழியில் ஆர்வங் கொள்ளச் செய்ய வேண்டும். தமிழ்ப் பிள்ளைகள் தமது வாழ்க்கையில் தமிழ் இலக்கியங்களைப் பொக்கிஷங்களாகக் கொள்ளக் கூடிய நிலைவேண்டும்." என்று உரையாற்றியிருப்பதை அவதானிக்க முடியும். (01/மார்ச்/99 "தினகரன்" )

இங்கு தாய்மொழியான தமிழ்மொழி மீதான ஆர்வமின்மையும், ஆங்கிலமொழி மீதான ஈடுபாடும் சுட்டிக்காட்டப்படுகிறது. தமிழ்மொழி மீது பிள்ளைகளை ஆர்வங்கொள்ளச் செய்யும் பொறுப்பு பெற்றோர்கள் மீது சுமத்தப்படுகிறது. ஆனால் அறிஞர்கள், கல்வியாளர்களது பங்கு என்ன என்பது பற்றி அச்செய்திக் குறிப்பிலிருந்து அறிய முடியவில்லை.

மேலும் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களும் தமிழ்மொழியை பொக்கிஷமாக நோக்கியிருப்பதையே அச்செய்தியில் இருந்து அறிய முடிகிறது. இத்தகைய பொக்கிஷமாகப் பேணும் மனப்பான்மை தமிழை நூதனசாலைக்குரிய ஒரு விடயமாகக் கொள்ளக்கூடிய நிலைமைக்கே இட்டுச்செல்லும். இவற்றுக்கு மாறாக மொழியை பயன்பாட்டு நோக்கில் அணுக வேண்டும். சமகாலப் பயன்பாட்டுக்குரிய வகையில் மொழியைச் சீர்திருத்துவது அல்லது மாற்றியமைப்பது பற்றியே சிந்திக்க வேண்டும்.

ஆங்கில மொழியின் வரலாறு என்ற நூலின், "நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் ஆங்கிலம்" என்ற அத்தியாயத்தில் மொழியியலாளரான பிறாஜ் கசுறுவின் கீழ்க்காணப்படும் கூற்று மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. " 650 க்கும் மேற்பட்ட செயற்கையான மொழிகள் தோல்வியடைந்த இடத்தில், ஆங்கிலம் வெற்றி பெற்றது, அரசியல், பொருளாதார பலத்துடன் இருந்த பல இயற்கையான மொழிகள் தோல்வியடைந்த இடத்தில் ஆங்கிலம் வெற்றி பெற்றது. இந்த முக்கியத்துவத்திற்கு இருக்கின்ற ஒரு காரணம் ஆங்கிலமொழி கொண்டிருக்கின்ற குணாம்சமாகும். புதிய அடையாளங்களைப் பெற்றுக் கொள்கின்ற, உட்செரித்துக் கொள்கின்ற சக்தி, மொழி என்ற வகையில் காலனியத் தகர்வுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளும் தன்மை, வகைப்பாடுடையதாக வளரும் தன்மை இவை எல்லாவற்றுக்கும் மேலாக வேறு மொழிகள், பண்பாடுகள் நிலவும் சூழலிலும் இலக்கிய மற்றும் வேறு வகையான ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தக் கூடிய நெகிழ்ச்சியான சாதனமாக உள்ளது".

எனவே தமிழ்மொழியினுடைய இன்றைய நிலைமைக்குக் காரணமாயிருக்கின்ற கூறுகளை அடையாளம் காண்பதும், வலுவான பயன்பாட்டு மொழியாக தமிழ் விளங்குவதற்குத் தேவையான விடயங்களை அடையாளம் காண்பதும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழி வளர்ச்சி பற்றி ஆராய்வதும், அவற்றைப் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் முயற்சிகளை முன்னெடுப்பதும் முக்கியமானதாக இருக்கின்றது. இச்செயற்பாடு தமிழர் சமூகத்தின் பண்பாட்டால் தீர்மானிக்கப்படுகின்ற மனப்போக்குடன் சம்பந்தப்படுகிறது. எனவே புதிய தொழில்நுட்பச் சாதனத்தின் வருகையால் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களை எதிர்கொள்வதற்குரிய வகையில் தமிழர் பண்பாடு பற்றிய விவாதங்களும் அவசியமாகி இருக்கின்றன.

### 10. தமிழ் இணையமும் சர்வதேச அரசியலும்

"சர்வதேச ஜனநாயகத்திற்கான நிபந்தனைகளில் ஒன்று. பன்மொழித் தன்மையாகும் . ஆனால் இந்தக் கருத்து கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.", நாடுகளிடையே ஜனநாயக நடைமுறையை வளர்ப்பதற்கு தம்மை அர்ப்பணித்துள்ள சர்வதேச ஸ்தாபனங்கள் சர்வதேச ஜனநாயகத்திற்கான சூழலை உருவாக்குவது குறித்து அக்கறை காண்பிக்காது இருக்கின்றன.", "அபிவிருத்தி, சூழல், மனித உரிமைகள், இனங்களின் சமத்துவம் போன்ற பன்மொழித் தன்மையும் ஒரு போராட்டமாகவே இருக்கும்." என்று "சர்வதேச மொழியின் பெருமை" என்ற தலைப்பிலமைந்த சிறிய கட்டுரையில் முன்னாள் ஐ.நா. செயலாளர் நாயகமான பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி குறிப்பிடுகின்றார். ( தினக்குரல் 19/4/99)



எனவே தமிழில் தகவல் புரட்சி அல்லது தமிழ்த் தகவல் யுகம் என்பது "ஆங்கிலமில்லையேல் எதிர்காலமில்லை" என்ற மாயையை உருவாக்கிக் கொண்டிருக்கும் நவகாலனித்துவத்தின் நுகத்தடியில் இருந்து தமிழர் சமூகத்தை விடுவிப்பதாக மட்டுமல்லாமல், ஆங்கில மொழியின் மேலாதிக்கத்திற்கு மாற்றாக இயங்கும் பன்மொழித்தன்மையை முன்னிறுத்தும் சர்வதேச ஜனநாயகப் போராட்டத்தின் கூறாகவும் ஆகியிருக்கின்றது.

### 11. தமிழர் சமூகமும் புரட்சியும்

தமிழரது சமூகப் பண்பாட்டு வரலாற்றில், மேற்கில் பெருமாற்றங்களை ஏற்படுத்திய கைத்தொழிற் புரட்சி மற்றும் அறிவொளி இயக்கம் ஆகியவற்றின் விளைவுகள் காலனித்துவ ஆட்சி காரணமாக உள்ளே கொண்டுவரப்பட்டன. அவை எமது சமூகத்துக்குரிய வகையில் எமது சமூகத்தவர்களின் தெரிவுகளுக்குள்ளாகவில்லை. காலனித்துவ ஆட்சியாளர்களால் அவை எமது சமூகத்தின் மீது திணிக்கப்பட்டன. எமது இயல்பான வரலாற்று வளர்ச்சிப் போக்கு மிகப்பெருமளவில் குழப்பத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

நேரடிக் காலனியாதிக்கம் நீங்கினாலும், பொருளாதார ரீதியாகத் தங்கவைத்திருப்பதன் மூலம் காலனித்துவம் புதுப்பரிமாணம் பெற்றுக் கொண்டு நவகாலனித்துவமாயிற்று. காலனித்துவவாதிகளால் கட்டமைக்கப்பட்ட பொருளாதார முறைமையும், கல்வி முறைமையும் இதனைச் சாத்தியமாக்கிற்று. நிகழ்ந்து கொண்டிருக்கிற தகவல் புரட்சி தொடர்புசாதனங்களின் வழியாக நிகழ்ச்சிகளாக, செய்திகளாக, திரைப்படங்களாக இன்னும் பலவாறாக் எம்மால் உணரப்பட முடியாத வகையில் நவகாலனித்துவத் தொழிற்பாட்டை மிக வலுவாக நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் தகவல் புரட்சியை எங்களுக்குரிய வகையில் மாற்றியமைத்துப் பயன்படுத்த முனையும் சமூகமாக தமிழர் சமூகம் மாறியிருக்கிறது. அதாவது காலனித்துவ ஆட்சி காரணமாக மிகப்பெருமளவிற்கு நுகர்வுச் சமூகமாகவே தமிழர் சமூகம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது. தகவல் யுகத்தில், தகவல் புரட்சியின் பங்காளிகளாக மாறிக்கொண்டிருப்பதன் காரணமாக படைப்பாற்றல் மிக்க சமூகமாக மீளவும் தன்னை ஒழுங்கமைக்கத் தொடங்கியிருக்கிறது. காலனித்துவத்தாலும் அதனைத் தொடர்ந்த நவகாலனித்துவத்தாலும் தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற சமூகத்தில் தமிழ் இணையம் என்ற வளர்ச்சிப் போக்கு புரட்சிகரத் தன்மை வாய்ந்ததாக மாறியிருக்கின்றது. தகவல் யுகத்தில் தமிழும் ஆங்கிலமும் போல் கணனித் தமிழ் ஆகியிருக்கிறது. அதாவது நவகாலனித்துவத்தின் கருவியே நவகாலனித்துவத்திற்கு எதிராக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. காலனித்துவத்தால் உருவாக்கப்பட்டு, நவகாலனித்துவத்தால் வளர்த்தெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிற தாழ்வுமனப்பான்மையைத் தகர்த்து விடுவதில் இவ்வளர்ச்சி முக்கிய பங்காற்றிக் கொண்டிருக்கிறது. இச்செயன்முறை தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினருக்கும் வாய்க்கக் கூடியதாகி, ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட்டு வித்தியாசங்களுடன் எல்லாவற்றையும் சமமானவையாகக் கொள்ளும் பொழுதே தமிழ்ர் சமூகத்தில் தகவல் புரட்சி முழு அர்த்தங்கொண்டதாக இருக்கும்.

### 12. அறிவின் சமூகமயமாக்கம்

நவீன வளர்ச்சிப் போக்குகள் தமிழில் நிகழ்ந்துகொண்டிருப்பது உணரப்படாமல் இருப்பதும் பாதகமானது. எனவே நவீன வளர்ச்சிப் போக்குகள் தமிழ்ச் சமூகத்தில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற பிரக்ஞை மக்கள் மயப்படுத்தப்படவேண்டும். இந்த வகையில் 90 களின் ஆரம்பத்திலிருந்தே தகவல் யுகம் பற்றியும், தகவல் யுகமும் தமிழர் சமூகமும் என்பது பற்றியும் சிந்தித்தும், எழுதியும் வருகின்ற மு.திருநாவுக்கரசுவின் பங்களிப்பு முக்கிய கவனிப்புக்குரியதாகும். இது தவிர, இளங்கதிரில் வெளிவந்த தகவல் தொழில் நுட்பம், தமிழர் சமூகத்தில் தகவல் தொழில்நுட்பம் பற்றிய கட்டுரைகள் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவை. அ.சி. உதயகுமார் அவர்களது "புதிய உலக ஒழுங்கு" தொடர்பான எழுத்துக்களும் குறிப்பிடப்படவேண்டியவை.

மேலும் இணையத் தமிழ் 99' சென்னை மாநாடு பற்றி தமிழ் பத்திரிகைகளான 'வீரகேசரி', 'தினக்குரல்' , 'தினகரன்' அக்கறை கொண்டு செய்திகளையும், கட்டுரைகளையும், குறிப்புகளையும், நேர்காணலையும் வெளியிட்டிருந்தன. இவற்றை




வெளிப்படுத்துவதில் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் முக்கிய பங்குவகித்திருந்தார். ஆங்கிலப் பத்திரிகைகளான 'Sunday Times', 'The Island' இல்முறையேதராகி, D.B.S. ஜெயராஜ் ஆகியோர் காத்திரமான கட்டுரைகளை எழுதியிருந்தனர். இவை குறிப்பிடப்படவேண்டிய விடயங்கள். ஆனால் பேராசிரியர் சோ. சந்திரசேகரனின் கட்டுரைக்கு வீரகேசரிப் பத்திரிகை வெள்ளைக்காரச் சிறுமியொருத்தி கணனியை இயக்கும் புகைப்படத்தை பிரசுரித்திருந்தது. இது நாங்கள் எந்தளவிற்கு ஆழமாகக் காலனித்துவப்படுத்தப்பட்டுள்ளோம் என்பதை எங்களுக்குப் புலப்படுத்துகின்றது. கட்டுரைக்குப் பொருத்தமாக தமிழரொருவர் கணனியை இயக்கும் புகைப்படத்தை தெரிவது பற்றிய பிரக்ஞையைக் கொண்டிருக்கவில்லை என்பதனையே அது வெளிப்படுத்துகிறது.

எம்முள் புதைக்கப்பட்டும், புதைக்கப்பட்டுக்கொண்டும் இருக்கின்ற காலனித்துவ, நவகாலனித்துவ எண்ணங்களை, சிந்தனைகளை கோட்பாட்டு ரீதியாக எதிர்கொள்ளும் சமூகமாகவும் தமிழர் சமூகம் மாற்றப்பட வேண்டும். தொழில்நுட்ப ரீதியாக எய்தப்பட்டுக்கொண்டிருக்கிற வளர்ச்சி, காலனித்துவத்தாலும், நவகாலனித்துவத்தாலும் கட்டி வளர்க்கப்பட்டிருக்கின்ற தாழ்வுச் சிக்கல்களில் இருந்து விடுபட்டு எழுந்து மேற்கூறிய கோட்பாட்டு ரீதியான எதிர்கொள்ளலுக்கான மனவெழுச்சியைத் தரும் ஆதாரமாக இருக்கக் கூடியது. மறுதலையாக காலனித்துவச் சிந்தனைப் போக்கிலிருந்து விடுவித்துக் கொள்ளாத சமூகத்தில் எந்தவொரு தொழில்நுட்ப வளர்ச்சியும் முழுமையான பயனை அளிக்கக் கூடியதாக விருத்தியடையாது.

### முடிவு

எனவே தமிழில் நிகழ்ந்து கொண்டிருக்கிற தகவல் தொழில்நுட்பப் புரட்சி பற்றிய விளக்கங்கள், விவாதங்கள் விஞ்ஞான ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும், சமூகவியல் ரீதியாகவும் பரவலாகவும் ஆழமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் பலரது கவனத்தை இத்திசையில் திருப்புவது சாத்தியமாகும்.

பலரது உழைப்பை இத்திசையில் திருப்புவதன் மூலம் இதன் வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கச் செய்ய முடியும். வேகமாக மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்ற தகவல் யுகத்தில், அதற்கேற்ப தமிழர் சமூகத்தினது முன்னெடுப்புகள் அமையாதுவிடின் இனி வரும் நூற்றாண்டிலும் தமிழர் சமூகத்தினது இருப்பு தொடர்ந்தும் பிறரால் தீர்மானிக்கப்படுவதாகவே இருக்கும். எனவே விரைந்து விழிப்-புணர்வுடன் செயற்படுவது இன்றைய காலத்தேவையாகி இருக்கிறது. இதனை நாடிப்பிடித்தறியும் களமாக எதிர்வரும் மார்ச் மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ள "தமிழ் இணையம் 2000" இருக்கும்.

தமிழ்த் தகவல் யுகம் பற்றி அதிக அக்கறை கொள்ளப்படுகிறது. ஏனெனில், இது ஒரு துறையை மட்டுமல்ல முழு வாழ்க்கை முறையையே மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்




# தமிழ் நாடக இலக்கியம் - 3

## எண்பது தொண்ணூறுகளில்

- வெங்கட் சாமிநாதன்

80 - 90களில் ஒரே ஒரு நாடகம் (தழுவல்களை ஒதுக்கி) ராமானுஜர் எழுதியுள்ளார். இது தேசிய நாடகப்பள்ளி ஏற்பாடு செய்து நடத்திய நாடகப் பட்டறையில் பட்டறைத் தயாரிப்பாக மேடையேறியது கடந்த வருடம் சென்னையில். பட்டறையின் இயக்குனர் டில்லி தேசிய நாடகப்பள்ளியின் பேராசிரியர் கே. எஸ். ராஜேந்திரன். மேடையேற்ற சாத்தியம் இல்லாத போதே நாடகம் எழுதியதற்கும், சம்பிரதாய வடிவில் நவீன நாடக மோஸ்தரில் மயங்காது எழுதியதற்கும் இந்திரா பார்த்தசாரதி பாராட்டுக்குரியவர். சுஜாதா இப்போது நாடகங்கள் எழுதுவதில்லை என்பதை நினைவு கொள்ள வேண்டும்.

ராமானுஜர் நவீன நாடகக் கட்சிகள் ஏற்றுக் கொள்ளாத ஒன்று. ஏனெனில், இந்நாடகத்தில் ராமானுஜர் சாதாரண மனிதரைப் போலவே பேசுகிறார். நடக்கிறார். மே[illegible]ல் தோன்றுகிறார். தமிழ் நாட்டு பிராண்டு நவீன நாடக செயல் முறைப்படி அவர்கள் ஒப்புதலைப் பெற வேண்டுமானால், ராமானுஜர் ஒரு நூலேணி வழியாக மேடையில் வந்து இறங்க வேண்டும். வந்து இறங்கியதும் கையில் நீண்ட கம்பு கொண்டு சிலம்பாட்டம் ஆட வேண்டும். பார்த்தசாரதியின் ராஜேந்திரனின் ராமானுஜம் இப்படியெல்லாம் ஏதும் செய்யவில்லை. இன்னொரு பிரச்சினையும் இதில் உண்டு. 11, 12ம் நூற்றாண்டு ராமானுஜர் அவர் காலத்தின் பின்னணியில் பார்த்தால், அவரது கருத்துக்களும், செயல்பாடுகளும் மிகத் தீவிரமானவை. புரட்சிகரமானவை. இக்கருத்துகளை அவர் வாய் திறந்து சொல்லிய மாத்திரத்தில் சுற்றியிருந்த உலகம் உடனே ஒப்புக் கொண்டு அடி பணிந்தது என்பது நடந்திருக்க முடியாத விஷயம். அவருக்கும் நிறைய எதிர்ப்பு இருந்திருக்கும். அவ்வெதிர்ப்புக்களைச் சந்தித்து தன் கருத்துக்களை நிறுவ அவர் நிறையப் போராட வேண்டியிருந்திருக்கும். எனவே, ராமானுஜர் வாழ்க்கை பற்றிய நாடகத்தில் உணர்ச்சிகர கட்டங்களும், அறிவார்ந்த போராட்டங்களும் நிறைந்து நம்மை ஆட்டி அசரவைக்கும் நாடக குணங்கள் நிரம்பியிருக்கும். இருக்க வேண்டும். ஆனால், இப்படி ஏதும் இல்லை இந்திரா பார்த்தசாரதியின் ராமானுஜர் நாடகத்தில். நாடகம் வெகு சொகுஸாக நடைபயில்கிறது. அகன்ற சிமெண்ட் ரோட்டில் போக்குவரத்து நெருக்கடி ஏதும் இல்லாதவகையில் மெர்ஸிடஸ் பென்ஸ் கார் போவது போல வெகு சொகுஸான பிரயாணம் ராமானுஜரது. இடையில் ஒரு பள்ளம், ஒரு மேடு, ஒரு குலுங்கல் ஏதும் கிடையாது. காட்சிக்குக் காட்சி ராமானுஜர் தன் விருப்பத்தைச் சொல்ல வேண்டியது தான் தாமதம். எல்லோரும் பரவசத்துடன் உடனே ஒப்புக் கொண்டு விடுகிறார்கள். தன் வருகைக்கு முன்னாலேயே தன் தூதுவரை (ஜஸ்வந்த்ஸிங்) அனுப்பி எதிராளியோடு (ஸ்ட்ரோப் டால்போட்) பேசி சமரசம் கண்ட பிறகு தான் ராமானுஜர் தன் யாத்திரையை மேற்கொண்டாரோ என்னமோ. மேடையேற்றத்தின் போது இடைப்பட்ட காட்சிகள் எதனையும் எத்தனையையும் வெட்டிவிட்டாலும் ஏதும் யாருக்கும் வெட்டப்பட்டது தெரியாது. இன்னொரு விஷயம். ராமானுஜர் இக்காலத்திற்கேற்ற சரியான ஒப்புதலான அரசியல் கோஷங்களை எல்லாம் எழுப்புகிறார். ராமானுஜர் தன் 11ம் நூற்றாண்டு சீர்திருத்த தத்துவதரிசியாகவே இருந்திருக்கலாம்.அப்படி இருந்து கொண்டே 90களின் மதவாதிகளின் (எல்லா மதவாதிகளுக்கும் தான்) பழமைக்கு விரோதியாகக் காட்சியளித்திருப்பார். காலத்தை மீறி ஒருவர் வாழ்கின்றார் என்றால் அது இந்த அர்த்தத்தில் தான். அவ்வக்காலத்திய கோஷங்களை உச்சாடனம் செய்விப்பதால் அல்ல. 90களில் தன் நியாயத்தை ஸ்தாபிக்க தன் உறவை நிலை நாட்ட அவர் அம்பேத்கர்வாதியாக வேண்டிய அவசியமில்லை. அப்படிச் செய்தும் இந்திரா பார்த்தசாரதி யாரை மகிழ்விக்க விரும்பினாரோ அவர்களை மகிழ்விப்பதில் வெற்றி பெறவில்லை.



பட்டறையின் வகுப்பறைகளில் இந்திரா பார்த்தசாரதி "நந்தன்" நாடகத்தில் பெற்ற சாதனையின் சிகரத்திலிருந்து மிகப் பரிதாபகரமாக ராமானுஜர் நாடகத்தில் வீழ்ந்து விட்டதாக குற்றம் சாட்டப்பட்டார். காரணம் நந்தன் தீண்டப்படாத குலத்தைச் சேர்ந்த கூலி விவசாயி. அவன் நாடகத்தின் ஹீரோ ஆகலாம். ஆனால், பிராமணரான ராமானுஜர் என்ன தான் புரட்சிகர வசனங்கள் பேசினாலும், சந்தேகத்திற்கிடம் தரும் போலி மனிதராகத் தான் இருக்க முடியும். ஒரே ஒரு சமாதானம். இந்திரா பார்த்தசாரதி நாடகாசிரியராக அங்கீகாரம் பெற்றுள்ளார். சுஜாதா போல தீண்டத் தகாதவராகிவிடவில்லை. ஆனால், அவ்வளவோடு திருப்தி அடைய வேண்டும். நவீன நாடக லேபிலுக்கு அவர் ஆசைப்படக் கூடாது. நவீன நாடக ஆசிரியர் உலகில் அவருக்கு பிரஜா உரிமை கிடையாது.

இங்கு நான் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். நாடக வடிவிலும், நடிப்பு பாணியிலும் மேடையேற்றத் தோரணைகளிலும், சோதனைகள் கூடாது என்பதல்ல. புதிய முயற்சிகள் கூடாது என்பதல்ல. இவை பற்றி எனக்கு ஏதும் வெறுப்போ, முன் தீர்மானங்களோ கிடையாது. ந. முத்துசாமியின் புதிய வடிவை, சோதனைகளையும், வேறு யாருக்கும் முன்னர் வரவேற்றவன் நான். இப்ராஹீம் அலகாஷியின் தயாரிப்பில் அறுபதுகளின் கடைசியிலோ எழுபதுகளின் ஆரம்பத்திலோ "ட்ராய் நகரத்துப் பெண்கள்" என்ற கிரேக்க நாடகம், அதன் பாத்திரங்களின் மேடைச் சலனமும் அவர்கள் அணிந்திருந்த நீண்ட கறுப்பு மேலங்கிகளும், அவை சலனத்தின் போது பெறும் தோற்றமும் எல்லாம் பாலே நடன அமைப்பை எனக்கு காட்சி தந்தன. எவ்வளவு ஆனந்த பரவசம் தரும் அமைப்பும் சலனமும் அவை! நவீன தமிழ் நாடகக்காரர்கள், இந்த நவீன நாடக பட்டலம் தயார் செய்வதற்கு முன்னதாகவே இதே கிரேக்க நாடகத்தை செ. ராமானுஜம் முற்றிலும் வேறான பாணியில் வேறு பத்ததியில் "வெறியாட்டம்" என மேடையேற்றினார். இது தான் தமிழில் மேடையேறிய பத்ததிகள் கொண்ட சோதனைபூர்வமான வெற்றிகரமான தயாரிப்பு என நான் அதைக் கொண்டாடினேன். (என்னுடைய விமர்சனம்: Financial Express- 2.9.87) அது டேப்பில் பதிவிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் எழுதியிருந்தேன். தென் பிராந்திய நாடக விழாவில் காட்டப்பட்ட இரு நாடகங்கள் ஒன்று ஆறுமுகத்தின் 'ஊசிகள்' தமிழ் நாடகம் மற்றது சுரேந்திர நாத்தின் கன்னட நாடகம் 'உருபாங்கம்' இரண்டுமே பத்ததி நிறைந்த தயாரிப்புகள். "உருபாங்கம்" கலைத்தரமான படைப்பாக இருக்க, "ஊசிகள்" வெறும் பைத்தியக்கார கேலிக்கூத்தாக இருந்தது. அது அசிங்கமும் போலியானதும் பம்மாத்துக்கள் நிறைந்ததுமாக இருந்தது. இதற்கு மாறாக, சுரேந்திர நாத்தின் உருபாங்கம், இதற்கு முன் காவாலம் நாராயண பணிக்கரதும் ரத்தன் குமார் தீயத்தினதும் தயாரிப்புகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகவும், ஒரு செவ்விய தரத்தில் (in classical terms) கவிதாரூபமாக, சோதனை முயற்சியும், முற்றிலும் வேறுபட்டதும் புதியதாகவும் ஒன்றைத் தயாரிக்கும், கற்பனை வளத்திற்கு சாட்சியாகவும் செதுக்கிய வைரத்தின் பிரகாசத்தைத் தந்தது. இதற்கான எனது மகிழ்ச்சியையும் பாராட்டையும், அதே சமயம் "ஊசிகள்" என்னும் தமிழ் தயாரிப்பின் போலித்தனத்தைக் கண்ட என் வெறுப்பையும் எழுதியிருந்தேன். (Economic Times, 29.12.1992) "உருபாங்கம்" தன் செவ்விய நாடக மரபின் வேர்களைக் களைந்து எறியவில்லை. ஆனால் "ஊசிகள்" மிக் அசிங்கமான சர்க்கஸ் கோமாளித்தனங்களைத் தன் கிராமிய வேர்கள் என பம்மாத்து வேலைகளில் ஈடுபட்டது.

இக்கால கட்டத்தில் இன்னொரு நாடகம். சி.எஸ். செல்லப்பாவின் "முறைப்பெண்". தான் மேற்கொண்ட வேலையில் தன் கைத்திறன் காட்டும் ஓர் எழுத்தாளன். தான் கையாளும் மொழியின் மீது, தன் சொற்களின் மீது தன் பூரண ஆதிக்கம் செலுத்தும் வல்லமை கொண்ட எழுத்தாளன். தன் சொற்களுக்கு எத்தகைய நாடகபூர்வமான வலுத்தரமுடியும் என்பதற்கு உதாரணம் செல்லப்பாவின் "முறைப்பெண்". டில்லியில் இருக்கும் நாடக தயாரிப்பாளர் கே. பெண்ணேஸ்வரனுக்கு இதை மேடையேற்றிப் பார்க்க வேண்டும் என்று தோன்றவே அது மேடையேறியது. தமிழ் நாடக மேடைக்கு மாத்திரம் திறன் வாய்ந்த நடிகர்கள் இருந்திருந்தால் எத்தகைய சக்தி வாய்ந்த நாடகமாக அது ஆகியிருக்கக் கூடும் என்று நினைத்துப் பார்க்கும் வாய்ப்பை அந்த நாடகமும், மேடை யேற்றமும் தந்தது. ஆனால், தமிழின் நவீன நாடக மேதைகளுக்கு 'முறைப்பெண்' பழம் பாணி நாடகம்'. தொடப்படாத தீட்டுப் பொருள். இன்னொரு பார்வையில் 'முறைப்பெண்' புதிய செய்தி ஏதும் தாங்கி வரவில்லை. இது ஒரு குடும்ப நாடகம். அதிலும் எளிதில் உணர்ச்சி வசப்படும் சுய கௌரவம், குடும்ப ஜாதி கௌரவம் மிக்க தேவர் குடும்ப நாடகம்.

இது போன்று வேறு முயற்சிகளும் இருந்திருக்கின்றன. இவற்றில் ஜெயந்தனின் "நினைக்கப்படும்" என்பதும் ஒன்று. இது சிறிதும், பெரிதுமான பல காட்சிகளைக் கொண்ட நீண்ட நாடகம். ஒரு சில காட்சிகளே முழு நீளநாடகமாகவும் கூடும். சமூகத்தில் தனிமனிதனில் நிகழ்ந்துள்ள தார்மீக சரிவு மாற்றம் பல காட்சிகளாக பல துறைகளில் இது விரிகிறது. இதை ஜெயந்தன் ஒரு குறும்புத்தனமான புன்சிரிப்புடன் தூர நின்று பார்க்கிறார்.

ஆனால், இவ்வளவும் புறமொதுக்கப்பட்டு விட்டன. எதுவும் தொடப்படக் கூட இல்லை. காரணம் தமக்கென அப்பிராயம் ஏதும் இல்லாது தம்மை கருத்துவாதிகளாக நினைத்து உலவும் ஊதிப் பெருத்த தலைகள், லேபிளைப் பார்த்து அடையாளம் சொல்லும் நவீன நாடக கர்த்தாக்களின், தம்முடைய முக்கியத்துவத்தைப் பற்றி ஊதிய பிரமைகள் கொண்ட மண்டைக் கனங்களால் இவை எல்லாம் படச்சட்ட மேடை, காலனியம், பழம்பசலி என்று கடாசப்பட்டு விட்டன. இவை மட்டும் கவனிக்கப்பட்டிருந்தால், தூயமனதுடன் மேடையேற்றப்பட்டு நடிக்கப்பட்டு சர்ச்சிக்கப்பட்டிருந்தால் எதிர்காலத்தில் ஓர் உண்மையும், காலத்தோடு உறவாடும் குணமும் கொண்ட சீரிய நாடக மரபு கட்டமைக்க அடிக்கற்களாகவாவது இவை பயன்பட்டிருக்கக்கூடும். அடிக்கற்கள் எப்போதும் பலம் தருபவை. தம்மை மறைத்துக் கொள்பவை. அவற்றிற்கு விளம்பரம் தேவையில்லை. ஆனால் நவீன நாடக உலகம் என்னும், தமிழ் பிராணி கற்றாழைபோல காளான்போல வெகுதூரத்திற்கு தன்னைக் காட்டிக் கொள்ளும். இருப்பது தான் மாத்திரமே இந்த அகன்ற பெருவெளியில் என பெருமிதம் கொள்ளும். காளான்களின் குணம் அது. ஆகவே, அதன் தனிமையை வெகுதூரம் காட்சி தரும் குணத்தை எப்படி வேண்டுமானாலும் அது அர்த்தப்படுத்திக் கொள்ளும்.


நான் இப்போது ந. முத்துசாமி பக்கம் திரும்ப வேண்டும். அவர் ஒரு நல்ல சிறுகதாசிரியராக இருந்தார். சிறு நீள நாடகங்கள் அவர் எழுதத் தொடங்கியபோது அவற்றில் ஒரு கிராமீயமும், நாகரீகப் பகட்டற்ற நாஸூக்கின்மை, பட்டிக்காட்டுத்தனமும் இருந்தன. இதை நான் வரவேற்று இதற்கு எத்தகைய நடிப்புப் பாணி வேண்டும் என்று 1973லேயே "மழை" நாடகத்திற்கு எழுதிய முன்னுரையில் எழுதியிருந்தேன் பின்னர் தெருக்கூத்து அறிமுகமும் அவருக்குக் கிடைத்தது. எப்படி என்று அவரே சொல்லியிருக்கிறார். இப்போது அவர் மறுப்பார். ஆனால், தன் இயல்பான வளர்ச்சி பெறாது, தெருக்கூத்தின் ஆத்மாவை அறியாது அதன் வெளித் தோற்றத்தில் தான் தெருக்கூத்து இருப்பதாக எண்ணி, என்னென்னமோ கோணலான வளர்ச்சி பெற ஆரம்பித்தார். பட்டிக்காட்டுத்தனம் இயல்பாக இருப்பின் அதுவேறு விஷயம். ஆனால் அது தற்பெருமைக்கான 'இதோ பார்! என்னைப் பார்!' என்பதற்கான ஒரு Brand ஆக லேபிளாக ஆகிவிட்டால் சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டிய கட்டம் வந்து விட்டது என்று அர்த்தம். முத்துசாமியே ஒரு தனிப்பிறவி. "ஆஹா என்ன கவிதை! என்ன அழகு, என்ன மயிர்க் கூச்செறிவு" என்று அவர் பரவசம் அடையும் விஷயங்களைப் பார்த்தால், இது சாமி வந்த சமாச்சாரமோ என்று தோன்றும். அவர் பரவசம் அடையும் விஷயங்களில் அப்படி ஒன்றும் இராது. எதையும் அதன் வெளித் தோற்றத்தை வைத்துக் கொண்டே அதன் உட்பொருளாக நினைத்து பரவசம் அடைவதும் அவர் இயல்பு. இது தான் அவர் கையாளும் மௌனி பாஷைக்கும் நேர்ந்தது.

தெளிவில்லாத ஒன்றை சிக்கலான ஒன்றை வெளியிடும் போதுள்ள போராட்டத்தின் தெளிவின்மை, சிக்கல் ஒரு தனி விஷயம். அத்துடன் நாமும் போராடத் தான் வேண்டும். இதனால் நாமும் வளர்வோம் மொழியும் வளரும். ஆனால், வேண்டுமென்றே மொழியின் மீது திணிக்கும் தெளிவின்மையும் சிக்கலும், தான் தெளிவு பெற முடியாது தோல்வியுற்றுப்பெறும் தெளிவின்மை நமக்கு வேண்டாதது. இது பம்மாத்து. வெற்றுப் பகட்டு. மௌனியின் மொழியில் உள்ள தெளிவின்மைக்கும் முத்துசாமி மௌனி போல் எழுதுகிறேன் என்று போலி செய்யும் தெளிவின்மைக்கும் இது தான் வித்தியாசம். தெருக்கூத்து, மௌனி இரண்டிலுமே முத்துசாமி மயங்குவது வெளித் தோற்றத்துடன் இரண்டிலிருந்தும் தப்பான பாடங்களையே அவர் கற்றுள்ளார்.

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்






## 'பூச்சி' குறித்து...

கடந்த ஓகஸ்ட் 5ல் சரிநிகரில் "பூச்சி" என்ற தலைப்பில் "ஜீவாத்மா"வினால் தருவிக்கப்பட்ட ஆக்கத்தை அச்சரிநிகர் இதழில் வெளிவந்த அனைத்து ஆக்கங்களை விடவும் முதற்தரமானதொன்றாகக் காண்கின்றேன். சமகால அரசியற், சமூகவியற் சூழல்களின் பின்புலத்தூடு நோக்கும்போது, அறியவிழைவார்க்கு அவரது ஆக்கம் உண்மையில் தெளிவானதொரு கருத்தியலை எடுத்துக் காட்டிவிடத் தவறவில்லை.

இருந்தபோதிலும் "இக்கதை விளங்கற்கடியது" என்ற பொருளோங்க இடை இடை அக்கதாசிரியர் ஆதங்கப் பட்டுக் கொள்வது அவ்வளவு சௌகரீயமானதொரு விடயமென்று சொல்வதற்கில்லை. அறிவு வெடிப்பு நூற்றாண்டின் (Era of knowledge- Explosion) முனையில் வேரூன்றி நிற்கும் இவ்வுலகில், இவ்வாறானதொரு கதையை அல்லது கருத்தை தயாரித்து விடுவது வியப்புக்குரிய விடயமல்ல.

சரிநிகரின் பின்னேயுள்ள ஆழமானதொரு வாசகன் என்றவகையில் எனக்கும், ஏனைய வாசகர்களுக்கும் இவ்வாறானதொரு மாற்றிலக்கியத்தையோ அல்லது வேறு எந்தவொரு மாற்றுக் கருத்தையோ இலகுவில் விளங்கவும், ஜீரணிக்கவும் முடியும் என நம்புகிறேன்.

**இறக்காமம், அலிமன்சூர்**

## எருமை மாட்டில் பெய்த மழை மட்டும் தானா...?

சரிநிகர் 175வது இதழில் யாழ்ப்பாணத்திலிருந்து அ. கோகுலன் என்னும் வாசகர் யாழ் குடாவின் அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றி தனது கடிதத்தில் விசனத்துடன் வெளிநாட்டுத்தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர், வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனத்தினர் யாவரும் யாழ்ப்பாணம் வந்து 'சுகம் விசாரித்துப்போவது' போல் வந்து போகின்றனர். ஆனால், எமது குடாநாட்டு அரச அதிகாரிகள் தமது நலன்கருதி எதுவும் பேசாடுகின்றனர் எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இதற்கான காரணங்களை சற்று ஆழ்ந்து நோக்குவோமாயின் பல விடயங்கள் புலனாகும். இங்குள்ள அரச மேலதிகாரிகளுக்கு ஆங்கில மொழிப் புலமைப் பற்றாக்குறை காரணமாக குறித்ததொரு விடயப்பொருளை ஆணித்தரமாக எடுத்து உரையாடுவதற்கு இயலாமல் திண்டாடுகின்றனர். மேலும் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தை ஒரு நேர்மையான அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்ற மனப்பூர்வமான அர்ப்பணிப்பு இருப்பதாகத் தெரியவில்லை. உத்தியோகம் புருஷ இலட்சணம் மட்டுமே! அரச மேலதிகாரிகள் இச்சமூகத்தில் தமக்குள்ள கடமையினை மறந்தவர்களாக இருப்பது மட்டுமல்லாது பதவிகள் மூலம் தமது இலாப "ஈடேற்றங்களையும்" நன்கு கவனித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் அபிவித்தி செயற்திட்டங்களை நோக்கும்போது அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் கூறிய கூற்று மிகவும் பொருத்தப்பாடு உடையதாகவே உள்ளது. வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்யும் சுதேசிகள் தாமும் 'வெள்ளையர்களாக" மாறியுள்ளனர். இச்சுதேசிகள் தம் சமூகத்தின் தேவையை உணர்ந்து செயற்படுபவர்களாக தெரியவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்திட்டங்களின் பலாபலன்கள் சாதாரண மக்களைப் போய்ச் சேருகின்ற பயன்பாட்டுத் தொகையினைவிட இந்நிறுவனங்களின் மேந்தலை செலவுகள் எத்தனையோ மடங்கு அதிகம். இவ்வதிகரித்த மேந்தலைச் செலவிற்குப் பின்னால் நவகாலனித்துவத்தின் முகவர்கள் உருவாகின்றார்களா..? என்ற ஐயமும் எழாமல் இல்லை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இன்று யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் யாழ்ப்பாண சமூகத்தினை தன்னிறைவுக்கு இட்டுச் செல்லுமா? அல்லது தங்கியிருத்தலுக்கு இட்டுச் செல்லுமா..? இதற்கு விடை காண வேண்டிய தருணத்தில் நாம் அனைவரும் இருக்கின்றோம்.

**அநபாயன்,யாழ்ப்பாணம்**

## அதிகாரிகளின் கவனத்துக்கு!

மன்னார் பிரதேசவாசிகளான நாம் பெரும் கடினங்களுக்கு மத்தியில் 1998 தொடக்கம் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறோம். மன்னாரிலிருந்து இங்கு வருகை தர பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் எமக்கு அதிக விடுப்புக்களைப் பெறவேண்டி ஏற்படுகிறது.

மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்திலெடுத்து, கஷ்டங்களிலிருந்து மீள்வதற்கு வாய்ப்புப் பெற்றுத்தமாறு கோருகின்றோம். அதற்கான காரணங்களைக் கீழே தருகிறோம்.

1. மன்னாருக்கும் அட்டாளைச் சேனைக்கும் இடையேயான தூரம் 800 கி.மீ. நாம் பயணத்திற்கென இரு நாட்களைச் செலவழிக்க வேண்டும். இதனால் உடலியல் ரீதியாக பாதிப்பை அனுபவிக்க வேண்டியுள்ளது.
2. தேவையானபோது மன்னாரிலிருந்து சமூகமளிக்க முடியாதுள்ளது. போக்குவரத்துக்கான அனுமதியை இராணுவத்திடமிருந்து பெற வேண்டியுள்ளது. அதற்கு ஒரு வாரகால அவகாசம் தேவை.
3. இவ்வாறு பல துன்பங்களுக்கு முகம் கொடுப்பது மட்டுமன்றி பொலிஸ் நிலையத்திற்கும் அறிவிக்க வேண்டியுள்ளது. அதற்கு ஒரு நாள் செல்லும்.

மேற்கூறப்பட்ட விடயங்களை கருத்திலெடுத்து எமக்கு ஆறுதல் பெற்றுத் தருமாறு வேண்டுகிறோம்.

**ஏ.சி.பஸ்மி, சி.எம்.நபுஹான், வி. ஜேசுரத்னம், ஏ. அபுல் மௌலானா**
**அரச ஆசியர் பயிற்சிக் கலாசாலை அட்டாளைச்சேனை.**

## பூச்சி அல்லது சிறு பறவை உறவு வழி அல்லது இரு கதைகளிலுமான ஒரு பாமர பாய்ச்சல்

**மருதமுனை குர்ஷித்**

சிறுகதை ஒரு இலக்கியம். ஆரோக்கியமான இலக்கிய வடிவம். இலக்கியம் எனும் போது அது மக்களின் வாழ்க்கையை பிரதிபலித்தல் வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்கிறது. சிறுகதையும் இலக்கியமாதலால் இது அதற்கும் பொருந்தும். சிறுகதை உசிதமான, காத்திரமான ஒரு கருவைக் கொண்டு இயங்கு தளப்பரப்பில் விரிதல் வேண்டும். அப்படி இல்லாவிடினும் சிறுகதை எளிமையாய், புரிதலில் ஏற்படும் பலவீனத்தை தகர்ப்பனவாய் ஆவது அமைய வேண்டும்.

பொதுவாய்... தமிழ் நாட்டு வாசகர்களை விட ஈழத்து வாசகர்கள் (பெரும்பாலானோர்) உள்வாங்குதல் தன்மையில் பலவீனமானவர்களாய் தான் தெரிகிறார்கள். இதற்கு அடிப்படையாய் சில காரணங்கள் இருக்கலாம். எமது பேரினவாத அரசியல் சூழலில் தமிழுக்குரிய அந்தஸ்து உரிய முறையில் வழங்கப்படவில்லை. தமிழுக்குரிய மொழி திட்டமிடலில், ஒரு சமுதாயத்தைக் கருத்தில் கொண்டு நீண்ட கால திட்டமிடலில் ஈடுபட்டதாய் தெரியவில்லை. இலக்கண நெருக்குதலின் அழுத்தத்தினை நெகிழ்ந்து கொடுக்கச் செய்யாமை, பழமை போற்றும் பண்பு, பாரம்பரியத்தை விட்டுக் கொடுக்காமை போன்ற போக்குகள் இன்றும் தெரிகிறது. இதனை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தாரின் தமிழ் பாட நூல்களில் காணலாம். இத்தகைய மொழி வளர்ச்சிப் பாங்கை அங்கீகரிக்காத தன்மை பெரும்பாலான மக்களின் உள்வாங்குதலில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. ஏனெனில், வெகுஜன பத்திரிகைகள் பலவும் இவ்வாறான பழைய நடையையே கையாள்கிறது.

இன்னொன்று... இந்நாட்டின் இன்றைய போர்ச்சூழலில் எழுத்து வடிவிலான இலக்கிய சிற்றிதழ்கள் நாடு பூராக பரவுவதில், பரப்புவதில் சிரமம் இருக்கின்றது. இத்தகைய நிலையில் இலக்கிய புதிய பரிணாம வீச்சு என்று சொல்லப்படுவதை ஏற்பதில் கடினம் இருக்கின்றது.

இவ்வாறு அடிப்படைகள் பலமாய் ஊட்டப்படாத நிலையில் ஒரு நவீன அல்லது புதிய பரிமாண வீச்சை ஏற்பதில் ஒரு சிரம போக்கு ஏற்படத்தான் செய்கிறது. அது யதார்த்தத்துக்கு பொருந்தக் கூடிய உண்மை.

ஜீவாத்மா எழுதிய "பூச்சி" (சிறுகதை) சரிநிகரில் (ஓகஸ்ட் 5) படித்தேன். புரியவில்லை. மீண்டும் இரண்டாவது தடவையாய் ... ம்ஹூம் ..... மூன்றாவது தடவையாயும் இல்லை. நான்காவது தடவையாயும்.... ஏதோ புரிவது மாதிரியும்.... இல்லை புரியாத மாதிரியும்.... இன்னும்....... இன்னும்......... மங்கலாய்........ குழப்பமாய்......... சிதிலமாய்..... மண்டை கனக்க நிறுத்திக் கொண்டேன்.

ஜீவாத்மா என்ன செய்திருக்கிறார். ஒருக்கால் அடுத்த நூற்றாண்டுக்கான ஒரு இலக்கிய பாதைத் திறப்பு செய்திருக்கிறாரா? அடுத்த தலைமுறையில் இலக்கிய பரிமாணத்திற்கு முன்கூட்டியே வித்திடுகிறாரா? அப்படியாயின் இடைப்பட்ட இந்தத். தலைமுறையின் இருப்பு புறக்கணிக்கப்பட்டு இழப்பு அவசியமாகிறதே....? ஏனெனில், இவர்கள் இத்தகைய போக்கை ஜீரணித்து ஏற்க சிரமப்படுகிறார்களே...! மக்களுக்கு செய்தியை எட்டச் செய்யாத இது எத்தகைய இலக்கிய வடிவம்? போன்ற கேள்விகள் மனப்பரப்பில் குந்திக் கொள்கிறது.

ஜீவாத்மாவின் இத்தகைய போக்கு நாயக்கர் கால சூழலை ஞாபகத்திற்கு கொண்டு வந்து போடுகிறது. அங்கிருந்து இலக்கியம் செய்தவர்கள் வித்துவ ஆளுமையை தங்களின் இலக்கியங்களில் புலப்படுத்தியிருக்கிறார்கள். இதற்கு "வித்தகச் செருக்கு" என்று பெயர். அக்கால மக்களும் இவற்றைப் படிப்பதில், உணர்தலில் சிரமப்பட்டதாய் தெரிகிறது.

இக்காலை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கவிதைக்காரர்களைப் பார்த்துச் சொன்னது மனதில் இடறுகின்றது. அதை இவ்விடத்தில் இதற்கும் பொருந்துவனவாய் இருப்பதால் ஒப்புவிக்கின்றேன். "பாட்டுப் பாடுகின்றவர்கள் இன்னுமொரு பகுதியார் இருக்கிறார்கள். அவர்கள் கடிய கொடிய வித்துவான்கள். அவர்களுடைய கருத்துக்களை பிளேட்டோ மதிப்பார். ஆனால் கருத்துப்புலப்படுவதில்லை. சிறிது நாட்பட்டால் பாடிய அவர்களுக்கு கருத்துக் கலங்கிப் போகிறது. இப்படிப்பட்ட பாடல்களை அச்சிட்டு பரப்பாமல் விடுவது புண்ணியம்...... (இலக்கிய வழி, பக்கம் 87)

இத்தகைய கடிய கொடிய வித்துவான்கள் ரகத்தில் ஜீவாத்மாவையும் அடக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழத்தான் செய்கிறது. ஏனெனில், இந்த இலக்கிய தேக்கச் சூழலுள் நமது வாசகர்கள் திணிக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்தத் தேக்க வட்டத்துள் இருந்து விடுபட போதிய அடித்தளம் அழுத்தமாய் இடப்படவில்லை. அத்தகைய சூழ்நிலையில் இத்தகையதொரு வித்தியாசமான மாறுதலான படைப்பை படிப்பதில்..... புரிவதில்....... சிரமமிருப்பது தவிர்க்கவியலாததாகிறது.

சிறுகதைகளின் போக்கு எமது முந்தையோரின் படைப்பு வழியினின்றும் சற்றும் பிரளாத வனவாகவே இப்போதும் தொடர்கிறது. புதுமைப்பித்தனின் பாதிப்பு எட்டிப் பார்க்காமல் கதை சொல்லத் தெரியாதவர்கள் இப்போதும் இருக்கிறார்கள். இந்த மரபுமுறை எமது ஈழத்து வாசகர்களுள் சொல்லப்படாமலேயே விதைக்கப்பட்டு இருக்கின்றது. இந்த விதையின் வீரியம் அடுத்த நூற்றாண்டிலும் பரவலாம். இந்த மரபு வரைமுறையை உடைத்து, இந்த வட்டத்துள் இருந்து வாசகர்களை வெளிக்கொணர்வதற்கு வசீகரமிக்க மாறுதலுக்கு இட்டுச்செல்வதற்கு போதிய அடித்தளம் இடப்பட வேண்டும். அத்தகையதொரு நிலை இன்றில்லை.

ஆக, இத்தகையதொரு சூழ்நிலையில் நவீனத்துவம், அடுத்த தலைமுறைக்கான எழுத்து என்பனவெல்லாம் வெறும் வெற்று நிகழ்வாகத்தான் முடியும்.

ஜீவாத்மா "பூச்சி"யில் "பறட்டக் காட்டுக்க கறட்டி ஓணான் பிரட்டி! .... சனியன் நிப்பாட்டு கதைய..." என்று தொடங்கி... " நீ தொலையத்தான் போறா...." என இடையில் சொல்லி.... ஏதோ... ஏதோ.... கூளமாய்..... இன்னும் சொல்லி.... இறுதியில்" என்றாலும் யாருக்கும் தெரியாது! புரியாது! இந்த விசர்க்கதையைப் போல" என்று முடித்திருக்கிறார். இப்படி முடிப்பதாயின் அல்லது புரியாத கதையைச் சொல்லி திருப்திப்படுவதாய் நினைத்திருப்பின் இது அநாவசியமான, அவசியமற்ற முயற்சியாகவே படுகின்றது. சொல்ல வருகின்ற விடயம், சம்பவம் வாசகனுடைய சிந்தனைப் பரப்பை தொட்டு ஏதாவது உணர்தலை ஏதாவது செய்கின்ற போது, அவனில் மாறுதலை உண்டாக்கி, திருப்தியில் நிரப்பும் போது அதை எத்தி வைக்கிற எழுத்தாளனுக்கு அது வெற்றியாய் முடிகின்றது. வெற்றியாய் முடியாத...... வேதாளம் சொல்லும் கதை போல்...... புதிர் போடுகின்ற சிறுகதை நகர்த்தலால்...... பிரயோசனம் கிடைக்காது. இது எழுத்தாளனுக்கு தோல்வியாய் முடிகின்றது. இத்தகையதொரு தோல்வியை தன்னுள் வலிந்து திணித்திருக்கிறார் ஜீவாத்மா.

வெறும்...... நடை, வடிவப் பரிமாணத்தின் மாறுபட்ட பாய்ச்சலால் இலக்கிய தேக்கத்துள் சிக்கி பாரம்பரிய கலை மரபுள் ஊறிப்போயிருக்கிற பெரும்பாலான ...... வாசகர்களை நிமிர்த்தி உட்கார வைக்க முடியாது. ஆக, இத்தகைய உத்தி தற்போதைய சூழ்நிலைக்கு பொருந்துவதாய் தெரியவில்லை.

இத்தகையவற்றிலிருந்தெல்லாம் வேறுபட்டு "புதுமையாக்கம்" என்ற வகையறாவில் ஜீவாத்மாவின் "பூச்சி"யை பார்க்க முனைந்தால் அதுவும் இயலாததாகவே முடிகிறது. "புதிய துறைகளில் மொழியைப் பயன்படுத்தும் போதும், புதிய கருத்துக்களை வெளியிடும் போதும் மொழிக் கூறுகளில் ஏற்படுத்தப்படும் விரிவாக்கமும், எளிமையாக்கமும் புதுமையாக்கம் எனப்படலாம்" என்று புதுமையாக்கத்திற்கு விளக்கம் எல்.இராமமூர்த்தி கொடுக்கிறார். பேராசிரியர் அண்ணாமலை "கருத்ததாடலில் பயன்படுத்தப்படும் மொழிக்கூறுகளை மக்களால் எளிதில் புரிந்து கொள்ளப்படும் வகையில் செய்யப்படும் எளிமையாக்கமும், புதுமையாக்கமுமே" என்கிறார். இந்த அடிப்படைப் பார்வையில் கூட ஜீவாத்மாவின் "பூச்சி" சிக்கவில்லை. ஏனெனில் இவரது கதையை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறதா? என்பது பெரியதொரு கேள்விக்குறியாகவே எழுந்து நிற்கிறது.

ஓகஸ்ட் 19 சரிநிகரில் ஹஸீனுடைய கதையைப் படித்தேன். இத்தகையதொரு தவற்றை அல்லது இலக்கிய தவற்றைத்தான் ஹஸீனும் தனது "சிறு பறவை உறவு வழி" இல் செய்திருக்கிறார். இவரது கதை ஏதோ புரிவதாகப் பட்டாலும் நடை யதார்த்தத்தில் இருந்து மாறுபடுகின்றது. வாக்கியங்களில் முற்றுப்புள்ளியைத் தவிர்க்கும் போராட்டம் அல்லது முற்றுப்புள்ளி மீது கொண்ட வெறுப்பு கதையில் ஆங்காங்கே விரவி இருப்பது புரிகிறது. எடுத்துக் காட்டாக ஒன்று "தூய வெண்ணிற ஆடை சுமந்து குளிர்மை திருட வரும் சிறு பறவையாக என் முன்னே வரலான பலவீனமானதும் இரத்தல் நிறைந்ததுமான நமது உறவு இன்னும் அதிர்வுகளை உகுப்பதில் அரேபியக் குதிரை ரோமப் பிடில் வயலின் இசை போலத்தான்". (பந்தி முடிவதால் அவ்விடத்தில் ஒரு முற்றுப்புள்ளி உள்ளது) இதே பாணியில் அமைந்த ஒரு கதை "மூதாட்டியின் எதிரணியின் சிரம் பணிதல்" என்ற தலைப்பில் "மூன்றாவது மனிதன்" இதழிலும் ஹஸீனால் படைக்கப்பட்டிருக்கின்றது. ஹஸீனின் இந்தப் போக்கையும் நவீனத்துவமாகக் கொள்ளின் ஜீவாத்மாவிற்கு கூறிய அத்தனை சங்கதிகளும் ஹஸீனுக்கும், அவரது படைப்புக்கும் பொருந்தும்.

## அரச சார்பற்ற நறுவனங்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் துயில்கின்றனவா?

கடந்த சில வாரங்களாக யாழ். போதனா மருத்துவமனைக்கு அருகேயுள்ள ஞானம்ஸ் விடுதியில் தங்கியுள்ள சிறீலங்கா இராணுவத்தினர் காலையும், மாலையும் துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இதனால், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளும் மற்றும் விடுதியில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளும் மிகவும் பீதியடைந்துள்ளனர்.

இடப்பெயர்வுக்கு முன்பு மருத்துவமனையை சுற்றிய குறிப்பிட்ட பிரதேசம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் சீருடையுடனோ அன்றி ஆயுதங்களுடன் நடமாடுவது தடை செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இப்போது என்ன நிலை?

**அ. கோகுலன், யாழ்ப்பாணம்**

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" -பாரதி

இல. 19/04 - 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## அவர்கள் அவர்கள் தான்!

பொ.ஐ.முவின் ஐந்தாண்டு ஆட்சிப்பூர்த்தியை முன்னிட்டு அண்மையில் கொழும்பு சுகததாஸ அரங்கில் நடைபெற்ற மாபெரும் விழாவிற்கு நாடு பூராவுமிருந்து லட்சக்கணக்கானவர்கள் ஏற்றி இறக்கப்பட்டனர்.

அரசாங்க பஸ் வண்டிகளில் இலவச உணவு, இலவச பயணம், இலவச பானம், ஆடை மற்றும் செலவுத்தொகை என்பன வழங்கப்பட்டு இவர்கள் இறக்குமதி செய்யப்பட்டார்கள்.

கொழும்பு மாநகர வீதிகள் அதிலும் சுகததாஸ அரங்கை அண்மித்துள்ள வீதிகள் அனைத்தும் அசைய முடியாத வாகனங்களால் நிறைந்திருந்தன.

21ம் நூற்றாண்டுக்கான புதிய நோக்கு என்ற பெயரில் பத்திரிகைகளில் முழுப்பக்க அளவு விளம்பரங்களாக பொ.ஐ.முவின் 'கொள்கைப்' பிரச்சாரங்கள் நடைபெற்றன.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் நாம் சாதித்தவைகள் அனேகம், இன்னும் சாதிக்கப்பட உள்ளவையோ அதைவிட அதிகம் என்று பிரசாரம் செய்தன இவ்விளம்பரங்கள்.

இந்த விழாவிற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய ஜனாதிபதி, மயிர்க்கூச் செறியும் விதத்தில் பல திட்டங்களை, வாக்குறுதிகளை அடுக்கிக்கொண்டே போனார்.

அவரது பேச்சின் போது 21ம் நூற்றாண்டை வழி நடாத்திச் செல்லும் பொறுப்பை எங்களிடமே வழங்குங்கள் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைக்கத் தவறவில்லை. தமது இதுகாலவரை அர்ப்பணிப்புக்கள் தொடர வேண்டுமானால் உங்கள் ஆதரவு எமக்குத் தேவை. அடுத்து வரவுள்ள தேர்தலிலும் எம்மை ஆட்சியமைக்கவிட்டு விடுங்கள் என்ற அர்த்தத்திலான கோரிக்கையையும் அம்மையார் முன்வைக்கத் தவறவில்லை.

தோட்டப்புற மக்களின் வேலையில்லாப் பிரச்சினை, வேலை உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு, மருத்துவசதி எல்லாம் செய்து தருவோம் என்று அவர் கூறினார்.

அவர் ஆட்சிக்கு வந்த பின் நாட்டின் மனித உரிமை நிலைமை மேம்பட்டுள்ளது. புலிகளை அம்பலப்படுத்துவதில் அவர்களுக்கு வரக்கூடிய உதவிகளைக் குறைப்பதில் அரசாங்கம் வெற்றி பெற்றதுடன் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்த மக்களில் 85வீதமான பிரதேசங்களைக் கைப்பற்றி விட்டோம் என்றும் அவர் அறிவித்தார்.

ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது என்றும், கூட அவர் வலியுறுத்தினார். அவரது இந்த நீண்ட நேரப் பேச்சினைக் கேட்ட யாரும் அரசாங்கத்தின் சாதனைகளைக் கண்டு வியந்து போகவே செய்வார்கள்!

ஆனாலும் அவர் மறந்து போய்விட்ட பல விடயங்கள் இருக்கின்றன.

பாணின் விலையை உயர்த்தியது முதல் தொழிலாளர் போராட்டங்களை நசுக்கியது, யுத்தத்தைத் தொடர்ந்து, ஜனாதிபதி முறையை மாற்றுவதாகக் கூறியபடி அதன் நிறைவேற்று அதிகாரங்களை வேண்டியளவுக்குத் துஷ்பிரயோகம் செய்தமை, ஆர்ப்பாட்டம், ஊர்வலம் என்பனவற்றை பொலிசாரைக் கொண்டு கண்ணீர்ப்புகை வீசியும், தடியடிப் பிரயோகம் செய்வித்து விரட்ட முயன்றமை இலாபகரமான நிறுவனங்களை ஒவ்வொன்றாக அந்நியர்களுக்கு விற்றமை போன்ற சாதனைகளை அவர் யாருக்கும் சொல்லவில்லை. அவற்றை வசதியாக மறந்து விட்டார்.

தேர்தலை விரும்பியோ, விரும்பாமலோ அடுத்த ஆண்டு தேர்தலை வைத்துத் தான் ஆகவேண்டும் என்று இருப்பதால் அதற்கான தயாரிப்பில் இப்போதே ஈடுபடவேண்டும் என்ற நோக்குடன் இந்த விழா தயார் செய்யப்பட்டிருந்தது என்பதை அதன் ஒவ்வொரு அம்சத்திலும் காணக்கூடியதாக இருந்தது.

ஜனாதிபதி முறை மாற்றம், தீர்வுப்பொதியை நடைமுறைக்குக் கொண்டுவரல் என்பனவற்றை உடனடியாகச் செய்யத் தீர்மானித்துள்ளதாகவும், அவர் தெரிவித்த போது உண்மையில் சிரிக்காமல் இருப்பதற்கு அதீத திறமை வேண்டும்.

அதை அவர் செய்தார்,

வாக்குறுதிகளை வீசுவதன் மூலம் மக்களை ஏமாற்றி விடலாம் என்ற அம்மையாரின் உளக்கிடக்கை அவரது பேச்சில் தெளிவாகத் தெரிந்தது.

ஐ.தே.க., ஜனாதிபதி முறையை மாற்றுவதில் ஒத்துழைக்க முடியும் என்றாலும், தீர்வுப் பொதிக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்று அறிவித்து விட்டது.

பிராந்தியங்களுக்கு அதிகளவு அதிகாரம் இருக்கக்கூடாது ஏனென்றால், அவை பிரிந்து சென்று விடவே இது உதவும் என்பதை இந்த அறிவிப்பிற்கான காரணமாக அவர்கள் சொன்னார்கள்.

பாராளுமன்றத்தில் ஒரேயொரு பெரும்பான்மை வாக்கைக் கொண்டுள்ள தமது கட்சியினால் திருத்தத்தைக் கொண்டுவர முடியாது என்பதை தெரிவித்து கொண்டே இந்த அனைத்து வாக்குறுதிகளையும் அவர் வழங்கினார்.

பொய் வாக்குறுதிகள் அல்லது நடைமுறைக்கு வராத வாக்குறுதிகள்.

ஆக, 21ம் நூற்றாண்டுக்கு வழிகாட்ட எம்மிடம் தமக்கு அதிகாரத்தைத் தருமாறு கோரும் அவர் அதற்குப் பதிலாக இந்தப் பொய் வாக்குறுதிகளை எமக்கு நிறைவேற்றித் தரவிருக்கிறாராம்.

எல்லாச் சராசரி அரசியல்வாதிகளையும் போல கடந்த ஐந்தாண்டு காலத்தில் அம்மையார் தாம் சாதிக்க முடியாததை அடுத்த ஆண்டுக்குள் நடைமுறைக்குக் கொண்டுவர முடியும் என்று அறிவித்து தன் துணிச்சலைக் காட்டியிருக்கிறார்.

21ம் நூற்றாண்டுக்கு அணைந்த தீப்பந்தத்துடனும் முறிந்த காலுடனும் நிற்கும் ஒரு குருடன் வழிகாட்டப் போவதாகக் கூறுவது போன்ற வார்த்தைகள் இவை.

ஆயினும் அதையும் கேட்டும் சகித்தும் வாழப் பழகியவர்களாக நாம்.

என்ன இருந்தாலும் அவர்கள் அவர்கள் தான். நாங்கள் நாங்கள் தான். ஏமாற்ற அவர்கள் ஏமாற நாங்கள். இது இப்படி இருக்கும் வரை எதுவும் எப்படியும் நடக்கலாம்.

யாரும் எதுவும் செய்யலாம். அது அவருக்கு புரிகிறது. ஆனால் எமக்கு?

## முருகன் ஆலயத்தில் அரங்கேற்றப்பட்ட நாடகம் தொடர்பாக படையினர் விசாரணை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிண்ணையடிக்கு மேற்கே உள்ள முருக்கன்தீவு கிராமத்தில் கடந்த சில. தினங்களாக முருகன் ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்று வருகிறது. கடந்த

ஞாயிற்றுக்கிழமை (29.8.99) திருவிழா இறுதி நாளன்று நடத்தப்பட்ட கலைநிகழ்ச்சின் போது அரங்கேற்றப்பட்ட நாடகம் தொடர்பாக ஆலய நிருவாக சபை உறுப்பினர்கள், ஒலிபெருக்கி உரிமையாளர் ஆகியோர் கிண்ணை யடி சிறிலங்கா படைமுகாம் படையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மட்டக்களப்பு நகருக்கு வடக்காக நெடுஞ்சாலையில் 31 கி.மீ தூரத்தில் சுங்கான்கேணி உள்ளது. அங்கிருந்து வடக்காக ஒரு கி.மீற்றரில் வாழைச்சேனை நகர் இருக்கின்றது.

சுங்கான்கேணியில் இருந்து மேற்காக 2 கி.மீ தொலைவில் கிண்ணையடி உள்ளது. கிண்ணையடிக்கு மேற்காக வாவிக்கு அப்பால் ஒரு கி.மீற்றரில் இருப்பது முருக்கன்தீவு கிராமம்.

இப்பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியாகும். கிண்ணையடி வாவியோரமாக படைமுகாம் அமைந்துள்ளது.

முருக்கன்தீவு மற்றும் வயல் பகுதிக்கு போக்குவரத்து செய்யும் பொதுமக்கள் படை முகாம் காவலரணில் சோதனையை முடித்துக்கொண்டு வள்ளத்தில் பயணிப்பது வழக்கம்.

இத்திருவிழாவின் போது கிராமத்து இளைஞர்களால் கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் அரங்கேற்றப்பட்ட ஒரு நாடகத்தில் இலங்கை அரசாங்கம் பற்றி விமர்சிக்கப்பட்டதுடன், இலங்கை ஜனாதிபதியை ஒரு ஆணாக சித்திரித்தும், இன்றைய யுத்த நிலைவரம் மற்றும் இலங்கை படையினரின் நடவடிக்கைகள் பற்றியும் நகைச்சுவைக் காட்சிகள் இடம்பெற்றிருந்தன.

முகாமில் இருந்த படையினர் இந்த நாடகத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனர். படையினரில் நன்கு தமிழ் தெரிந்த சிங்கள, முஸ்லிம் இனத்தவர்கள் உள்ளனர். அவர்கள் மூலமாக படை அதிகாரிக்கு நாடகம் பற்றிய தகவல்கள் உடனடியாகக் கூறப்பட்டது.

இதையடுத்து காலையில் முதல் வேலையாக முருக்கன்தீவு கிராமத்திற்கு பொதுமக்கள் மூலமாகத் தகவல் அனுப்பி ஆலயத்தின் நிருவாகசபை உறுப்பினர்களையும், ஒலி பெருக்கி உரிமையாளரான கிண்ணையடியைச் சேர்ந்த விதவைப் பெண்ணையும் முகாமுக்கு அழைத்த படை அதிகாரி துருவித்துருவி விசாரணை நடத்தினார்.

நாடகம் தயாரித்தவர், நாடத்தில் பங்கு கொண்டவர்கள் ஆகியவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டன. இந்த நாடகத்தின் பின்னணி தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி என்பதால் அவர்களின் பின்னணியும் இருக்கலாம் என்ற சந்தேகம் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

அதன்பின்னர் ஒலி பெருக்கியை முகாமுக்குக் கொண்டு வருமாறு கூறி, அது பறிமுதல் செய்யப்பட்டது. ஒலிபெருக்கி படையினரின் அனுமதியைப் பெற்றே ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒலி பெருக்கி உரிமையாளரான விதவைப்பெண் இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் தனது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்.

இது பற்றி கிண்ணையடி படைமுகாம் அதிகாரியினால் வாழைச்சேனை காகிதஆலை வளாகத்தில் இயங்கி வரும் 23-2 நண்பகல் வரை நடைபெற்றது. பின்னர் ஆலயநிருவாகசபை உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டைகளை வாங்கி எடுத்துக் கொண்ட படையினர், நாடகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் முகாமில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும், என்ற உத்தரவாதத்தில் விடுவித்தனர்.


படைஅதிகாரியின் இந்தக் கட்டளையினால் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் உள்ளனர் நிருவாகசபை உறுப்பினர்கள்.

ஒகஸ்ட் 31நண்பகல் வரை நாடகத்தில் சம்பந்தப்பட்ட எவருமே முகாமுக்குச் செல்லவில்லை.

இவர்களை முகாமில் ஒப்படைக்காது போனால் தங்களால் நகருக்குச் செல்லவோ, தொழிலுக்குச் செல்லவோ முடியாது. கிராமத்தில் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்படும். கூடவே படையினரிடம் அடையாள அட்டையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படுமோ என அக்கிராம மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

நன்றி:www.tamilnet.com/tamil

## கூரை எரித்தவர்களும் கூட நின்று....




ஓகஸ்ட் 31 ஆர்ப்பாட்டத்தின் போது

கூரை எரித்தவனும் கூட நின்று தண்ணீர் ஊற்றிய கதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

யாழ்ப்பாணத்தில் இருந்து தற்போது வெளிவரும் ஒரே ஒரு தினசரியான உதயன் பத்திரிகைக் காரியாலயம் மீது ஒகஸ்ட் 21ம்திகதி கிரனைட் தாக்குதல் நடாத்தப்பட்டதை தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அவ்வாறு தான் எண்ண வைக்கின்றன.

ஒகஸ்ட் 21ம் திகதி இரவு உதயன் காரியாலயத்தின் பின்புறமாக இரண்டு கிரனைட்டுகள் வீசப்பட்டிருக்கின்றன. இச்சம்பவம் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவித்த உதயன் ஆசிரியர்களுள் ஒருவரான வித்தியாதரன் 'அரச படைகளோ, விடுதலைப் புலிகளோ இத்தாக்குதலை மேற்கொள்ளவில்லை. தமிழ்க்குழு ஒன்று தான் இதனை மேற்கொண்டிருந்தது' என்று தெரிவித்திருந்தார்.

என்ன ஆச்சரியம் மறுநாள் யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லாவித தமிழ் இயக்கங்களும் - கூட்டணி உட்பட இத்தாக்குதலைக் காரசாரமாகக் கண்டித்து பத்திரிகை அறிக்கைகளை வெளியிட்டிருந்தன.

தாமே கருத்து சுதந்திரத்தின் காவலர்கள் என்னுமாப்போல் இருந்தன இந்தக் கட்சிகளுடைய அறிக்கைகள்.

கூரை எரித்தவன் கூட நின்று தண்ணீர் ஊற்றுகிற கதை இப்போது புரிகிறதா?

யார் அந்தக் கூரையை எரித்தது?

புலிகளுக்கு மாற்றாக திட்ட வட்டமான கொள்கையையும், அமைப்பு பலத்தையும், திறனையும் கொண்டதாகத் தம்மைத் தாமே கூறிக் கொள்ளும் இந்த இயக்கங்களால் அந்தக் கிரனைட்டுக்களை வீசியது யார் என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. யாழ்ப்பாணம் தமது கட்டுப்பாட்டில் தான் இருப்பதாகக் கூறும் படையினரும், தமக்குத் தெரியாதெனக் கையை விரித்து விட்டார்கள்.

வன்னிக் காட்டுக்குள் பிரபாகரன் கருணாவுக்கு அடுத்த தாக்குதலுக்கான உத்தரவை எப்போது கொடுத்தார்? எங்கு வைத்துக் கொடுத்தார் என்றெல்லாம் "எக்ஸ்றே" கண்களால் பார்த்தெழுதும் தினமுரசோ தமிழ்க்கட்சி ஒன்று கிரனைட் வீசியது என்ற சிறு குறிப்புடன் நிறுத்திக் கொண்டு விட்டது.

புளொட்டின் உப தலைவர் மாணிக்கதாசன் மட்டும் இது ஈ.பி.டி.பியினரின் வேலை. திட்டமிட்டு ரெலோவை மாட்டிவிட ஈ.பி.டி.பி. இந்தச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தியுள்ளதென தமது புலனாய்வு அறிக்கை தெரிவிப்பதாக ஈ.பி.டி.பி. மீது குற்றம் சாட்டியிருந்தார். ஆயினும், ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் ஜெகன் இதனைத் தம் மீது புளொட் சுமத்தும் அபாண்டமான பழி என மறுத்துள்ளார்.

உதயன் ஆசிரியர்கள் ஒருவரான வித்தியாதரனின் கூற்றுப்படி யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்க்கட்சிகளான ஈ.பி.டி.பி., ஆ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ரெலோ ஆகியவற்றுள் ஒன்று தான் இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கவேண்டும். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரைக் கேட்ட போது அவர் சொல்கிறார்: இந்தத் தமிழ்க்குழுக்களிடையே பெயர் மட்டும் தான் வித்தியாசம். அவர்களுடைய செயற்பாட்டுகளில் பெருமளவு வேறு பாடு கிடையாது. எழுதுகிற சுதந்திரத்தை, அதை வெளிப்படுத்துகிற சுதந்திரத்தை, அதை மதிக்கிற பக்குவத்தை அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு தான் இந்தக் கட்சிகள் பேசுகிற ஜனநாயகத்திற்கு அர்த்தம் இருக்க முடியும். அதுவரை அவர்கள் பேசும் ஜனநாயகம் அவர்களுக்கு மட்டுமானதாக அவர்களது செயல்களை நியாயப்படுத்துவதாக மட்டுமே இருக்க முடியும்.

எனவே, இதனை வலியுறுத்தும் வகையிலும், உதயன் மீதான தாக்குதலைக் கண்டித்தும், நாம் ஒகஸ்ட் 31ம் திகதியிலிருந்து இரண்டு மணி நேரம் ஆர்ப்பாட்டம் செய்தோம். யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் அமைப்பு உட்பட பல்வேறு அமைப்புகளும் எமக்கு ஆதரவளித்தன.

படையினர் மட்டும் தங்களுடைய ஜனநாயகப்படி நாம் ஆர்ப்பாட்டம் செய்ய இருந்த நேரத்தில் வர்த்தகர்களும் கடைகளைப்பூட்டி எமக்கு ஆதரவு தெரிக்க முனைந்த போது கடைகளைப் பூட்ட அனுமதி மறுத்து விட்டார்கள் என்றார்.

கூரை எரிப்பவர்களுக்கு கொள்ளி எடுத்து கொடுப்பவர்கள் அல்லவா அவர்கள்.

ஜனநாயகமாவது மயிராவது.

அது அவர்களுக்கு மட்டுமேயானதல்வா?

மற்றவர்களுக்கேது?

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன் . இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப்பதிவு : பிறின்ற் இன். இல. 07, கெகட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 31.08.1999